பரீட்சையின் பெயர் : சிறப்புக்கலை இறுதி வகுப்பு

கல்வியாண்டு : 1980/81

சுற்றறிக்கை : C-727

பாடம் : தமிழ்

தலைப்பு :

பாவலர் துரையப்பா பிள்ளை - சோமசுந்தரப் புலவர் ஆகியோர் கவிதைகளிற் பிரதான நோக்கு

நன்றியுரை

பாவலர் துரையப்பாபிள்ளை – சோமசுந்தரப்புலவர் ஆகியோர் கவிதைகளிற் சமூதாயநோக்கைப் பற்றிய ஆய்வினை மேற்கொள்வதற்கான கருப்பொருளைத் தந்தும், வேண்டிய ஆலோசனைகளை உடனுக்குடன் வழங்கியும், ஆக்கமும் ஊக்கமும் அளித்தும், இவ்வாய்விற்குத் தேவையான நூல்களைத் தந்துதவியும், எழுதிய கட்டுரையினை மேற்பார்வை செய்தும், திருத்தங்கள் செய்தும் பலவகையிலும் உதவி புரிந்த எனது மதிப்புக்குரியவரும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளருமான திரு. சி. நில்வேதாதன் அவர்களுக்கு முதற்கண் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இக்கட்டுரை ஆய்விற்கு ஆலோசனைகள் வழங்கியும், நூல்களைத் தந்துதவியும் உற்சாகம் தந்த எனது மதிப்பிற்குரியவர்களும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர்களுமான திரு. க. அருணாசலம், திரு. து. மகேசுவரன், யாழ்/வளாகத் தமிழ்த்துறை விரிவுரையாளரான திருமதி. க. சின்னையாவிற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இவ்வாய்விற்கு யாழ்/வளாக நூலகத்தினைப் பயன்படுத்த அனுமதி வழங்கியும் வேறுவகையிலே தமது நூல்கள் பலவற்றைத் தந்துதவியும் ஊக்கமளித்த யாழ்/வளாக நூலகப் பொறுப்பாளர் திரு. ஆ. சிவநேசச் செல்வனுக்கும் எனது நன்றி உரித்தாகுக. அத்துடன் இக்கட்டுரை ஆய்விற்குத் தேவையான நூல்களைப் பார்வையிட உதவி செய்த பேராதனைப் பல்கலைக்கழக நூலக சிரேஷ்ட நூலக அதிபர் திரு. சி. முருகேசன் அவர்களுக்கும், வேறுவகையில் உதவிசெய்த ஏனையோர்க்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

பொருளடக்கம்

முதலாம் அத்தியாயம் :

ஈழத்துத் தமிழ்க் கவிதை இலக்கியத்திற் பாவலர் துரையப்பாபிள்ளை – சோமசுந்தரப் புலவர் ஆகியோரது முயற்சிகள்.

அ: ஈழத்திலே தமிழ்க் கவிதை இலக்கிய வளர்ச்சி.

ஆ: பாவலர் துரையப்பாபிள்ளை – சோமசுந்தரப்புலவர் ஆகியோரது காலப்பின்னணி.

இ: கவிதை இலக்கியத்துறையிற் பாவலர் துரையப்பாபிள்ளை – சோமசுந்தரப் புலவர் ஆகியோரது பங்களிப்பு.

சான்றுதாரம்.

இரண்டாம் அத்தியாயம் :

பாவலர் துரையப்பாபிள்ளை – சோமசுந்தரப்புலவர் ஆகியோரது கவிதைகளிற் சமுதாயம்.

அ: சமூகமும் இலக்கியமும்

ஆ: நாடு

இ: மொழி

ஈ: அரசியல்

உ: பொருளாதாரம்

சான்றுதாரம்

மூன்றாம் அத்தியாயம் :

பாவலர் துரையப்பாபிள்ளை – சோமசுந்தரப்புலவர் ஆகியோரது கவிதைகள் பிரதிபலிக்கும் சமூகப் பிரச்சனைகளும் சீர்திருத்தமும்.

அ: சமுதாயச் சீர்திருத்தம்

ஆ: பண்பாடு

இ: பெண்ணுரிமையும் சீதனப்பிரச்சனையும்

சான்றுதாரம்

நான்காம் அத்தியாயம்:

பாவலர் துரையப்பாபிள்ளை – சோமசுந்தரப் –
புலவர் ஆகியோர் கவிதைகளின்
திப்பீட்டாய்வும் – முடிவுரையும்.

முகவுரை

எழுத்துத் தமிழ்க்கவிதை வளர்ச்சிப் போக்கினை மேலோட்டமாகத் நோக்கும் போது மூன்று தெளிவான கூட்டங்களை நாம் அடையாளம் காணலாம். ஆரம்பத்திலே தோன்றிய சமயச் சம்பந்தமான பாடல்கள், விடுதலைக் காலம் வரையிலான தமிழ்த் கவிஞைகள், விடுதலைக்குப் பின்பு தோன்றிய தமிழ்க்கவிதைகள் என்பனவே அவையாகும்.

முதற்கூட்டமான எழுத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றினை நோக்கின், எழுத்துப் புத்தகத்தைவரை இயற்றிய சில தனிப்பாடல்களுடனேயே முதன் முதல் தோற்றம் பெற்ற - தினைக் காணமுடிகின்றது. இதன்பின்பு தோற்றம் பெற்ற நமக்குக் கிடைத்தும் கவிதைகள் யாவும் யாழ்ப்பாணக் கூடா நாட்டிலே வாழ்ந்த புலவர்களால் இயற்றப்பட்டனவையே. இக்கவிதைகளும் சமயம், மரபுரை, நோதிடம், வைத்தியம் கூறும் கவிதைகளாகவே தோன்றின. இவையாவும் பதினெண்ணும் நூற்றாண்டிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் எழுந்தனவையே. கிறுஸ்தவச் சமயத்தின் சமயம் முக்கியத்துவம் பெறவே அக்கால நூல்களும் சமய நூல்களாகவே பெரும்பான்மையும் தோன்றின. எழுத்தறிந்திய தமிழ்நாட்டு பண்புகள் பிரச்சினைகள் என்பன இக்காலத்திற் கவிதையின் பொருளாக அமையலாயின.

அடுத்த கூட்டமான விடுதலைக்காலம் வரையிலான கவிதைகளில் ஆறுமுகநாவலர் திருவருட்பா போன்றவைகளின் தாக்கத்தைத் தொடர்ந்திருந்தன. தனிமனித பிரச்சினைகள் பாடற் பொருளாக அமையத் தொடங்கின. எனினும் மூன்று முதன்மைப் பண்புகள் மாற்றமின்றிக் கையாளப்பட்டன. இக்காலகட்டத்தில் மு. கதிரேசன்செட்டியார், கா. சுப்பிரமணிய பிள்ளை, தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, கா. சோமசுந்தரப் புலவர்,

மொழி பிறந்தியா, சின்னகம் குமாரசுவாமிப் புலவர் போன்றோர் ஆக்கங்கள் குறிப்பிடத்தக்கன. அடுத்த காலகட்டம் பகுதி சுதந்திரத்தின் குரல் ஒலிக்கும் மக்கள் விழிப்புணர்ச்சி பெற்ற தீர்த்தேந்தக் காலப்பகுதியாகும். இந்தக் காலப்பகுதியை கவிதையின் மறுமலர்ச்சிக் காலப்பகுதி என்றும் குறிப்பிடலாம்.

இரண்டாவது காலகட்டப் பகுதியில் வாழ்ந்த கவிஞர்கள் பழமைக்கும் - புதுமைக்கும் ஓர் இணைப்புப் பாலமாக விளங்கினர் எனலாம். கவிதை வளர்ச்சிப் போக்கில் ஓர் திருப்பு முனையையும் அதே சமயம் பழமையையும் பேணி நின்ற காலம் இக்கவிஞர்கள் காலமாகையால், இக்கவிதை மரபு மாற்றத்தினையும் போக்கினையும் துல்லியமாக விளங்கும் பொருட்டும், சமுதாய அம்சங்கள் கவிதைப் பொருளாக அமையும் பண்பை அறிதற் பொருட்டும், சுதந்திரத்திற்குப் பிற்காலப் புதுக்கவிதை மரபிற்கு [மறுமலர்ச்சிக் கவிதை] கால்கோள் விழா நடாத்தியவர்கள் இக்காலக் கவிஞர்களாகவும் இக்காலக் கவிஞர்களுள் பாவலர் துரையப்பா பிள்ளை, சோமசுந்தரப் புலவர் ஆகிய இருவரது கவிதைகளும் இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வகையில் முதலாம் அத்தியாயத்தில் 'நாடகத்துத் தமிழ்க்கவிதை' நிலைபெறும் பாவலர் துரையப்பா-பிள்ளை, சோமசுந்தரப் புலவர் ஆகியோரது முயற்சிகளும் என்ற தலைப்பின்கீழ்; 'நாடகத்துத் தமிழ்க்கவிதை' நிலைபெறுதலின் தோற்றம், வளர்ச்சிபற்றியும், பாவலர் துரையப்பாபிள்ளை - சோமசுந்தரப்புலவர் அவர்களது சமூகப்பின்னணி பற்றியும், கவிதை நிலைக்கும் துறையில் அவர்களது பங்களிப்பு பற்றியும் விரிவு விளக்கப்பட்டுள்ளது. இரண்டாம் இயலில் சமுதாயம் என்பதனை ஒரு வரையறைக்குட்படுத்தி அமைப்பியல், நாடு, மொழி, பொருளாதாரம் என்பவற்றின் கூட்டமைப்பே சமுதாயம் எனக் கொண்டு பாவலர் துரையப்பாபிள்ளை - சோமசுந்தரப் புலவர் அவர்களது கவிதைகளில் அவை பிரதிபலிக்கப்படும் தன்மை விரிவுக்-

கோடிட்டுப்பட்டுள்ளது. மேலும் அத்தியாயத்தில் முதலாயச் சீர்திருத்தம் என்பதற்கு வரலாற்றுக்காலம் அளித்து, முதலாயச் சீர்திருத்தத்தில் இலக்கியத்திற்குரிய பங்களிப்பைக் காட்டிச் சீரழிந்த பண்பாடு [சமூகச்சாரம்] பெண்ணுரிமை சீரழிந்தது, சாதிப்பிரச்சனை போன்ற சமூகச் சீர்கேடுகள் போன்றவற்றைப் பாவலர் தனிநாயகம் அடிகள் - சோமசுந்தரப் புலவர் அவர்களது சமூகத்தளம் எவ்வகையில் பிரதிபலிக்கின்றன என்பது விருத்துக் காட்டப்பட்டுள்ளது. இவ்வத்தியாயத்தில் சமூகச்சாரம் என்ற பகுதியில் மக்களது தொழில், கல்வி, பழக்கவழக்கங்கள், கடன் என்பவற்றை இவர்களது கவிதைகள் பிரதிபலிக்கும் தன்மை விருத்துரைக்கப்பட்டது.

இறுதியாகச் சமூகம் அத்தியாயத்தில் இருவரது கவிதைகளும் ஒப்பிடப்பட்டு, அவர்களது கவித்துவ வளமும், மனோபாவ உணர்ச்சியும் ஆராயப்பட்டுத் தமிழ்க் கவிதை வளர்ச்சியில் அவர்களது பங்கு பற்றி ஆராய்வதாகவும் இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

குறிப்பு:

இக்கட்டுரையில் எளிமை கருதி பாவலர் தனிநாயகம் அடிகள் - சோமசுந்தரப் புலவர் என்ற பெயர்கள் முறையே பாவலர், புலவர் எனக் குறியிடப்படுகின்றன.

முதலாம் இயல்

முதலாம் அத்தியாயம்

ஈழத்துத் தமிழ்க்கவிதை இலக்கியமும் பாவலர்-துரையப்பாபிள்ளை – சோமசுந்தரப் புலவர் ஆகியோரது முயற்சிகளும்

அ: ஈழத்திலே கவிதை இலக்கிய வளர்ச்சி:

இயல், இசை, நாடகம் அகிய மூன்று இயல்களும் சேர்ந்ததே இலக்கியம். சமுதாயவாழ்க்கை-யின் ஒரு வெளிப்பாடாகவே இலக்கியம் தோன்றுகின்-றது. எனவே சமுதாய வளர்ச்சிப் போக்குகளை இலக்கியப்-போக்குகளே நிர்ணயிக்கின்றன எனலாம். நம் அறிவுக்கு எட்டிய காலத்திலிருந்து இற்றைவரை கிடைத்த இலக்கி-யங்கள் யாவும் அவ்வக்காலச் சமுதாயத்தினையே பிரதிப-லிப்பதைக் காணமுடிகின்றது. இந்த வகையிற்றமிழகத்-திலே தோன்றிய இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை நடைமுறைகளைச் சித்தரித்து நிற்பது போல், ஈழத்திற்-றோன்றிய இலக்கியங்களும் ஈழத்தவரின் சமுதாய நிலைமை-யைச் சித்தரித்திருக்கின்றன எனலாம்.

ஈழத்துப் பூதந்தேவனாரை முதற் புல-வராகக் கொண்ட ஈழத்துத்தமிழ்ச் செய்யுள் இலக்கியம் இன்று அதிக புலவர்களால் விரிவாக்கப்பட்டுப் பெரும்பரப்-பினை உடையதாக விளங்குகின்றது. யாழ்ப்பாணத்துத்-தமிழ் வேந்தர் ஆட்சிக் காலத்திலிருந்து இன்றுவரை எண்ணற்ற செய்யுள் நூல்கள் எழுந்தன. 'தமிழ் புரூட்டாக்' 'பாவலர் சரித்திர தீபகம்' 'தமிழ்ப்புலவர் சரித்திரம்' 'இலக்கை-யில் இன்பத்தமிழ்' 'ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' 'ஈழநாட்டுத் தமிழ்ச் சுடர்மணிகள்' போன்ற நூல்கள் ஈழத்துப் புலவர்களையும் அவர்களது ஆக்கங்களையும் எடுத்-துக் காட்டுகின்றன.[1] இந்நூல்கள் தமிழ்ப் புலவர்களின் சிறுக்கமான வாழ்க்கை வரலாற்றையும் அவர்கள் எழுதிய

நூல்கள் பற்றிய குறிப்புக்களையும், ஈழத்தவரின் தமிழ்த் தொண்டு, அதில் அவர்களின் பங்கு, முல்லைக்களின் தமிழ்த் தொண்டு போன்ற தகவல்களையும் தருகின்றன.[2] அண்மையில் ஈழத்து இலக்கியத்துறை முயற்சிகள் பற்றிய மதிப்பீடுகள் பல வெளிவந்துள்ளன. ஆ. சிதாசிவத்தின் 'ஈழத்துத் தமிழ்க் கணினிக் களஞ்சியம்' கா. சிவத்தம்பியின் 'ஈழத்திற்றமிழ் இலக்கியம்' ஆகிய நூல்களும்; க. கைலாசபதி, க. கணபதிப் பிள்ளை, வி. செல்வநாயகம், சு. வித்தியானந்தன், ஆ. வேலுப் பிள்ளை, சி. தில்லைநாதன், பொ. பூலோகசிங்கம், சி. மௌனகுரு, மெ. மெ. உவைஸ் போன்றோரது கட்டுரைகளும் இவ்வகையில் அடங்குவனவாகும்.

ஈழத்துத் தமிழ் இலக்கியம்பற்றி இத்தகைய மதிப்பீடுகள் வெளிவந்த போதும், இன்றுவரை பூரணத்துவமான இலக்கிய ஆய்வு நூலொன்றும் எழுதப்படவில்லை என்றே கூறலாம். காரணம் இலக்கிய ஆக்கங்கள் பரவும் புலவர்களிடத்து ஏட்டுப்பிரதியாகவே முடங்கிக் கிடப்பதும், அவை நூல்வடிவு பெறுதலரிது அவற்றைப் பெறுவதில் ஏற்படும் சங்கடங்களும் எனலாம். எனினும் மேலைநாட்டுக் கவிஞர்களின் கவிதைகள் ஆராயப்பட்டுள்ளன போல் ஈழத்தறிஞர் சிலரின் ஆக்கங்களும் ஆராயப்பட்டுள்ளன.[3]

வரலாற்றுக் கண்ணோட்டம்

ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பு ஐந்து நூற்றாண்டு காலத் தொடர்ச்சியான பாரம்பரியத்தை உடையது. சமூக, சமய கலாச்சார நிலைமைகள், அவற்றை ஊக்குவித்த அரசியற் பொருளாதாரக் காரணிகள் ஆகியவற்றின் வரலாற்று ரீதியான விளக்கம் இவ்விலக்கிய வரலாற்று விளக்கத்திற்கு உதவி புரிவதாகும். பதினெழாம் நூற்றாண்டுக்கு முன்பு வரலாற்றுத் தகவல்கள் அரிதாகவே கிடைத்துள்ளன.[4] இக்குறைபாடு இலக்கிய வரலாற்றினையும் பாதிக்கவே செய்தது. எனினும் பதினைம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே

தமிழ் இலக்கிய முயற்சிகள் தொடர்ச்சியாக நடைபெற்-
றிருப்பதை அவதானிக்கலாம். சிதம்பரப் பூதந் தேவனாரின்
தனிப்பாடல்கள், போசராச பண்டிதரின் 'பரராசசேகரம்'
எனும் ஜோதிடநூல் என்பவற்றின் தோற்றத்தின் பின்பு
தோன்றிய இலக்கியங்கள் யாவும் யாழ்ப்பாணப் புலவர்களா-
லேயே இயற்றப்பட்டன. ஏனைய தமிழ்ப் பகுதிகளில் பதி-
னேழாம் நூற்றாண்டின் பின்பே இலக்கியங்கள் தோன்றின
எனலாம்.[5]

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணம்
தமிழ் மன்னர்களால் ஆட்சிபுரியத் தொடங்கிய பின்பே
தமிழ் இலக்கியம் பல தோன்றின எனலாம். இவற்றைச்
சேகராச சேகரன் காலத்தன, பரராசசேகரன் காலத்தன,
அவற்றிற்குப் பிற்பட்ட காலத்தன எனப்பிரிக்கலாம்.[6] இந்
நூற்றாண்டிலிருந்து பதினேழாம் நூற்றாண்டுவரை எழுந்த
இலக்கியங்கள் யாவும் சமயசம்பந்தமானதாகவும், அரசர்
களது வரலாறு, வைத்தியம் ஜோதிடம் முதலானவற்றையும்
விளக்குவனவாக இருப்பதையும் 'தக்கிண கைலாச புராணம்'
'திருக்கரசைப் புராணம்' 'கைலாயமாலை' 'பரராசசேகரன் உலா'
'சேகராத சேகரம்' என்பவற்றிற் காணலாம். நிலவுடமைச்
சமூகங்களின் சிருஷ்டிகளிடை சமயமே அதிகம் முக்கியத்-
துவம் பெற்றமை சமயசம்பந்தமான பாடல்கள் அதிகம்
எழக் காரணமாகும். இந்நிலைமை இருபதாம் நூற்றாண்டு
நடுப்பகுதிவரை தொடர்ந்திருந்தது.

பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டு-
களில் இலங்கையில் ஐரோப்பியர் வருகையும், அவர்தம்
ஆதிக்கமும், கத்தோலிக்க மதமாற்றும் முயற்சிகளும் சமூகசிந்தி-
யாக மாற்றத்தை ஏற்படுத்தின. இம்மாற்றம் சமயத்
சார்ந்ததாகவே இருந்ததனால் இக்காலத்திற்றோன்றிய நூல்-
களும் சமயம் சார்ந்ததாகவே இருந்தது. எடுத்துக்
காட்டு 'ஞானப்பள்ளு' 'அச்சியாகப்பர் அம்மானை', ஞானஉந்த

புராணம்' போன்றன. ஒரு வர்க்கத்தினரின் பிரச்சாரம் போல் அவ்வர்க்கத்தினருக்கு எதிரான போட்டியும், பிரச்சாரமும் நடை பெறுவது இயற்கை. அதற்கேற்ப கிறிஸ்தவமதப் பிரச்சாரங்கள், இலக்கியங்கள் ஒரேக்கத்திற்றேன்ற மறுபக்கத்தில் அதற்கெதி-ரான சின்னத்தம்பிப் புலவரின் 'மறைசையந்தாதி', 'பரராசவிலை-கர் பள்ளு', கூடலழகைத் தம்பிரானின் 'நல்லூர்க் கலிவெண்பா' வரபண்டிதரின் 'சிவராத்திரி புராணம்' போன்றனவும் எழுந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கி லேயரின் ஆதிக்கத்தின் விளைவாகப் புதிய மத்தியதரவர்க்கம் தோன்றியது. இவர்களிடையே ஏற்பட்ட கிறிஸ்தவ மதமாற்-றத்தின் தாக்கம் இலக்கியங்களிலும் பிரதிபலித்தன. ஆங்கிலேய மிசனரிமார் அறிமுகப்படுத்திய அச்சேயந்திரத்தின் பாவிப்பும், வரை-நடையும்பிரயோகமும் செய்யுள் இலக்கியப் போக்கிற் புதிய தொரு பாதையை அமைத்தது. இதன் தொடர்ச்சியாக கிறிஸ்-தவ, முஸ்லிம், இந்துமதச் சார்பான பத்திரிகைகள் வெளியா-யின. இந்நூற்றாண்டில் இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி-யின் போது மதம்பரப்பும் அவர்தம் தீவிர முயற்சிகள் சமயத்-துறையிலே பரந்துபட்ட ரீதியில் விழிப்புணர்ச்சி ஏற்பட வழிவகுத்தன. சிறப்பாக நாவலர் அவர்கள் காலத்திலே ஏற்-பட்ட இத்தனைய நிலைமையின் ஒரு வெளிப்பாடாகச் சமயஞ் சார்ந்த இலக்கியங்கள், பிரபந்தங்கள், பதிகங்கள் பெருவர-வினதாக எழுந்தன.

நாவலர் வழியைத் தொடர்ந்து சிவசுவாமிப் புலவர், மயில்வாகனப்புலவர், செல்லப்பா, சுப்பிரமணியர், பெரிய-தம்பிப்பிள்ளை முதலியோர் காணப்படுகின்றனர். அருள்வாக்கி-அப்துல் காதிறுப்புலவர், அப்துல் நகுமான் போன்றோரின் 'சந்தத் திருப்புகழ்', 'நொண்டி அகிதாக் கும்மி' ஆகியனவும், சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், சி. வை. தாமோதரம்-பிள்ளை ஆகியோரது அருட்பாக்களும் எழுத்துத் தமிழ்ச் செய்யுள் இலக்கியத்திற் குறிப்பிடத்தக்கனவாம்.[7]

"கல்வி கேள்விகள் இல்லாதவர்கள் கடவுளை அறிந்து உய்யமாட்டார்கள்" என்பது நாவலர் கூற்று. இதனடிப்படையில் அகராதிகள் உரைக்கொத்துக்களை அதிகம் எழுதிய நாவலரின் செய்யுள் இலக்கிய வழியைத் தொடர்ந்து வந்த 'தணிகைபுராணம்' 'திருக்கரணைப்புராணம்' 'கதிர்காமபுராணம்' 'கந்தசஷ்டி புராணம்' போன்ற தலங்களின் மான்மியத்தையும், மான்மியத்தையும் விரித மதிமையையும் எடுத்துக் கூறுவன. சு. வைத்திய விங்கபின்னை இயற்றிய 'சாதிநிர்ணய புராணம்' சாதிமுறைபற்றியும், கீ. காசிநாதப்புலவர் இயற்றிய 'தாலபுராணம்' பனைமரமையும், வே. இராமலிங்கம் இயற்றிய 'கோட்டுப் புராணம்' நீதிமன்றங்களில் நடைபெற்ற உரிமை பிரதிவாதி - வாதிகளுக்கிடையே நின்று சாரணும் கோட்டுப்புக்கதைச் சாடியும் பாடியுள்ளனர். 'கனகிபுராணம்' அக்காலச் சமூக இழிசெயல்களை அங்கதச் சுவையுடன் காட்டுகின்றது.

இருநூற்றாண்டின் பிற்பகுதி தொடக்கம் பழந்தமிழ்ச் செய்யுள் வடிவங்களைப் பின்பற்றிப் பழமைக்கும் - புதுமைக்கும் இடையிலான பாலமாக நவகவி பாரதியார், விபுலானந்த அடிகளார், கணபதிப்பின்னை, நல்லதம்பி, செல்லையா, பாவலர் துரையப்பாபின்னை, சோமசுந்தரப் புலவர் போன்றோர் விளங்கினர். இருபதாம் நூற்றாண்டுவரை எழுந்த தமிழ்க் கவிதைப் போக்கினைப் பார்க்கும் போது சமுதாயத்திற்கேற்ற தனித்துவப் பண்புகள், பிரச்சினைகள் போன்ற சுவடிதையில் நன்கு பிரதிபலிக்கப்படவில்லை என்றே கூறலாம். எனினும் இருநூற்றாண்டின் காலாந்தரத்தன்மை முற்பகுதியில் சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்க்க முயலும் பிரக்ஞை பூர்வமான கவிதைகள் எழுந்தன என்றே கூறலாம். பாவலர் துரையப்பாபின்னை, சோமசுந்தரப் புலவர், சிவனடியான், பிதாம்பரம் போன்றோர் கவிதைகள் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை வலியுறுத்திச் செல்வதனைக் காணலாம். படுமையையும், புதுமையையும் தம் கவிதைமீது கலந்து புதியதொரு சமூகம் தானமைத்தனர். அதற்காகப்

புரட்சிப் போக்கினைத் தவிர்த்து மிதவாதப் போக்கினை ஏற்றுக்கொள்ளச் செய்து, நன்னெறிச் சமுதாயத்தினைத் தோற்றுவிக்கவும், நீதி நூல்கள் பெரும்பான்மையாகப் பெருகிக் காணப்படவும்; இவர்கள் கவிதை இலக்கியம் முழுமையும், ஏறக்குப்பணிகள் முழுமையும் அரங்கேற்றினர். 1950 களின் பின் தோன்றிய புதுக்கவிதை மரபிற்கு கால்கோள் விழா கண்டாற்றிய இவர்கள் வழியைத் தொடர்ந்து மகாகவி, நீலாவணன், முருகையன், காரைதீவான், சாவற்கேடியூர் கனகராஜன் போன்றோரின் ஆக்கங்கள் கவிதைத் துறையைப் புதுவழியில் வளர்த்தினவெனலாம்.

ஆ: பாவலர் துரையப்பாபிள்ளை – சோமசுந்தரப் புலவர் ஆகியோரது காலப்பின்னணி

இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமூக மாற்றம் இக்காலச் இலக்கியங்களை அதற்கு முற்பட்ட கால இலக்கியங்களிலும் இன்று வேறுபடுத்துகின்றது. பிரித்தானியர் வருகையும், அவர்கள் புகுத்திய வர்த்தகப் பொருளாதார முறையும் காரணமாக நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு சிதைவடைய, முதலாளித்துவ சமூக அமைப்பும், அதன் விளைவான நகரமய மாதலும் தோன்றின. நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் சமயமே இலக்கியத்தின் உள்ளடக்கமாக இருக்க சாதாரண மனிதனும் அவன் வாழ்க்கை நெருக்கடிகளும் இலக்கியத்திற்கு அப்பால் இருந்தன எனலாம். முதலாளித்துவ வளர்ச்சியுடன் தனிமனித பிரச்சனைகள் முக்கியத்துவம் பெறத் தொடங்கவே, இன்றைய இலக்கியம் அவன் வாழ்வை பொருளாகக் கொள்வது தவிர்க்க முடியாததாகி விட்டது. இலக்கியம் சமய நெறியினின்று சமூக நெறிக்கு மாறியது. இந்நெறியைத் தமிழகத்தில் முன்னின்று நடாத்திய சில பெரியோர்கள் போல, ஈழத்திலும் சில பெரியவர்கள் இந்நெறியை முன்னின்று நடத்தினர் எனலாம்.[10]

சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாக மாந்நிரமண்நிச் சமூகச் சிந்தநைகளுக்கும், பிரச்சனைத் தீர்வுக நெக்கும் முன்னோடியாக விளங்கிய பாவலரும், புலவரும் சமகா லத்தவர்கள். "தக்கார் தகவிலர் என்பதவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்பதிலுள்ள தக்கார் என்பதற்கு எடுத்துக் காட்டாய் விளங்கியவர்கள் எனலாம். பெற்றதாயும் பிறந்த பொன்நாடும் பெருமை பெற வாழ்ந்த பாவலர் 1878 ஆம் ஆண்டு ஐப்பசி திருதாம் திகதி அருளம் பலம் – தங்கம்மா தம்பதிகளுக்குப் புத்திரராக அவதரித்தார்.[11] இவர்களையிலை சாயாதிக்கம் அதிகம் ஆங்கிலேய ஆட்சி தன நோக்கியலைக்கு வெவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டு திறம்பிடித்-

தத்துவத்தோ அவ்வாறே இலங்கையின் முன்னேற்றத்திற்கும், சுதந்திரத்திற்கும், வித்திட்ட பெரியோர்களின் தோற்றத்திற்கும் அத்தூற்றுக்கண்டு நிறுவியிடத்துக்குதாகும். இந்தப் பெரியோர் வரிசையில் யாழ்ப்பாணத் தமிழரின் விழிப்புணர்ச்சிக்கு வித்திட்டு பாவலர் தோன்றினர் எனலாம்.

பாவலர் தமது ஏழாவது வயதிலே தெல்லிப்பளை மிசனரிமாரின் தமிழ்ப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியை முடித்த பின்பு யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்கல்வியைப் பெற்றார். அங்கிருந்து வெளியேறும் போது கிறிஸ்தவக் கொள்கைகளைப் பின்பற்றிக் கிறிஸ்தவராக வெளியேறினர். பாவலர் தொடர்ந்து சிறிது காலம் கிறிஸ்தவராக இருந்தமையே புலவரைவிட அவர் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களில் அதிக ஆர்வம் கொண்டமைக்குக் காரணமாகும் எனலாம். கொம்பிரிட்ஜ் சர்வகலாசாலையின் உயர்தர பரீட்சைத் தேர்வில் சித்தி எய்திய பின்னர் முதன் முதல் ஆசிரியர் கடமை ஏற்றார். அவர் ஆசிரியராக இருக்கும் போதே அவரது பொதுசன சேவைக்கு முயற்சிகள் ஆரம்பமாகிவிட்டதை எனலாம். கொழும்பில் ஆசிரியராகக் கடமையாற்றி நாடு திரும்பிய பாவலர் பிரித்தானிய குடியேற்ற நாடுகளில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி இலங்கையிலும் பரவக் கண்டார். இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தில் ஈடுபட்டவரும் ஈடுபடத் தொடங்கினர். இந்திய வங்காளப் பிரிவினையுடன் சதேசிய இயக்கங்கள் பரிணமிக்கத் தொடங்கின. கோபால கிருஷ்ண கோகலே, பாலகங்காதர திலகர், சித்தரஞ்சன்தாஸ், சுரேந்திரநாத் பானர்ஜி போன்றோர் அரசியல் விழிப்புணர்ச்சியில் மட்டுமல்ல பொருளாதார வளர்ச்சியிலும் சிறிகக் கட்டுப்பாடுகள், சாதிமத வேறுபாடுகளைக் களைந்தெறிவதிலும் முன்னின்று உழைத்தனர். சுவாமி விவேகானந்தர், சுவாமி இராமகிருஷ்ணர் போன்றோரின் போதனைகள் சாதியபேதத்தை மறுத்து சன்மார்க்க நெறியைக் காட்டியுள்ளன. இந்த வழியிலும் அந்நியராட்சியை அகற்றிச் சுதந்திரத்தை நிலை நாட்ட முயன்ற இந்திய மக்களை

வாழ்ந்தவருக்கும் முன்மாதிரியாக விளங்கினர் எனலாம்.

இலங்கையில் சுயாட்சியை நிலைநாட்ட என்ன கொண்ட தலைவர்களது கூட்டமைப்பால் 'இலங்கைத் தேசிய காங்கிரஸ்' எழுந்தது. சேர். பொன். இராமநாதனின் தலைமையில் இயங்கிய இச்சங்கம் முற்போக்குச் செயல்களுக்கும், முக்கிய அரசியல் வழிவுக்கும் இடமாக இருந்தது. இவரைத் தொடர்ந்து அங்கிலோ இடையை எதிர்ப்பதில் சேர். பொன். அருணாசலம், சேர். ஜேம்ஸ். பீரிஸ், சேர். பாரன். இயதிலகா, டி. ஆர். விஜயவர்த்தனை போன்றோரும் முன்னின்றனர். பழமை போற்றும் பண்புடையாளர்களாய் இருந்தும் தேசிய விழிப்புணர்ச்சியின் விழுமியப்பு இவர்களையும் விட்டுவிடவில்லை.[13] இவர்களைப் போற் பாவலர் சிறுவயதாகவே அரசியற் பங்களிப்புச் செய்யாவிடினும், மறைமுகமாக அரசியற் போக்கினைக் கண்டித்து நாட்டிற்கு நல்லனவெனத் தாம் கருதியவற்றைச் சாடத் தவறவில்லை.

'நாகத்தாத்தா' என்றழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் 1878 ஆம் ஆண்டு நவாலி எனும் ஊரில் உள்ள நீதிச்சாமர் - இரத்தினபிள்ளை தம்பதிகளுக்குப் புத்திரராக அவதரித்தார்.[14] புலவர் தமது ஆரம்பக் கல்வியை திருநெல்வேலி ஆசிரியர் நடாத்திய தமிழ்ப்பாடசாலையில் முடித்தபின்பு தமது தந்தையிடமும், இராமலிங்கம், தாமோதரம்பிள்ளை போன்றோரிடமும் பழைய புராண நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். இவருடைய வாழ்க்கை சமய ரீதியாக கொண்டதாக இருந்தது. இவர் காலச்சூழல் இவரைச் சமயத்தின்பால் திருப்தியிருக்கலாம். சுப்பிர மணிய சிவாமிகளிடத் தன் குருவாக ஏற்றுக் கொண்டு சைவ சித்தாந்தக் கல்வியில் ஈடுபட்டார். பழமைப்பண்பில் ஊறிய இவர் வெண்பாக்களும் தமது பழம்பெரும் பாரம்பரியத் தொடர்பாட்டைக் காக்கும் கருவியாய் இருக்கவில்லை. பாவலர் போல் பழமையில் ஊன்றி நின்று சீர்திருத்தமாற்றும் கோணவிளைந்தார்.

இந்துமத வாழ்க்கைகளை நீக்கி கிறிஸ்தவ வாழ்க்கைகளை மேற்கொண்ட பாவலர் தாமும் மதம்மாறித் தமது மனைவியாரையும் மதம்மாறச் செய்தாராயினும், கிறிஸ்தவக் கொள்கைகளைக் கடைப்பிடித்து அவராற் கைவசமாகச் சொல்லுகையினின்றும் நீங்குக விலகி நின்றுபோதுமையில்லை. ஆதலாற் புலவரோ தம்மதப்பற்றின் பிரதிபலிப்பாகத் 'தைவபாலிய சிம்போதினி' எனும் பத்திரிகையை ஐந்தாண்டுகளாகத் தொடர்ந்து வெளியிட்டு அரும்பணிபுரிந்து வந்தார். அப்பர் சுவாமிகளின் சமணசைய மாற்றமே அவரைப் பின்பு அறிவுபூர்வமாக சைவசமயக் கோட்பாடுகளில் ஆழ்ந்து நிற்கச் செய்தது. அந்தவகையிற் பாவலரும் கிறிஸ்துவராக மாறி நின்ற தன்மையிலேயே தமிழகத்தின் சுதேசவுணர்வையும், அதன் நிலையையும் நோக்கையும் உணர்ந்தார் எனலாம். எனவே தான், புலவரைவிட அவர்பாடல்கள் தமிழர்ய உணர்ச்சி மிகுந்தனவாக உள்ளன எனலாம்.

தமது பதினாந்தாவது வயதிலே பாடுந்திறனை பெற்ற புலவர் 1927 ஆம் ஆண்டு புலவர் பட்டமும் பெற்றார்.[15] அவர் காலத்தில் நிகழ்ந்த சமயப் போட்டியும் அவரைச் சமயசம்பந்தமான பாடல்கள் அதிகம் பாடத்தூண்டியிருக்கலாம். ஆங்கிலேயர் ஆட்சியிற் செல்வாக்குப் பெற்ற கிறிஸ்தவ மதத்தினர் எழுத்துச் சமயங்களை வன்மையாக எதிர்த்தனர். ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவியதுடன், கிறிஸ்தவ மதத்தைப் பரப்பி வந்த உரிமல்லியன் மிஷன், அமெரிக்கன் மிஷன், சேஷாத்ரி மிஷன் சங்கங்களைச் சேர்ந்த மிஷனரிமார்கள் முதலாம் பலர் கிறிஸ்தவர்களாயினர்.[16] கல்வி, வாழ்க்கைவசதி உத்தியோகம் போன்றவற்றை பொருட்டுப் பலரைவர் மதம் மாறினர்.

இத்தகைய நிலைமைகள் எழுத்துப் புலவர்களுக்குத் தம் சமயத்தைப் பேண வேண்டும் என்ற உணர்வை ஊட்டியவை எனலாம். சபாபதி நாவலர், சங்கர பண்டிதர், முத்துக்குமார சுவாமிகள், முருகேச பண்டிதர் சிவதம்பிப் புலவர், குமாரசுவாமிப் புலவர் போன்றோர் அரிய பல உரைநடை நூல்களை உருவாக்கினர். இவர்-

கீனின் வழித்தோன்றல்களாக வந்த புலவரும் தமது காலச் சூழலையும் பண்டைய இலக்கிய மரபின் தாக்கத்தினையும் சமயசம்பந்தமான பாடல்களையே அதிகம் பாடியிருக்கின்றனர். தமது வாழ்வின் பெரும்பகுதிக் காலத்தைச் சிதேகப் பணியிற் கழித்த புலவர் தமது காலச் சூழ்நிலையின் தாக்கத்தை உணர்ந்து பழமையும், புதுமையும் கலந்த ஒரு பாணியிற் சுகிர்தை இலக்கியம் பாடித்துள்ளார்.

இ: கவிதை இலக்கியத்துறையில் பாவலர் துரையப்பாவின்னர் சோடசுக்தரப் புலவர் அதியோரது பங்களிப்பு.

கவிஞனின் உள்ளத்துணர்வுகளே கவிதையாகின்றன. கவிஞன் தன்னைச் சுற்றியுமுள்ள சூழலைப் படம்பிடித்துக் காட்டி, சமுதாயத்தைப் பிரதிபலிக்கச் செய்து, தனது கருத்துக்களைப் பரப்பி மறுமலர்ச்சி செய்து நிற்பதுண்டு. கவிஞன் உள்ளத்தை உள்ளவாங்கு பிரதிபலிக்கும் கண்ணாடியாக மட்டுமன்றி காலத்தின் கருத்தாகவும் தலைகொள்ள வேண்டும் "மக்கள் ஆக்கா மனுவேந்தர்கள் கவிஞர்கள்" என ஷெல்லி குறிப்பிட்டார்.[18] இக் கவிஞர்களை சுற்புனையிற் சில காட்சிகளைக் கண்டு, அக்கற்பனைக் காட்சிகள் நனவுகளாகி மக்களின் நடைமுறை வாழ்வில் பயன் தர வேண்டும் என்ற விழுமிய நோக்கம் உடையவராய்த் திகழ்வர் எனப் பாலசுப்ரமணியன் கூறுகிறார்.[19] இவ்வுண்மையைக் கற்பனைக் கவிஞன் பாரதியிடம் காணலாம். ரஷ்யர் சந்திர மண்டலப் பயணம் மேற்கொண்டபோது "சந்திர மண்டல வீதியில் தண்டு செலுத்தினோம்..." எனவும், இந்திய சுதந்திரம் அடையுமுன்னரே "ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே" எனவும் பாடிவிட்டுப் போனார். பாரதி வழியையொட்டியே எழுந்திற் பாவலரும் பாடிச் சென்றார்.

தமிழ்ச் செய்யுள் இலக்கியத்தின் தந்தையை நோக்கின் அது ஆரம்பத்திலே உலகியற் பண்புமிக்கதாகவும், பின்பு தமயப்பண்பு மேலோங்கப் பெற்றதாகவும், அண்மைக் காலத்தில் இருவகைப் பண்பும் முரணிநிற்கும் தன்மையதாகவும் திரும்பியதைக் காணலாம்.[20] மேலைநாட்டார் ஆட்சி செலுத்திய காலத்திலே எழுந்த இலக்கியங்கள் பெரும்பாலும் சமயத் தொடர்பற்றனவாய் விளங்கின. எனினும் பாரதியார் உலகியற் பண்பும், சமயநோக்கும் இணைந்த நூலாகும். அற்றைப்பாடலினைத் தினசரி தியும் தோறும் திருத்தொண்டர் புராணம் விளங்குகின்றது. இதனைத் தொடர்ந்து சமய இலக்கியங்கள் மேலோங்கி எழுந்தன பக்தி-

இலக்கியத்தைத் தொடர்ந்து பேரிலக்கியங்களும், பேரிலக்கி-யத்தின் பேருக்கத்திலே தலபுராணங்களும் தோன்றின. அடுத்த இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்கள் தோன்றின. இவ் இருபதாம் நூற்றாண்டின் சிறுதாயத்திற் பொருளாதார படிமுறைகள் தோன்றின. தேசாபி - தெசிலாபி என்ற பாகு-பாடு அடிமைத்தனமாக வேரூன்றியது. உழைப்பாளி அடிமையானான். இந்த நிலையிற் சாரண்டப்பட்டும் தாக்கப்பட்டும் இருந்த பல பகுதி மக்களிடையே முற்பட்ட விடுதலையார்வத்தின் விளை-வாகச் சுதந்திரம் என்றதொரு புதிய விழிப்புணர்வு பெற்ற மக்கள் வாழ்வோரு தொடர்புடைய கனவுகளிலும் புதிய திருப்பங்களையும் எல்லைகளையும் கண்டனர்கள்.[21] தமிழகத்தில் உறைந்திடந்த தமிழ்க் கவிதைத் துறையில் விழிப்பை-யும் வேகத்தையும் ஏற்படுத்திய பாரதி - பாரதிதாசன், கவிமணி முதலியவர்களின் போன்ற பாடுத்திலும் அவர்கள் படைகாலத்து-வரான பலரும், புலரும் தோன்றிச் சிறு இலக்கியப் பணி ஆற்றினர் எனலாம்.

பாரதியின் அடியொற்றி, நாலவரர்களின் நீதி வழியைத் தொடர்ந்து இலக்கியப் பணியாற்றிய இவர்-களது ஆக்கங்கள்; கவிதைகள், கட்டுரைகள், நாடகங்-களாக வெளிவந்துள்ளன. பல பிற்போக்குத்தனங்களாக இன்னும் அச்சேறாமலேயே இருக்கின்றன. தம் தாய்நாட்டைத் தேசியப் பற்றுடைய பாடலும், புலரும் ஆங்கிலேயரின் கொள்-கையில் நல்லனவற்றையும், தம்மைய வழிக் கொள்கையினையும் கடைப்பிடித்து நாட்டில் நிலவிய சமுதாயச் சீர்கேடுகளை அழிக்க முற்பட்டனர். தமிழகக் கவிஞர்கள் தெளித்து விட்ட ஆகிய உணர்ச்சிப் பாடத்தின் சிறுதுளிகள் பாலவரையும் புலவரையும் செயற்படுத்தியது எனலாம்.[22]

இவர்களது பல்வேறு ஆக்கங்களின் அடி-நாதமாக அக்காலச் சமய, சமூகப் பிற்போக்குக்களை இருந்தன. அன்று நிலவிய சமுதாயப் பிரச்சினைகள் இந்நாள் நிலவரத்தையும்-

[illegible] அணைவற்றிய கிருத்துக்களைத் தெளிவிப்பதில் திருவருக்கிடையே அடித்தளம் தொனியும் வேறுபட்டிருக்கலாம். மற்றும்வகையில் திருவருக்குள்ளும் இணைந்த கருத்துக்களே பெரிதும் நிலவி வந்திருப்பதை நாம் காணமுடிகின்றது. பாரதியைப் போன்று தேசபக்தமானம், சாதிக் கொடுமைகள், சமுதாய அநீதிகள், வெள்ளையர் நாகரிக மோகம் முதலியவற்றைப் பாலரும், புலவரும் சுண்டிக்காட்டினர். தாய்மொழி குறித்தும் ஒத்த கருத்துக்களையே வெளியிட்டனர்.

அயர்லாந்து காலத்தில் தொடர்ந்த தேசிய விடுதலைப்போர் தமிழ் மக்களின் மட்டுமன்றிச் சிங்கள மக்களையும் தட்டி எழுப்புவதாக அமைந்தது. மனிதாபிமான உணர்வோடு பணைத்த பாலரும், புலவரும் அயர்லாந்து சுதந்திரத்தை உளமாரவே உணர்ந்தனர். இதன் பலனாகவே தேசபக்தர்களை ஒருங்கிணைக்கும் சக்திகள் ஒரே மாதிரியானவையாய் இருந்தமையால் வெள்ளையர் பகைப்புக்களையும் தொடர்ந்த தொடர்பும் ஒற்றுமையும் காணப்படுகின்றது எனலாம். பாரதியின் புதிய ஆத்திசூடியைப் போன்று பாலரும் புலவரும் சேர்ந்து உளை, உடை, உறையுள் மோகங்களை மறந்து தேசிய உளை, உடை வகைகளை அணியுங்கள் எனப் பாடுகின்றனர்.

"தேசு தோங்கத்தோடு பளிச்சென 1907 ஆம் ஆண்டு மலர்ந்த இந்திய தேசிய இயக்கம் பிற்போக்கானதே" என்கிறார் சேகு" என்ற மீளாய்வு சிந்தனத்தின் கூற்றிற்கேற்ப இருந்த நிலைமையினை உணர்ந்த பாரதி, பாரதிதாசன் போன்றோர் தேசிய இயக்கத்தோடு சேர்ந்து சமூகக் கொடுமைகளைப் பாடினார்கள். இதனடிப்படையிலேயே பாலரும்-புலவரும் தம்பழம் பெருமை பாரம்பரியத்தைப் பேணவும், தேசியம் பற்றிய மக்களிடையே ஏற்படுத்தவும், சாதிபேத சமூக அநீதிகளைக் களைந்தெறியவும் இலக்கியப்பணியாற்றினர் என்பதற்கு அவர்கள் பாடல்கள் சான்றாக இருக்கின்றன. சமுதாயத்திற் சீர்திருத்தம் நிலவ —

வேண்டும், சாரண்டனும் கொள்கையும் ஒழிய வேண்டும் எனவும், விருதலி வேண்டியும் பாடினார்கள். எனினும் பாரதி பொன்று வீறு கொண்டு இவர்கள் பாடவில்லை எனலாம்.

தியகுகொல்ச் சைவமானவர் நிலையினை உணர்ந்து பாவலர் அவர்களுக்காக ஒரு ஆங்கிலப் பாடசாலையை நிறுவினார். சிவமானவர்கள் தம்பண்பாட்டை கிழந்து நெடுங்கவது சாண்ட புலவரும் கலைப்பட எனுமிடத்தில் 1893-ஆம் ஆண்டு ஒரு பாடசாலையைத் தொடக்கி வைத்தார். ஆண்டவனிடம் ஆற்றும் பருத்தும் பாவலரது 'சிவமணிமாலை' பக்திக் கனிகளைக் கொண்டது. 'யாழ்ப்பாண வைபவக் கும்மியும்', 'சங்கள் தேசாங்கியும்'; அங்கிய மோகம், அடிமை-வாழ்வு விதேசியப் மோக்கு, போலித்தனம் போன்ற சீர்கேடுகளை இடித்துரைத்து விருதலி உணர்வை வெளிப்படுத்துபவை. 'இதோப-தேச கீதரை மங்கள்', 'சகலகுண சம்பன்னன்'; அவரது கிளைத் தமிழ், நாடகத் தமிழ்ப் புலமையையும், சிறுதாய அங்கிதங்கள் போலி வேஷங்களையும் புலப்படுத்துபவை.[24] பாடல்நுண்மை-களை நோக்கின் தீவிரவாத உணர்வுத் தன்மையைப் பாவலர் பாடலிலும், மிதவாத உணர்வுத்தன்மையை புலவர் பாடலிலும் காணமுடிகின்றது. புலவரது 'ஆடுபம்பரப்பும்' 'கத்தரி வெருளியும்' நகைச் சுவை பொருந்திய பாடல்களாக இருந்த போதும் உள்ளார்ந்த நிதியில் அக்காலத்தின் நிலவிய முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ முறைமையும் சிறுதாயத்தில் நிலவிய போலி-வேஷங்களையும் வெளிப்படுத்துவன.[25] 'தாலவிலாசமும்' 'பனைமரக்-கும்மியும்' பனையின் வரலாறும் பயனும் பற்றியதாகும். 'உயிரினங்-களைக்' கண்டு சிந்தாந்தக் கருத்தை உள்ளடக்கியது. 'மரத்-தன் வேடம்' 'தங்கையர் 'பதிற்றுப்பத்து' 'சிறுதாரகக் கும்மி' ஆகியனவை நாம் அனுபவிக்கத் தந்த செல்வங்கள் ஆகும்.[26]

"சாதியேது சான் - அதிலொரு
நீசமேது சான்." என்ற வேதநாயகம் சாஸ்திரி,
கோபால கிருஷ்ண பாரதியார், அருணாசலக் கவிராயர், அன்னமுத்-

வெட்டியான், இராமலிங்க சுவாமிகள் போன்றோரின் புதுமைப் போக்கை இவர்களது கவிதைகள் சமுதாயரீதியில் வெளிப்படுத்தினை வேலாம்.

பாவலர் பாடிய பாடல்கள், சமூக விழிப்புணர்ச்சியையும் சமுதாய சீர்திருத்தத்தையும் அவாவிய அக்காலச் சமூகத்தின் போக்கிற்கிணங்க காலத்தின் குரலாக அமைகின்றன. அக்கால அரசியல்த் தலைவர்கள், சமயச்சீர்திருத்தவாதிகள், கிறிஸ்தவமிஷனரிமாரின் செயல்கள், தமிழ்க் கல்வியின் தாழ்ந்த நிலை, சமூகச்சாதிப் பாரம்பரியத்தின் வீழ்ச்சி போன்றவற்றை வள்ளம் வெளிய தமிழில் மருத்துக் காட்டி கவிதையாத்தார்.

"கொண்டைக்குப் பூத்தூவும் குணம் போச்சு - கூடாகக்
கொண்டு மயிர்முடிக்கும் காலமாச்சு" [28]

என்ப் பாவலர் சீர்திருத்தும் புதியதொரு பாடற்பாணியைத்தை அவர் காட்டி அக்காலச் சமூகம் இடம் கொடுக்கவில்லை என்பது கூறவேண்டும்.

பாவலரும் புலவரும் பாடிய சீர்திருத்தக் கருத்துக்கள், செய்து முடித்த சமூகசேவைகள், ஆற்றி முடித்த இலக்கியங்கள் என்பன மக்களால் இன்றும் உணரப்படுகின்றன. இவை வையத்தலையே காலத்தோடுபட்டது என்று சேர்ந்து நிற்கவைத்த அவர்கள், வாழ்வின் பிற்பகுதியில் எதிர்நீச்சல் போட்டு வெற்றிகரமாகக் கரையேறிய வீரர்கள் எனலாம். அவர்களின் பாடல்கள் "சாலை புதிது பொருள்புதிது
வளம் புதிது - சொற்புதிது சோதிமிக்க
நவகவிதை நெஞ்சாறும் அடியோ மகாகவிதைகள்" [29]

என்ப் போற்றத் தக்கன எனலாம்.

உசாத்துணை நூல்கள் :

		பக்கம்
1. வேந்தனார் - க	– 'நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் ஆக்கங்கள் பற்றிய மதிப்பீடு' இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாக தமிழ் மணிப் பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வுக் கட்டுரை – 1974.	2
2. மௌனகுரு, சி சித்திரலேகா. மௌ நு:மான். ம்ம். எ	– 'இருபதாம் நூற்றாண்டு எழுத்துத் தமிழ் இலக்கியம்'	4-5
3. இரத்தினம். க. பொ.	– 'இலங்கையில் இன்பத் தமிழ்'	4-5
4. PATHMANATHAN. S	– 'THE KINGDOM OF JAFFNA'	30-35
5. மௌனகுரு. சி சித்திரலேகா. மௌ நு:மான். ம்ம். எ.	– 'இருபதாம் நூற்றாண்டு எழுத்துத் தமிழ் இலக்கியம்'	1-3
6. சதாசிவம் – ஆ.	– 'எழுந்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்'	
7. யோகராஜா. செ	– 'இருபதாம் நூற்றாண்டு எழுத் தமிழ்க் கவிதை வளர்ச்சி' இளங்தென்றல் – 1971-72	86
8. கைலாசபிள்ளை – த	– 'ஆறுமுகநாவலர் சரித்திரம்'	38
9. பூலோகசிங்கம். பொ	– 'தமிழ் இலக்கியத்தில் எழுத்தாளரின் பெருமுயற்சிகள்'	60-65
10. மௌனகுரு. சி சித்திரலேகா. மௌ. நு:மான். ம்ம். எ	– 'இருபதாம் நூற்றாண்டு எழுத்துத் தமிழ் இலக்கியம்'	14
11. குமாரசுவாமி. ச இராமசாமி. ஆ	– 'ஆசியுரை – பாவலர் துரையப்பா பிள்ளை – நூற்றாண்டு விழாமலர்'	8-10
12. துரையப்பாபிள்ளை. தெ. அ	– 'சிந்தனைச் சொல்'	9-10
13. வேலாயுதபிள்ளை. த	– 'துரையப்பாபிள்ளையின் வழிக்கணையும் ஈழகாவலரும்' பாவலர் துரையப்பாபிள்ளை- நூற்றாண்டு விழாமலர் – 1972	33

பக்கம்

14. செந்திநாதன். க — 'எழுத்து மணிவிளக்குகள்'
எழுதேசி வெள்ளிவிழாமலர் 109

15. — SOMASUNDARA PULAVAR OF NAVALIYUR . JAFFNA
TAMIL CULTURE - 1952
இதை ஆதாரமாகக் கொண்டது.

16. — 'கவிக்கோலாசிரியம்' - தொகுதி - 5 86

17. யோகராஜா - செ. — 'இருபதாம் நூற்றாண்டு எழுத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி'
இளந்தென்றல் - 1971 - 72 87-88

18. பாலசுப்பிரமணியன். சி — 'பாரதிதாசன் பாடல்களிற் புரட்சி'
சுப்பையாபிள்ளை - வ - பவள விழாமலர் 44

19. பாலசுப்பிரமணியன். சி — 'பாரதிதாசன் பாடல்களிற் புரட்சி'
சுப்பையாபிள்ளை - வ - பவள விழாமலர் 44-45

20. பூலோகசிங்கம். பொ. — 'தமிழ் இலக்கியத்தில் எழுத்தாளரின் பெருமையற்சிகள்' 62-63

21. சாலை. இளந்திரையன் — 'புதிய தமிழ்க் கவிதை' 27

22. மீனாட்சிசுந்தரம் - கா — 'பாரதி பாரில்' 9

23. ராஜாதன் — 'சகுந்தலையும் காவிரியும்' 10

24. வேலாயுதபிள்ளை. த — 'துரையப்பாபிள்ளையின் வாழ்க்கையும் சமகாலமும்'
பாவலர் துரையப்பாபிள்ளை - நூற்றாண்டு விழாமலர் - 1972 35

25. செந்திநாதன். க — 'எழுத்து மணிவிளக்குகள்'
எழுதேசி வெள்ளிவிழாமலர் 109

26. விஜயரத்தினம். சி — 'இலக்கியத் தென்றல்' 106

27. சிவதேசச் செல்வன். ஆ — 'மல்லிகை' - ஜூலை. 1972 23

28. கணபதிப்பிள்ளை. டு — 'எழுநாட்டதன் தமிழ்ச் சுடர்மணிகள்' 143

29. வேலாயுதபிள்ளை. த. — 'துரையப்பாபிள்ளையின் வாழ்க்கையும் சமகாலமும்'
பாவலர் துரையப்பாபிள்ளை - நூற்றாண்டு விழாமலர் 37

இரண்டாம் இயல்

இரண்டாம் அத்தியாயம்

பாவலர் துரையப்பாபிள்ளை – சோமசுந்தரப்புலவர் ஆகியோரது கவிதைகளிற் சுதேசியம்

அ: சுதேசமும் இலக்கியமும்:

கற்பனையோ கற்றுவமோ சிற்சிலையோ திடீரென ஒருவன் மனத்தில் ஆகாயப் பூக்களாக இறங்கி விரிப்பதில்லை. அவை முகிழ்க்கின்ற காலத்தோடும் இடத்தோடும் அவைகளுக்கு வெகுவுங்கிய தொடர்பு இருக்கின்றது. இருக்கின்ற சின்னதைக் கண்டு வியக்கின்ற வியப்பு அல்லது வினை ஒரு சிருஷ்டியாகவோ கற்பனையாகவோ உருக்கொள்கின்றது. எனவே எந்தச் சிருஷ்டியும் எந்தக் கற்பனையும் சமுதாயம் எனும் திரைச்சீலையிலே தீட்டப்படுகின்றது. அச்சமுதாயமே கவிஞனின் ஆக்கத்துக்கு கருவாக அமைந்து விடுகின்றது.[1] அக்கருவின் பரிணாம வளர்ச்சியே இலக்கிய வடிவை எடுக்கிறது எனலாம். அதாவது சமுதாயத்தின் பிரதிபலிப்பாகவே இலக்கியம் அமைந்து விடுவதனால் காலத்திற்குக் காலம் தோன்றிய இலக்கியங்கள் வாயிலாக நாம் உணர முடிகின்றது.

சுதேசம் எனும் அத்திவாரச்சீலையிலே இருப்பதை கவிஞனின் அகக் கண்ணிலே புலப்படும். அங்கே அவன் காணும் காட்சி, மொழி, அமிசம், பொருளாதார நிலைமைகள் அவனது உணர்வின் ஊற்றுக்களாக வெளிப்படுகின்றன. உள்ள நிலையை எடுத்துக் காட்டுவதும் அதிற் காணப்படும் சீர்கேடுகளை இடித்துரைப்பதுமே கவிஞனது பண்பாகும். இவ்வகையிலே தான் இவ்வத்தியாயத்தில் சுதேசம் என்பதனை ஒரு வரையறைக்குட்படுத்தி, இவற்றின் பிரதிபலிப்புக்கள் பாவலர் – புலவர் அவர்களது பாடல்களிற் காணப்படும் தன்மை ஆராயப்படுகின்றது.

கவிஞனின் உள்ளத்தில் ஊற்றெடுத்த இலக்கியங்கள் யாவும் அவன் வாழ்ந்த காலத்தையும்,

அவன் பிறந்து வளர்ந்த சமூகத்தின் பண்பையும், உலகப் பொதுப் பண்பையும் பிரதிபலிக்கின்றது. பாவலர் - புலவர் அவர்களது சுதந்திரம் காலத்தைச் சிறப்பாகவும், சமூகப்பண்பை பொதுவாகவும் பிரதிபலிக்கின்றது. தெய்வம், நாடு, மொழி, சமூகம் போன்ற பல தளங்களில் இவர்களது கவிதைகள் சஞ்சரித்துள்ளன. பாரதியின் கவிதைகளின் காலத்தின் சாயல் படிந்துள்ளது போல் பாவலர் - புலவர் தவிர்ந்த ஏனைய எழுத்துப் புலவர் பாடல்களிலும் இதனைக் காணலாம்.

இவ்வாறு காலகட்டப் பகுதியிலும் தமிழகத்து இலக்கியவாதிகளைச் செல்வாக்குக்குட்படுத்திய சமூக பண்பாட்டு வரலாற்றுச் சக்திகள் எழுத்துத் தமிழ் இலக்கியவாதிகளையும் செல்வாக்குக்குட்படுத்தின. தமிழக இலக்கிய வரலாற்றினைச் செல்வாக்குக்குட்படுத்திய காரணிகளை காலகட்டரீதியில் நோக்கும் போது எழுத்துத்துப் பாவலர் - புலவர் இவர்களது காலங்களில், அவை எழுத்துத் தமிழ் இலக்கியங்களை எவ்வளவு தூரம் சீர்ணயித்தன என்பதனை அறியமுடியும்.

மக்கள் வாழ்வை கவித்துப் பொருள் எனக் கொண்டு உலகியற் பொருளும், காதலும் இலக்கியப் பொருளாக இருந்த மரபு கோலவோட்டத்தில் பக்தி இலக்கியங்களாகவும், ஐம்பெருங்காப்பியங்களாகவும், தலபுராண, வனசக்கவிகளாகவும் இவற்றைத் தொடங்கின. பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட அந்நியராதிக்கமும், அதன் பயனாகத் தோன்றிய தேசிய வீரர்களும், அவர்களது விடுதலை முயற்சிகளும் காரணமாக சீர்திருத்த இலக்கியமும் புதியவழிப்புப் பெற்று எழுச்சிப் பாதை நோக்கி மறுமலர்ச்சியுடன் முன்னேறித் தொடங்கியது. அந்நியர் ஆதிக்கத்தை எதிர்த்து தமிழகத்தில் மீண்டும் அதன் பழம் பெருமையை நிலைநாட்டவும் அடிமைத் தளையை அறுத்தெறிந்து சுதந்திரம் பெறவும் இக்காலக் கவிஞர்களும் மக்களும் முனைந்தனர். இதனால் இக்காலச் சமூகத்தைப் பிரதிபலிக்கும் மறுமலர்ச்சிக் கவிதைகளை நாம் காணமுடிகின்ற

கிழக்காலகட்டப்பகுதியில் ஏற்பட்ட அந்நியத் தென்வாக்கும், அதனால் விளைவாக ஏற்பட்ட சமுதாய மாறுதல்களும் பிரதிபலிப்புக்களும் ஈழத்திலும் தென்பட்டன. அந்நியர் வசம் நாடு, மொழி, அரசியல், பொருளாதாரம், சமயம் முதலியன வீழ்ந்த அழிவுப் பாதையில் செல்லத் தொடங்கிய போது பலகவிஞர்கள் தொன்றித் தம்கவிதைத் தராதரம் எனத் தூக்கி விட்டனர். இந்த வகையிலே தமது மொழி, நாடு, சமயம், பொருளாதாரம் முதலியன மேம்பட வேண்டும் என்ற ஆர்வத்துடன் இயங்கும் தனிநாயகனைத் தேசியக் கவிஞர்கள் எனலாம். "நாட்டின் நிலைமை பற்றிச் சிந்திக்கும் தனிப்பட்டோரின் உயர்ந்த தேசபக்தி நிறைந்த மனநிலையே தேசாபிமானம்" என வான்கோன் [HANSKOHN] கூறுகிறார். இந்த உணர்வினைப் பிரதிபலிக்கும் கவிதைகளை கிங்ஸ்லாந்துனைகளிலும் தமிழகத்திலும், ஈழத்திலும் தோன்றின.

புராணங்களையும் வீரயுகப் பிரபந்தங்களையும் தேச உணர்வினோடு பாடிவந்த கவிமரபினை, ஈழத்து உரை, நகரம், நதி, இனம், ஸ்தலம் முதலியவற்றைத் தன்னுணர்வுடன் பாடுதல், தேசியத்தின் முதற்படியாக இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலுமே ஈழத்திலுள்ள இயற்கைக் காட்சிகளையும், இடங்களையும் காட்சி அனுபவத்தின் அடிப்படையில் அவற்றின் சிறப்பியல்புகளை மனங்கொண்டு இயற்றப் பெற்ற கவிதைகள் மிகுந்தன. மகோன்மணீயங்கை, சிவரஞ்சனிபாதமலை, கண்டி, கதிர்காமம் முதலியவற்றைப் பாடல்களிற் காணக் கூடியதாக உள்ளது. அக்காலத்தெழுந்த உலகுசார் பாடல்கள் சமயசம்பந்தமாக இருந்த போதும் அக்காலத்தே எழுந்த உலகுசாரப் பாடல்களும், இயற்கை வளத்தைப் பிரதிபலிக்கும் பாடல்களும் பிரதேச உணர்வு, நிதானம் ஊர் பற்றிய நுணுக்க விபரங்களைத் தருகின்றன.

ஈழநாட்டிலே வாழும் இனங்களையும் சமூகங்களையும் கருத்திற் கொண்டு இலக்கியம் சமைக்கும் நோக்கு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே வெளிப்படலா-

யிற்று. குறிப்பாகச் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளும் இந்நாட்டிலே செழித்துச் சேவை ஆற்றும் எனப் பல கவிஞர்கள் பாடினர்.[4] இவர்கள் வரிசையில் பாவலரும் புலவரும் தேர்ந்தெடுத்த கிடந்தாய் பெறுகின்றனர். இவர்கள் கவிதையிலே இனமொழி நேருமை பேணும் பொருளே சிறப்பிடம் பெற்ற தாயினும் மக்கள் கலகாட்டம், வகுத்தியத்திய எதிர்ப்பு, சமுதாயத் தீர்த்திருத்தம் என்பனவும் இடம் பெறுவதைக் காணமுடிகின்றது.

இன்றைய சிந்தனைத் தமிழ்க் கவிதைகளிற் சிலவான விருத்தான, சமூக, அரசியற் கருத்துக்களும் விளக்கங்களும் மட்டுமன்றித் தம்முள் மாறுபடும் வாழ்க்கை நோக்கங்களும், சமூக மதிப்பீடுகளும் பொருளாகக் கொள்ளப்படுவதையும், மக்களோடு அநாயாசமாகத் தொடர்பு கொள்ளும் பேச்சு வழக்கும், பேச்சோசையும் கையாளப்படுவதையும், விதந்து குப்பன்பும் அச்சுக்கச் சீனவையும் பொருந்தி இருப்பதையும் காணலாம். இத்தனைய கவிப்பண்பு கொண்ட கவிதை மரபிற்கும் சமூகத் தொண்டிற்கும் நன்றுடையதாக பாவலரும் புலவரும் விளங்கினர் எனலாம்.

ஆ: நாடு:

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இலங்கையிலே தேசியவாதம் படிப்படியாக உருவாகி வளரலா-யிற்று. இத்தேசிய வாதம் முற்பகுதியிலே சமய, சமூக, கலாச்சா-ரத்துறைகளிலும், பிற்பகுதியிலே அரசியல், மொழி, பொருளாதா-ரத்துறைகளிலும் சிறப்பாக வெளிப்படுட்டது. பிரதேச அடிப்படை-யிலே தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் ஒரு சீரான திசையில் இ லென்பதுண்மையெனினும் தேசியவாதத்தின் அடிப்படைக் கூறு-கள் நாடு முழுவதும் விரவிக் காணப்பட்டதும் மனங் கொள்ள வேண்டிய தொன்றேயாகும்.[5]

இலங்கையிலே ஆங்கிலேயர் ஆட்சி நடத்-திய பொழுது ஆங்கிலக் கல்வியிலும், மேலைப்பு நாகரிகத்திலும் ஈடுபட்டவர் ஒருபாடு கொண்டு தமது மொழி, பண்பாடு, நாட்டு மரபுகள் என்பவற்றை மறந்தனர். அத்தோடு அன்றிய நாட்டுப் பொருட்களில் மோகங் கொண்டமையினால் நாட்டின் பொரு-ளாதாரமும் வீழ்ச்சியுற்றது. இந்நிலையைக் கண்டு ஈடுபட்டவரின் நாட்டுமரபு, மொழி, பண்பாடு போன்றவற்றைப் பேண வேண்டும் எனத் துடிப்புடன் எழுந்தனர் சிலர் எழுந்தனர். இவ்வகையில் முன்னணியில் அடியெடுத்து வைத்த நாவலர் பெருமானைத் தொடர்ந்து இராமநாதன், அருணாசலம், ஆனந்தக் குமாரசு-வாமி போன்றோர் தொண்டாற்றினர். நாட்டின் பெருமைக்-குரிய பண்புகளைப் பேண வேண்டும் என்ற உணர்ச்சியும், சுதந்திர உணர்ச்சியும் மக்களிடையே வற்புறுத்தினர்.[6]

1924 ஆம் ஆண்டிலும் 1930 ஆம் ஆண்டி-லும் விற்பருத்தப்பட்ட அரசியற் சீர்திருத்தங்கள், நாட்டின் தேசியத் தலைவர்கள் மீண்டும் சுயாட்சி வேண்டி நிற்கக் காரணமாக அமைந்-தன எனலாம். பாறன் ஜயதிலகா, தொரிய தெனுவக்கா, பெரேரா போன்ற சிங்களத் தேசியத் தலைவர்களும், கல்லதம்பி, சாவணமுத்து, பாலவர், புலவர் போன்ற தமிழ்த் தலைவர்களும் -

அக்கால மக்களை முன்னின்று வழிநடத்தினர் எனலாம். தம்தாய்-நாட்டும் படும் பெருமைகளைப் பாடிச் சீர்செய்யும் போகும் தமது நாட்டை மீளவும் முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவர உழைத்-தனர்.

'செந்தமிழ் நாடு' என்னும் பகுதியில்,

"சிந்துநல் தங்நதையர் நாடென்ற பேச்சினிலே — ஒரு
பக்தி பிறக்குது பார்சினிலே...." [7] என உணர்ச்சியுடன்
பாரதியார் பாரத நாட்டின் படும் பெருமையைக் காட்டி விரு-
கின்றார். பாரதி, பாரதிதாசன் போன்றோரின் புரட்சிமிக்க நாட்டுப்-
பற்று, படும் பெருமை காட்டலில் நாட்டம் போன்றன சுதந்திர-
உணர்வுக்கும் தோன்றத்தான் செய்தது. இருபதாம் நூற்றாண்டின்
ஆரம்பத்திலே சுதந்திரை தோன்றிய கதர இவற்பின்னையின் 'சுதமண்-
டல சதகம்' சுணபதிப்பின்னையின் 'சுதமண்டல சதகம்' சரவண
பவனின் 'சுதமாதா திருப்பள்ளியெழுச்சி' 'சுதநாட்டுக் குறம்' நல்ல-
தம்பியின் 'மருதனாந்தவோட்டம்' 'சுதநாடே தென்' 'இலங்கை'
புலவரின் 'இலங்கைவளம்' 'மருதனாந்தவோட்டம்' பாவலரின்
'எங்கள் தேசமே' போன்றன யாவும் சுதநாட்டின் பெருமை
பற்றிப் பொற்றிப் பாடப்பட்டனவையாகும். [8] இவற்றிலே காலத்திற்கு
ஏற்ற வகையிலே நாட்டுப்பற்றினையும், நாட்டவர்தன்மையினையும்
அவர்கள் புகுத்தியுள்ளனர் எனலாம்.

பாவலர் 1895 ஆம் ஆண்டுவரை இந்தியா-
வின் கொழும்புரில் மிஷன் உயர்தர பாடசாலையிற் கடமை
யேற்றிருந்த காலத்தில் வாழ்க்கையிற் பெற்ற அனுபவங்களும்
கண்ட காட்சிகளுமே அவரைத் தேசியக் கவிஞராக மாற்றி-
யது. [9] பாரதி போன்று பாவலரும் தமது நாட்டை,

"ஆரிய ராசர்கள் ஆண்டதேசம் — எங்கள்
அன்பு நிறைந்த தமிழ் வாழ்தேசம்" [10]

எனப் புகன்று பெருமை கொள்கின்றார். தமது தாய்நாட்டின்
பெருமையைப் பேணிப் பாதுகாக்கும் தேசாபிமானிகள் நாம்
எனத் தீரியும் போலிவேஷக்காரரைக் கோடிட்டுக் காட்டுகின்-

எனக் கேள்வி செய்கிறார். நமது நாட்டினரையே சுயராஜ்யம் பெறுவதில் நம்நாட்டினரை நாணமுடியாது என்ற கருத்தும்பட

"சனங்கள் தகாரெனில் சுயராஜ்யம் – பெறத்
தகுவர்காண் திருத்தவின் மனோராஜ்யம்...." [11]

என்பதன் மூலம் விருத்துக் காட்டுகிறார். பாரதியின் 'பாரதநாடு' போன்று "சுத்தநன் தமிழ்தொனித் திருநாடு – நல்ல
சுகமெனு கனியம் நிறைநாடு
இத்தரை தனிலினிய நாடு – இந்த
இகத்தி னிதற்கீடி யேயிடி" [12] எனத் தம்தனித் தமிழ் இலங்கிடும் யாழ்ப்பாணத்து நாட்டின் பெருமையை இயம்புவது அவரது நாட்டுப்பற்றைக் காட்டுகிறது.

புலவரின் 'மருதனாற்சலோபட்டம்' 'இலங்கை வளம்' என்பன நாடுகாட்டின் பெருமையினையும் வளத்தினையும் கூறுவன. இன, மத, மொழி வேறுபாடற்ற நாட்டுப்பற்றின் ஏற்படுத்துவ – தாக இந்நூல்கள் அமைந்துள்ளன. 'இலங்கை வளத்தில்' இலங்கையின் தோற்றம், அதன் பெயர்கள், எல்லை, இயற்கை அமைப்பு, இலங்கையை ஆட்சி செய்தோர் விபரம் என்பவற்றை தெளிவுறுக்கமாக விருத்துக் காட்டியுள்ள புலவர்; பின்பு பொதுவாக இலங்கையின் இயற்கை வளத்தினையும், முக்கியமான நகரங்கள், தலங்கள் முதலியவற்றின் சிறப்புக்களையும், மாகந்தோட்டின் சிறப்புக் களையும் விருத்து பாடியுள்ளார். "பேரிமய வெற்புதந் பெண் நேமி யிருளும் அரியநாடு" [13] எனப் பாரததேவியின் நாட்டிற்கு எல்லை கூறிய பாரதி போன்று

"பார் வடக்கினிற் பாக்கினது நீரினை
யதன் கிழக்கினில் வங்காள விரிகடல்
தென் குடக்கினுந் தெற்கினு மோதைதன்
னீலவா ரிதி யிந்துச முத்திரமே" [14]

எனப் புலவர் நாடுகாட்டிற்கு எல்லையை வகுத்துள்ளார். "தந்தைபெயர் இலங்கையே தாயுமெம் இலங்கையே" என 'மருத-னாற்சலோபட்டத்தில்' எங்கள் நாடு என்ற உரிமையுணர்வுடன்

பாருங்கள். இத்தனைய மென்மை நாடு பொன்னிலங்கும், புகழ் இலங்கும் மணி இலங்கும் நாடு. புத்தமுனி வருகை தந்தநாடு என நாட்டின் பழங்கிறப்பினை அவர் கூறிப் போவது அவரது நாட்டுப் பற்றினைப் புலப்படுத்துகின்றது. இதுமட்டுமன்றி அவரது சமய வேறுபாடற்ற தேசிய நோக்கும் புலவரது நாடு பற்றிய பாடல்களிற் புலப்படுகிறது. மேலும் அந்நியப் பொருட்கள் மேலானவற்று நீங்க வேண்டும் எனவும் உள்நாட்டுத் தொழில்கள் விருத்தி செய்ய வேண்டும் எனவும் நாடு பற்றிய பாடல்களிற் புலவர் புலப்படுத்தி உள்ளதனைக் காணலாம். பாவலர் 'எங்கள் தேசகீதம்'

"எங்கள்நன் னாட்டுணிற் கைத்தொழில் செய்ய
தீதிலை யென்பெரும் மோச மென்னும்
தங்கிச் செய் தறிவுந் தீமையும் மட்டனைத்
தான்ற லரிதடி சங்கமின்னே" [15]

எனப் போலிப் பெருமைகள் கொண்டுலவுபவர்களால் நாட்டில் விளையுந் தீமையையும் எடுத்துக் காட்டியுள்ளார். இத்தனைய பண்பினைப் புலவரும் கொண்டிருந்தார் என்பது அவரது பாடல்களால் தெரிகிறது. புலவர் இயற்கையை வர்ணிக்கும் இடத்திற்கூட தமது நாட்டோடு தொடர்புடைய உவமைகளை அவர் வாக்கினில் வந்தமைவதைக் காணமுடிகின்றது. கருதனையைக் கைகளிரண் போல, மேசம் இரண்டு சூல் கொள்ளும். பாற்பாணத்துப் பனிபோல அருவிகள் பலபலவெனக் கொருக்கும் என இலவ்கை - வரைத்தும், சுதந்திரத்தினைப் புதுவுணர்த்தி பெற்ற மக்கள் போல மரங்கள் புதியதளிர்களை அரும்பி பூத்துநிற்கின்றன என மருதனைத்தவாட்டத்திலும் வருமிடங்கள் இதற்கிடத்துக்கனவு.

"கற்சனகு மின்னி சண்டைசெ யெய்யில்லி
சகோதரர் போலவே யின்னோரும்
அச்ச வெண்டாமுற வாகக் கலந்துநாம்
அன்புடன் வாழுவ மெப்போதும்" [16]

எனப் புலவர் ஒற்றுமை நீதியினை வேண்டி நிற்பது, இன, மத, மொழி வேறுபாடற்ற நீதியினின்று பாடியுள்ளனைத் தெளிவுறுத்துகின்றது.

நிழநாட்டு மக்களினையே விரும்பாத ஆற்றலை நிலவாகிடினர் நாட்டிற்கு விடுதலை கிடைக்கும் எனக் காத்திருக்கும் தலைவர்களின் நீதியும் வீண் கனவுக் கோட்டையே என்று கூறிய பாவலர், 'எங்கள் தேசநீயில் அன்று நிலவிய சமூகச் சூழ்நிலையை நமக்கு உணர்த்தி விடுகின்றார். அந்நிலையிலும் புலவரும் உணர்ந்து

"அஞ்சு விரலுஞ் சேர்ந்திடில்
அரிய கருமம் புரியலாம்
கொஞ்ச மொன்று கோவுறிற்
கூடுங் கருமம் மிஞ்சியே" [17]

என ஆற்றலை வேண்டிய பாடியுள்ளார். பாவலரது 'எங்கள் தேச நீதியும்' புலவரது 'மருதனஞ்சை வாட்டமும்' 'நிலங்கை வளமும்' அவர்களது நாட்டுப்பற்றுக் காரணமாகத் தோன்றிய பாடல்கள் எனினும், தமது பாரத நாட்டின் விடுதலைக்காக வீறுகொண்டெழுந்த தம்நாட்டுப் பெருமையினைக் காக்க முனைந்த பாரதி-பாரதிதாசன் போன்றோர் மேல் சமூகப்புரட்சி செய்த இவர்கள் பாட்டின்மீ தென்றே கூறலாம். அவர்கள் தேசிய உணர்வுடன் சுதந்திர வேட்கை கொண்டு, தம்நாட்டுப் பெரும் பண்புகளை ஒருத்துணைத்து மெய்ஞ்ஞானத்தையும் விடுதலைக் கோதையும் பெய்தனர். இதனால் அவர்கள் தேசியக் கவிஞர்கள் எனவும் போற்றப்பட்டனர். ஆனால் புலவர்-பாவலர் இவ்வியல்பை நோக்கும் போது இவர்களது நாடுபற்றிய பாடல்கள் நாட்டின் பெருமைகளைக் கூறுவதுடன் மட்டும் நின்றுவிடுகிறதெனலாம். எனவே பாரதி-பாரதிதாசனுடன் ஒப்பிடும் போது இவர்களை ஒருத்துத் தேசியக் கவிஞர்கள் என்பதனினும் ஞானச்சித்திருத்துக் கவிஞர் என்பதே பொருத்தமாகத் தெரிகின்றது. எனினும் ஒருத்தில் அவர்காலச்சூழ்நிலையை பிரச்சனைகளைப் பிரதிபலித்து தமது சமகாலக் கவிஞர்கள் போல் நாட்டுநலன் நாடிப் பாடிய அவர்களது கவிதைகளின் சிறப்புக்கள், இவர்களையும் ஒருத்துத் தேசியக் கவிஞர் வரிசையில் வைத்து எண்ணத் தெய்கின்றது.

3: மொழி:

தமிழ்மொழியின் பெருமையினையும் சிறப்பினையும் தமிழ் இலக்கியங்களின் வரலாற்றினை நோக்கும் போது அறிய முடிகின்றது. சங்ககாலம் தொட்டு இருபதாம் நூற்றாண்டுவரை தமிழ்மொழியினைப் போற்றிப் பாடல்கள் எழுந்த போதிலும் இருபதாம் நூற்றாண்டிலேயே இவையபற்றி அதிகம் எழுந்தன எனலாம். எழுத்திலே சங்கதாலத்து எழுத்துப் பூதத்தேவனாரின் இலக்கியங்களின் பின் எழுந்த இலக்கியங்கள் பெயரும்பங்குமான இலக்கியங்களாகவே காணப்பட்டன. எழுத்திலும், இசையத்திலும், நாடகத்திலும் வெற்றிக் கொடி நாட்டிய தமிழ்மீது அந்நியர் ஆசை கலைத்து செய்த கலையில், பிறநாடுகளுக்கு உணவு ஏற்றுமதி செய்த தமிழனுக்கு உண்பதற்கு உணவு கிடைக்காமல் வாழ்வினைக் கழிக்க நேர்ந்தது. சிலர் அறுவடையாளர்கள். பலர் அறுவடையாளர்கள். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" [18] என்ற மனப்பான்மையுடன் வாழ்ந்த தமிழனைச் சாதி, மதம், உயர்வுதாழ்வு, மூடப்பழக்க வழக்கங்கள் போன்ற பல தீமைகள் வாட்டத் தொடங்கின. சில அன்னியமோகம் கொண்ட கலைஞர்கள் தம் மொழியினை மறந்து அந்நிய மோகம் கொள்ளத் தொடங்கினர். தமிழின் தனி நிலை தாழத் தொடங்கியது. தீக்கிரையிலிருந்து உறங்கிக் கிடக்கும் தமிழ் மக்களைத் தம் கவிதைகளால் தட்டி எழுப்பினர்.

தமிழர் வேறொருச் சாதியினருக்கும் தாழ்ந்தவர்களல்ல என அழுத்தமாகப் பாடித் தமிழர் இனத்திற்கு இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள் அளவிடற்கரிய சிறப்பினை அளித்துள்ளார்கள். தமிழர் எனும் உணர்ச்சி தமிழ் நாடெங்கும் தோன்றித் தமிழர் தீர் குலைந்து கிடந்த நேரத்திலே தமிழரைத் தேசியக் கவிஞர்கள் பலர் தட்டி எழுப்பி அவர்கள் வீழ்ச்சியுற்ற காரணத்தையும், அவ்வீழ்ச்சி தின்று மீட்சி பெறும் அவசியத்தையும், வழியையும் உயர்ந்த நோக்கம் வாய்ந்த தாகு

கிளைகளால் எடுத்தோதினர். இந்தவகையிலே தான் பாவலரும் - புலவரும் நாட்டின் நலன் வேண்டியும் அதன் பழம்பெரும்பண்பு களை எடுத்துக் காட்டியும், தமது பாரம்பரியக் கோட்பாடு சீர் - கெட்டழிவது கண்டு அவற்றைப் பேணும் நோக்குடனும் அதே - தியப் போக்குடனும் உழைத்தனர் என்னலாம்.

யாழ்ப்பாண நிலவுடைமைச் சமுதாய அமைப்புத் - தோற்ற முறையிலும் அச்சமுதாயத்து மேன்மக்களின் பொருளாதார சமூக மேன்மை தொடர்ந்து நிலைப்பதற்கேற்ற வகையிலும் ஆங் - கிலக் கல்வி புகட்டத் தொடங்கியதும் ஐரோப்பிய கிறிஸ்தவ மதமும் வலுவிழக்கத் தொடங்கின. அரசியலிலும் புதிய உணர்வு எதுவும் ஏற்படாதிருக்கவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பாகத்தில் எழுந்த இலக்கியம் நாவலர் வகுத்த சமூக அரசியல் நிலையிலிருந்து சிறிது சிறிதாக விலகத் தொடங்கி - தது.[19] ஆங்கில மோகம் கொண்ட சிங்களவரும் தமிழருக்கு தமது தாய்மொழியில் புறக்கணிக்கத் தொடங்கினர். இதனால் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே இதுகாலவரை உணர்வு ஏற்பட்ட நிலையில் எழுந்து மக்களுக்கு அவர்களின் தாய்மொழிகளில் கல்வி பயிற்சியை ஏற்படுத்த வேண்டிய நிலை உண்டாகியது. இவ்வுணர் - வினை மக்களிடையே ஏற்படுத்த முனைந்த கதிரவர்கள் சிங்களத் - தையும் தமிழையும் பொதுமொழி எடுத்துக் கூறினர்.[20]

1931 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சுமார் பத்து வருடகாலம் தூங்கிக் கிடந்த யாழ்ப்பாணம் - எதற்கெடுத்தாலும் தமிழ் நாட்டையே எதிர்பார்த்திருந்த யாழ்ப்பாணமும் தன்னுணர்ச்சி பெற்று விழித்துக் கொண்டது. இத்தகைய ஒரு பின்னணியில் படைமையை ஆராய வேண்டும்; புதியவர்களை ஆக்கவேண்டும்; பழைமைக்கே தனித்துவமாக அமைந்துள்ள சுவாச்சாரத்தினையும் பண்பாட்டினையும் பிரதிபலிக்க வேண்டிய கின்கிர ஓர் எழுச்சி உரு - வாயிற்று. பிற்காலத்தில் 'தேசிய இலக்கியம்' என்பதை ஒரு பொதுமையாக முன் வைத்தவர்களுக்கு முன்னோடிகளாக இப் - புலவர்கள் விளங்கினர்.[21] பாரதியும் சேஷையங்காரும் அர -

செய்த இருநூறு வருஷமும் இவர்களை மதம் மாற்றும் முயற்சி போன்றவற்றில் வருத்தினர். அவர்களுடைய ஆலயங்கள், சமயநூல்களை எரியூட்டி அழித்தார்கள். இந்நிலையில் இத்தகைய புலவர்கள் இல்லையேல் யாழ்ப்பாணத்துத் தமிழும் இல்லாதிருந்திருக்கும்." [22] என எம். பின்னை குறுகிறார்.

"நல்லூரகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே?" [23] என்கிறது மேலை பாடினர். புலவர்களிடத்தும் வித்துவான்களிடத்தும் செய்யுள் நடை பயின்று கொண்டிருந்த தமிழ்ப்பாணரையை அழைத்து 'உனக்கு ஏற்ற வன்ன நடை வசன நடைதான், இனிமேல் வாழுங்கூடிய நடையும் வழங்கக் கூடிய நடையும் அதுதான்' [24] என்று பழக்கி வைத்த ஆசான் ஆறுமுக நாவலரே. எனப் புலவர் கூறுகின்றார். இவ்வாறாக புலவர் நாவலரின் தமிழ் முச்சினை கேள்வியாக விளங்கிப்பது அவரது தமிழ்ப் பற்றைக் காட்டுகிறது.

தமிழ் மொழியானது சீர்கெட்டு இருந்த நிலையினைக் கண்டு பாவலரும் புலவரும் மனம் நொந்தனர்.

"தெந்தமிழ் மதன்றிரு மெங்கள் தயபாலை
சீர்குலை தேகலை பாவலரும்
சொந்தமா யிக்கிலிஷ் தன்னையே கற்கிறர்
தூக்கமி தல்லவோ சீவ்கமின்னை" [25]

எனும் பாடலாறு பாவலரது மனநிலை புரிகின்றது. சொந்த மொழி சீர்குலையே யாவரும் ஆங்கில மொழி கற்பதனைக் கண்டு மனம் நொந்து தன், அவர்களைப் பார்த்துக் கண்டனமும் செய்கின்றார்.

"இன்னுயிரன்ன வண்ணலை மறந்து
நாதித் துனியிழும் நாக்கு நுனியிலும்
பேதி மயக்கும் பெண்களை விரும்பி" [26]

என்ற புலவர் கூற்றும் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்ட நிலையையே காட்டுகிறது. தமிழ் மொழியையும் பேண வேண்டும் என்ற உணர்வில் தமிழ்ப்பற்றினை ஊட்டுவதாக பாவலர் 'எங்கள் தாய்மொழி' 'தமிழ் மாதின் பிரலாபம்' 'தமிழ்ப்பாவையின் மகத்துவம்'

ஆகிய பாடல்களைப் பாடியுள்ளார். 'நாமகள் புகழ்மாலை' 'செந்தமிழ் மக்களுக்கு ஓர் வேண்டுகோள்' போன்ற பாடல்களிற் புலவரது தமிழ்மொழிப் பற்றும் புலனாகின்றது. அறிவு, அன்பு, அருள் ஆகியவற்றோடு உறுதிப் பொருளும் பெற நாம் செய்ய வேண்டியன எனவும் என்பதை நம்மவரை முன்னிலைப் படுத்திப் புலவர்,

"அறிவு நிரம்பிட வேண்டுதல் – உண்மை
அன்பும் அருளும் அடக்கமும் வேண்டுதல்
உறுதிப் பொருள் பெறவேண்டுதல் – எங்கள்
கண்டமிழ் நல்லிசை ஏத்துகிறேன்" 27

என எடுத்தோதி நம்உய்வுக்கு வழிகாட்டுகிறார்.

"செந்தமிழ் மக்களே வாரீர் – எங்கள்
தெய்வத் தமிழ்மொழிச் சீரிளங் கேளிர்" 28

என அனைவரையுமே தமிழ்மொழிச் சிறப்புப் பேசத் தொடங்கி விடுகிறார். எந்தத் தேவைக்கும் தமிழைக் கற்றிருத்தல் என அதன் முக்கியத்துவத்தைக் காட்டுவது அவரது அழுந்த தமிழ்ப்பற்றையும் புலமையையும் காட்டுகிறது. இவர் தேசாபிமானம் உடையவராக இருந்தமையாலேதான் இலங்கையின் தேசிய மொழிகளான சிங்களத்தையும் தமிழையும் "தெய்வத் தமிழைச் சிங்களத்தைத் தேச மொழிகளாக்குவோம்" 29 என்றார். எனினும் தம்தாய் மொழியாம் தமிழின் அழிக பற்றுக் கொண்டிருந்தார். தமிழ்மொழி ஆதரிக்கப்படாததிருந்த நிலைகண்டு மிக வருந்தினார் என்பது அவரது 'நாமகள் புகழ்மாலையாலே தெரிகிறது. இப்புகழ்மாலையிலேயே தமிழின் இனிமையை

"யாழினும் குழலினும் பாலினும் தேனினும்
சோணினுங் கேட்பினும் கருதினும் இனிக்கும்
அமிழ்தூறல் நினைவைத் தமிழ்மொழி" 30 எனப் போற்றினார்.

தம்முன் சீர்கெட்டுப் பாழடையும் சமுதாயத்தை அன்னிய மொழி மயக்கத்தில் அழுந்திருந்த மக்களைத் தட்டி எழுப்பி இவர்களுக்குத் தமிழின் இனிமை யெருமையை பாவலர் எடுத்துக் கூறுவதன் மூலம் பாவலரது மொழிப்பற்றுப் புலனாகின்றது. அவர்–

காலத்தில் அந்த அன்பிய மோகத்தில் ஆழ்ந்தவர்களைச் சீர்தி-
ருத்தி வழிநடத்த முயன்ற பாவலர் தானே முன்வந்து புத்தி
புகட்டுகின்றார்.

"தெந்தமி நாடவேனும் இன்றின் சாம்வேனும்
சோர்த்தீவ் விரண்டையும் சிப்பதை
புத்தி விரிந்து மதிழ்வன்தன் காவலத்தில்
புத்தியிதுவடி சங்க மின்னே" [31]

எனச் சங்த வனைகளின் பிறமொழியைப் பிரயோகிப்பதால் நன்மை
உண்டாகும் என்பதை எடுத்துக் காட்டுகிறார். புலவர் தமிழின்
பெருமையைந்திக் கூறியது போல் 'தமிழ்ப்பாஷையின் மகத்துவத்தில்'
பாவலர் அதன் இனிமையையும் பெருமையையும் வெளிப்படுத்-
துகிறார்.

தமிழ்வேந்தர் ஆட்சி மறைந்ததின் தினிப்பாதகமும்
தின்னீ; பாடுகள்க்கு ஒன்று எதுவும் இல்லை, என்றபடி தமிழ்
மொழியைத் தனையபுனர்ந்து கற்பாரும், கற்றவரைப் புரப்பாரும்
அருகியனமையாலே தமிழ்நூல்கள் பிறரால் பழிக்கப்படும், நம்மவ-
ரான் பேணப்படாமையும் நோவும், பெருப்பாடும் சிதலரும் அரித்-
தொழிந்த இடைக்கால நிலையை நினைந்து நினைந்து வருந்தித்
தமிழன்னையிடம் முறையிடுவது போன்று புலவர் வருகைப்பத்தில்,

"என்னப் புறக்கு மன்னாளீ
யீயந்தீர் பரவும் புலவனீ
மனத்தின் படியே வினைபுரியும்
மைந்தர் பலரும் இருக்கின்றார்" [32]

என்று கூறியிருப்பது அவரது தமிழிலக்க உணர்ச்சியையும் மொழிப்
பற்றையும் காட்டுகிறது.

"வென்று மொழிகளைக் காத்திலம் - எங்கள்
மெய்யான முதுசொத்தை விலைபேசி விற்றோம்..." [33]

என அன்னிய மோகத்தினால் ஏற்பட்ட தீமைகளையும் பயன்-
மையையும் எடுத்துக் காட்டுகிறார். இப்பண்பு பாவலர் பாடல்-
களிலும் பிரதிபலிக்கக் காணலாம். அன்னியர் ஆட்சியை

தீர்த்து மெருந்த நாவலரின் உரைநாதத்தின் எதிரொலியே பாவலரது செய்யுள் நாதம்"[34] என சிவபாதசுந்தரனார் கூறுகிறார்.

"ஐரோப்பிய பாவின் பாங்கு – நடைத்
திகழ தென்றமிழ் விட்டு நீங்கு – மிகு
தைரியமாய் முன்னர் ஓங்கு – எங்கள்
தமிழ்ப்பழம் வழக்கங்கள் தாங்கு"[35]

எனப் பாவலர் இடித்துரைக்கிறார். தமிழ்க் கல்வி வளர்த்த அறம், அடக்கம் ஆகிய நல்லியல்புகளை ஆங்கிலக் கல்வி அழித்தது என்பதே அவர்தம் இருவரதும் கருத்தாகும். எனவே தம்தாய்மொழியின் மதிமையையும் பெரு தம்வரப்பான் முழுவதும் உணர்ந்தனர் என்றே கூறலாம்.

---

5. - அரசியல் :

அந்தியர் அரசியற்றுறையில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த வெளையில் தாம் இழந்த உரிமைகளை மீண்டும் பெறுவதில் ஈடுத்தனர் கருத்தாகவே இருந்தனர். இலங்கையில் ஆங்கில அரசாட்சி தொடங்கிய பின் தேசாதிபதியுடன் ஆந்து. அல்லது ஆறு உத்தியோகத்தர் சேர்ந்து அரசாட்சி ஆலோசனைச் சபையினராக இருந்து வந்தனர். இச்சபையில் ஆங்கிலேய உத்தி-யோகத்தர்கள் இருவரும், சிங்கள தமிழ் உத்தியோகத்தரும் அங்கம் வகித்தனர். தமிழர் சார்பாக இரண்டு பெயர் முதலியார், வைமன் காசிச் செட்டியார், இராமநாதன் போன்றோர் காலத்திற்குக் காலம் அங்கம் வகித்தனர். 1911 ஆம் ஆண்டுச் சட்டசபை புதிய மாற்றத்துடன் திருத்தி அமைக்கப் பெற்றது. இப்புதிய மாற்றத்துடன் இராமநாதன் மீண்டும் நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து அருணாசலம், திரு. வீரசிங்கம், பாலசிங்கம் போன்றோர் தமிழர் சார்பாக அங்கம் வகித்தனர்.[36]

இவ்வாறு சட்டசபையில் அங்கம் வகித்த தலைவர்கள் தமிழ்மக்களது உரிமைகளைப் போராடிப் பாதுகாக்க அருந்தொண்டாற்றினர் எனலாம். இவர்கள் தம் பெயர்பாகளோடு சேர்ந்த தமிழ்த் தொண்டினை பாவலர் - புலவர் இருபோர் தம் இலக்கியங்கள் மூலம் பிரதிபலித்தனர். அவர்களின் காலத்தில் நிலவிய சமயப் போட்டியும் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவமுமே அவர்-களை அரசியலில் ஈடுபட வைத்த காரணி எனலாம். இக்காலத்தில் ஆங்கிலேயர் ஈடுத்தில் சமயங்களை வன்மையாக எதிர்க்கத் - தொடங்கினர். சமயங்களை எதிர்த்ததுடன் அமையாது பாட-சாலைகளையும் கிறுவி ஆங்கிலவழி கற்பித்தனர். கரு அரசாட்சிக்கு உட்பட்டவர் ஈடுத்தவர் தம் உரிமை சிதைந்தும் பாவற்றையும் இழந்து அவர்களிடம் கையேந்தி நிற்கும் நிலை ஏற்பட்டது. ஆங்கிலக் கல்வி முறையும் கிறிஸ்தவ மதமாற்றமும் உச்சநிலை யடையவே தமிழ் தன்னிலையிழந்து தொடங்கியது. மக்களும் தம்

பாரதம் பரியப் பெருமைகளைக் கைவிடும் போலியான மேலைநாட்டு நாகரிக முறைகளைப் பின்பற்றத் தொடங்கினர். இந்தக் காலகட்டத்திற் பாவலரும் புலவரும் ஈழநாட்டுத் தேசியத் தலைவர்களுடன் இணைந்து சீர்திருத்தக் கருத்துக்களை முன்வைத்தனர். அரசினருடன் பெரும்பாலான தேசியத் தலைவர்கள் வைத்த தொடர்பு நாடாளுமை, மொழியுரிமை முதலியன சம்பந்தமாக இருக்க பாவலர் : புலவர் ஆகியோரது தொடர்பு சமூகநிய வற்றுடன் சமயம் பிரசின கல்வி முதலியன சம்பந்தமாக இருந்தன எனலாம். இவர்கள் தொடர்பாக அரசியல் விடயங்களில் ஒருபடித்தான விட்டாளும், மற்றும் தேசியத் தலைவர்கள் மீது கொண்ட ஒருமாறு அவர்களது அரசியல் ஒருபட்டதற்கு எடுத்துக் காட்டு எனலாம். அவர்கள் அரசினருக்கு எதிராக எடுத்த முயற்சிகளில் உதாரணமாகப் பாவலர் 1910 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள் பாடசாலையுடன் இருந்த தொடர்பை முறித்து மகாஜன உயர்நிலைப் பள்ளிக்கூடம் விழா எடுத்தமையையும், புலவர் தமது ஆரம்பக் கல்வியைத் தமது ஊரிலுள்ள அரசினர் ஆங்கிலப் பாடசாலையிற் பெறாது அயலூரிலுள்ள தமிழ்ப் பாடசாலையிற் சென்ற சுற்றாடலையும் குறிப்பிடலாம்.

பாவலர் சிதம்பரப்பிள்ளை மிஷன் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்திற் பெற்ற அனுபவங்களை அவரை அரசியல் விடயங்களில் ஒருபட வைத்தது. எனினும் தொடர்பாக அவர் அரசியல் விடயங்களில் ஒருபடவில்லை. 'இலங்கைத் தேசிய காங்கிரசின்' நடவடிக்கைகளில் இருந்த பற்றுக் கொண்ட இவர் அக்காங்கிரசுத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். 'பிரிவினையை எதிர்த்து' எனும் தலைப்பில் 'உதயதாரகை'யிற் கட்டுரை எழுதிய பாவலர் அக்கிராசனர் வேற்கீரன் கணபதிப்பிள்ளை அவர்கள் உயர்ந்த வர்க்கத்தினரின் செயலைக் கண்டித்தனர். 'யாழ்ப்பாண முற்கால இக்காலநிலை' என்ற தலைப்பில் 'இலங்கைத் தேசிய மதிப்பீடு' என்ற தலைப்பிலும் கட்டுரை ஒன்று எழுதினார்.[37] இவர் காலத் தலைவர்களே இவருக்குத் தேசிய-

உணர்வின் உடைமை நின்றன எனலாம். ஏடுகாட்டியலே தேசாபி-
மான உணர்வு ஏற்பட்ட நிலையில் இங்கு ஏற்பட்ட அரசியற்
சீர்திருத்தங்களும், அவ்வுணர்வினை இவர்களுக்கே மேலோங்கச் செய்-
தன. 1924 ஆம் ஆண்டிலும் 1931 ஆம் ஆண்டிலும் ஏற்படுத்தப்-
பட்ட அரசியற் சீர்திருத்தத்தை இலங்கைத் தமிழர் எதிர்த்து
நின்றனர். இதிலும் யாழ்ப்பாண வாலிபர்களின் எதிர்ப்புச் சிறப்-
பாகக் குறிப்பிடத்தக்கது.[38] இவர்கள் மட்டுமல்லாது அரசியலில்
ஈடுபட்ட சிங்களத் தலைவரும் இவ்வரசியற் சீர்திருத்தத் திட்டத்-
தில் மாற்றம் வேண்டும் எனக் கிளர்ச்சிகள் செய்தனர். இவ்வு-
லகம் சியாவடி வேண்டி நின்ற தலைவர்களது உணர்வுகளின்
தாக்கமே பாவலர்- புலவர் அவர்களது படைவிற் பிரதிபலித்தது.

புலவரது 'மருதனக்கலோபட்டத்தில் நாட்டின்
அரசியல் வரலாறு முக்கிய இடம் பெறுகிறது. மருதன் மஞ்சல்
ஆறும் பொது வழியிற் காணும் காட்சிகளை வருணிக்கும் இடத்தில்
இலங்கையின் இயற்கை வளம் சிறந்த முறையிலும், இலங்கை-
யின் அரசியல் வரலாறு பிற்பகுதியில் விரிவாகக் கூறப்பட்டுள்-
ளது. இலங்கையில் ஆட்சி செய்த சிங்கள, தமிழ் மன்னர்களின்
ஆட்சியினைக் கூறியதுடன், அந்நியர் ஆட்சியினையும் கூறி
இறுதியில் சுதந்திரம் அடைந்த நிலையைப் போற்றியுள்ளார். சுதந்-
திரக் கொண்டாட்டத்திற்காகப் பாடப்பட்டமையால் மருதனக்-
கலோபட்டத்தில் சுதந்திரத்தினால் நாடு அடைந்த நலன்களை,
அடைய வேண்டிய சிறப்பு யாவும் விரிவாகப் பாடியுள்ளார்.
அவர் ஓர் அரசியல்வாதி போன்று தேசம் நின்ற நிலை கொடுக்க
வில்லை. நதிகளை கொண்டிருந்த பண்பைக் காண்பிக்கும் காலமாகவே
அவர் காட்சி அளித்தார்.[39] இயற்கையை வர்ணிக்கும் இடத்-
தில் கூட இராமநாதன், அருணாசலம் போன்ற தேசபிமானி-
களைப் போற்றியுள்ளமை, அன்றைய அரசியல் வானில் நட்சத்-
திரங்களாக மின்னிய தமிழர் கொண்டாடிய தலைவர்களிடத்து
புலவருக்கு உள்ள மதிப்பையும், தமிழ்ப்பண்பையும் காட்டு
கிறது. யாழ்ப்பாணத்துத் தமிழ்மன்னரின் ஆட்சியினைப் போற்றி,

பாடிய புலவர் அதே உணர்வுடன் சிங்கள மன்னரின் ஆட்சியினையும் போற்றிப் பாடியுள்ளார். சிங்கியர் ஆட்சியில் வெறுப்புக் கொண்ட போதும், ஆங்கிலேயர் ஆட்சியில் சில நன்மைகள் ஏற்பட்டிருக்கிறதைப் போற்றுகிறார். எனினும் இவர்களும் இலாத சுதந்திர உணர்வை புலவரிடமிருந்தமையை,

"சிங்கியர் தனாநாளையு மவர்பொருளும் போது
மன்னவரு மெனுந்தன்மை ரவ்வள விவ்வளவென" 40 எனும் பாடலிதனை தெரிகிறது. அந்நியர் ஆட்சியை விரும்பாத புலவர் நாடு சுதந்திரமடைந்தமையினை பற்பட்ட குறுதனத்தில் பாடுகிறார்.

"நாடு விடுதலை நாடு விடுதலை
நாளும் விடுதலையே
பாடை விடுதலை கூறுமதவரி
நீடு விடுதலையே" 41

தேசிய உணர்வு பிரதிபலிக்கும் இப்பாடலின் கருவாய சிறிதளவு உணர்வினையும் காணமுடிகின்றது. அரசியல் சுதந்திரத்தை அனுபவிக்கின்ற புலவர் மக்களிடையே அமைதி நிலவ வேண்டும் என்ற விருப்பினால் இற்றமையை வற்புறுத்தியுள்ளார். இவ்வகை சிறுதந்திரம் அடைந்ததும் முன்னர் நிலவிய இற்றமை சுதந்திரத்தின் பின் குறையக்கூடும் எனக் கருதியே புலவர் இற்றமையை வற்புறுத்தியிருக்கலாம். எனினும் சுதந்திர மனப்பான்மை பாடிய 'இனச் சகோதரத்தின்' இதயத்தை இடம்பெறுமையை உணர முடிகிறது.

"பிரகாலைச் சடங்கு தெளிவகத்தையும், பிரச்சினைகளையும் பொதுவாக மக்களுக்குப் பிரதேச வினங்களுக்கேற்ற முறையில் கூறிய வகையில் பாவலர் துரையப்பாபிள்ளையை பெருத்தும் தமிழ்க் கவிதை வரலாற்றில் ஒரு இடம் தந்தள்ளமை கூடும்." 42 எனத் திரு. சி. நித்தியானந்தன் கூறுவது பாவலரது சிறந்தபிரான உணர்வைக் காட்டுகிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், ஆங்காங்கு தோன்றிய சமகாலச் சடங்கு அரசியலில் ஈடுபாடுகளினால் அமைந்த கவிஞர்களின் தொடர்ச்சியில் இவர்கள் விடிவெள்ளியாகத் திகழ்ந்தார்கள் எனலாம்.

2.: பொருளாதாரம் :

மனிதனின் இன்றைய வாழ்வில் பெரும் தாக்கமான பிரச்சனையை உண்டாக்கி வரும் பொருளாதார நெருக்கடி இன்றுமட்டுமல்ல அன்றும் இருந்து வந்ததென்றே கூறலாம். சங்ககாலப் புலவர் தொடக்கம் இக்காலப்புலவர்வரை பொருளாதார விருத்தியைத் தூண்டும் பாடல்களைப் பாடிவந்தமை இக்கருத்தை உறுதிப்படுத்துகிற தெனலாம். பொருளை உற்பத்தி செய்தல், பயன்படுத்தல், பயன்படுத்தல் எனும் மூத்திறத் தொழிற்பாடுகள் பற்றி ஆராய்ந்து விளக்கும் ஆலோசனையும் வழங்கும் தேர் விஞ்ஞானப்பிரிவே பொருளாதாரம் எனக் கொள்ளலாம். இக்காலத் தொழிற்பாடுகள் தானத்துவம் பெறும் நிலையிலேதான் ஒரு நாடு பொருளாதாரத் தன்னிறைவு பெற முடியும் என்ற உண்மையையும், தமது நாட்டின் பொருளாதார நிலைமையினையும் உணர்ந்து போரும் தேசியக் கவிஞர்கள் தமது தேசிய உணர்வினூடே தம் நாட்டையும், மொழியையும் போற்றியது போல் நாட்டின் பொருளாதார வளத்தையும் தவறாது பேசுதல் தினர் எனலாம்.

எழுபதாம் இருபதாம் ஆண்டின் ஆரம்பத்திலேயே நாட்டின் பொருளாதாரம் குறிய பாடல்கள் எழுந்தன. இங்கு தேசாபிமான உணர்வு மிக்க இருந்த நிலையிலே தேசிய பொருளாதாரத்தை வளர் செய்யும் விருப்பமும் கனவியது. தேசாபிமான உணர்வுடன் நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் ஒப்புநோக்க முனைந்த கவிஞர்கள் பொருளாதார விருத்தியிலும் தவறாது தொடங்கினர். மன்னர் ஆண்ட நாட்டுப் பொருட்களில் மோகங் கொண்டு தம்நாட்டுப் பொருட்களை உபயோகிக்காதிருந்தனர். இதனால் உள்நாட்டுப் பொருள் உற்பத்தி விருத்தியடையாமையால் வேலைவாய்ப்புக்களும் குறைய நாட்டின் வறுமை மேலோங்கியது. இந்நிலைமையை உணர்ந்த தேசாபிமானமிக்க புலவர்கள் பொருளாதார வளத்திற்குக் குரல்தந்து கொண்டு தேசியப்-

பொருட்களிற் பற்றினையும், அதனைப் பயன்படுத்துவதில் ஆர்வத்தினை உண்டாக்குவதாகவும், கைத்தொழில் முயற்சிகளில் மக்களுக்கு ஊக்கமும் ஒருமைப்பாடாகவும் அமைந்த பல பாடல்கள் பாடினார்.[43]

இவ்வினையில் அந்நியராட்சியை ஒழித்து பிரதேசவாதப் போக்கிலிருந்து விடுபடுதல் வேண்டும் என்ற தேசியப் பிரவாகத்தினை தாமும் ஒரு துணியாகக் கொண்டு தேசியக் கவிஞர்களாகப் பாவலர், புலவர், கவிஞர், சதுவனாதியோர் பொன்றோர் மலர்ந்தனர் எனலாம். மனிதாபிமான உணர்ச்சியோடு கலந்த பண்டைத் தமிழர் இவர்களுக்கு இவ்வுணர்ச்சியை ஊட்டுவதாக்கிய சக்திகள் ஏறக்குறைய ஒரே மாதிரியாகவே இருந்தனவெனலாம். பண்டைய தத்துவங்கள், சமய இலக்கியங்கள் முதலியவற்றிலும் ஆழ்ந்த கொண்டு அறக்கருத்துக் கொண்ட பாடல்களையும், சமயக் கருத்துடைய பாடல்களையும் இவர்கள் பயாத்துள்ளனர். இது மட்டுமல்லாது தேசிய உணர்ச்சி கொண்ட இவர்கள் தம் தாய் நாட்டையும் மொழியையும், பொருளாதார வளத்தையும் பேண அரும்பணி ஆற்றினர் என்றே கூறலாம்.

அந்நிய உணவு, உடை வகைகளை மறந்து நம் தேசிய உணவு உடைவகைகளை அணியுங்கள் எனக் கொடுத்த பாவலர்-புலவர் அவர்களின் ஆல்ப் பாரதியினது சாயலுள்ளது தொழிற் சிறப்பிற் கூறும் கோலத்தை நோக்கியிருக்கின்றனர். இந்திய நாட்டிலே தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்ற தன்னை கண்ட பாரதி புதிய ஆத்தி சூடியிலே 'சூடுதல் தொழில் செய்' 'கைத்தொழில் போற்று' என்றெல்லாம் ஆணையிட்டார். இந்தியத் தொழிலாளர்களைப் பார்த்து தென்றிவியாளை நிலத்திற் சிந்த நம் கருத்தாளும், கரத்தாளும் உழைப்போம் என்கிறார். பாரதியின் இந்த முழக்கம் பாவலர்-புலவர் அனைவரையும் காதலும் ஈர்த்தது. எனவே தாமும் உடன் சேர்ந்து குரல் எழுப்பியுள்ளனர். இதனைப் பாவலரின் 'யாழ்ப்பாண சிவ-

தேசக் கும்மி' புலவரின் 'இலங்கை வளம்' 'தாலவிலாசம்' முதலியவற்றில் வரும் பாடல்களால் அறியமுடிகின்றது. தும்மிடு முன்னை கவித்துவ ஆற்றலே நாடு நலமுற அவர்கள் பயன் படுத்தினர் எனலாம்.

நாட்டுதலே நிலவிய முதலாளி - தொழிலாளி என்ற வர்க்க வேறுபாட்டை யாவரையும் சற்றுமையுடன் கூடி அணைத்தனர்.

" வாரும் வாரும் நல்ல தொழிற்களே நாங்கள்
மனமார வேதிகள் செய்திருவோம்
தீரும் பணமுட்டும் தொழில்முட்டும் நீங்கிடச்
செல்வம் தழைத்திடுந் தொழிற்களே" 44

" நல்ல வருமானந் தரத்திடும் பல்பயிர்
நாட்டிக் கிருஷிகம் செய்தாக்கால்
செல்வம் பெருகும்நம் தேயங் சிறந்திடும்" 45

நம் தொழிலே மறந்து அந்திய மோகங் கொண்டிருந்த மக்கள் நிலைகண்டு சகிக்க முடியாத நிலையில் நமது தொன்று தொட்டு வரும் தொழிலையும், தற்போதைய நிலையினையும் கவினுறு வரிகளில் பிரதிபலித்தனர். இத்தகைய பண்புகளை வெளிக் காட்டி மக்களை நல்வழிப்படுத்த முயன்ற அவர்கள், அதற்கு ரிய வழிவகைகளையும் கவிதைகள் வாயிலாக எடுத்துக் காட்டினர். புலவர் சிறப்பாகத் தமது 'தாலவிலாசம்', 'பனைமரக் கும்மி' போன்ற பாடற் பகுதிகள் வாயிலாக தமது பாரம்பரியப் பொருளாதார நிலை இருந்த சிறப்பினையும் அதன் பெருமைகளையும் ஆங்காங்கே விவரித்துச் செல்கின்றார். அந்நியப் பொருட்களில் மோகங் கொண்ட போதிலும் மக்கள் நிலையையும் அதனால் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சியினையும் இவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

" தடையிலன் வியதேச பொருள் வாங்கு - லெங்கள்
நாடே முதுபறந் தாங்கு" 46

நம்நாட்டு மக்கள் நமது நாட்டைத் தேசிய உணர்வும் பொங்கு
தமிழ் விரும்பாத நிலையினைப் பாவலர்,

"நல்லவி னைமிகொண்ட வுள்ளுணர் வுள்ளுமை
நல்கும் வரதொடி யல்குலுக்கள்
தெள்ள மாம்மர வன்னி நம்வாய்க்கச்
சகமில்லியாமடி - - - " 47

என்ற பாடலடிகளால் விருத்திக் காட்டுகின்றார்.

யாழ்ப்பாண மக்களுக்குக் கற்பகதருவாக
விளங்கிய பனையாற் பெறும் பயன்களின் பெருமை கூறிய புலவர்
அதன் நன்னயனையும் கூறுகிறார்.

"மானிட வத்தின் மருவுபல வோருன்ன
வியமாய் நோய்கள் விலகுவதென் - செரு
மலைச்சிக்கல் போக்கு மயிற்றுளை மிண்டல்
இடைச்சிக்கல் கூட்டலொடு போக்கு" 48

பாவலரும் - புலவரும் நாட்டின் பொருளாதார விருத்தியிலும்,
தொழில் விருத்தியிலும் நாடுபாடு கொண்டிருந்தமையினாலேயே
அவர்களது நாடுபற்றிய பாடல்களிலே பொருளாதார வளத்தினைப்
பெருக்க வேண்டும் என்ற நோக்கினை வெளிப்படுத்தினர். பொரு-
ளாதார வளர்ச்சிக்கான இலக்குகளை இலக்கிய நயம் பொருந்
தவும், நடைமுறையின் சாத்தியமான விடயங்களைச் சிந்தித்து
ஆராய்ந்தும் அவர்கள் கவிதை வாயிலாகத் தந்துள்ளனர்.
காரணகாரியத் தொடர்போடு எழுதப்பட்ட தன்மையினைப் பாவ-
லரின் 'யாழ்ப்பாண அவதேசக் கும்மியிற் தானறிவுறுத்தினார்.து. புல-
ரது 'இலங்கை வளத்தில்' கைத்தொழில் விருத்தி செய்ய
வேண்டும் என்ற அவரது மனப்பாங்கையும், 'மருதனஞ்ச
லோட்டத்தில்' அந்நிய இலங்கையின் ஆக்கத்திற்கான
கருத்துக்களைக் கூறுமிடத்து நாட்டில் உடனடித் தொழில் போன்
பல தொழில்களையும் விருத்தி செய்ய வேண்டும் என்கிறார்.
தென்னையை ஆக்கத்து வாழையைப் பின்னை வேட்ட வேண்டும்
எனப்புலவர் கூறுவது நாட்டின் பொருளாதாரத்தை வளம்-

பருத்த வேண்டும் என்ற புலவரது உணர்வினைக் காட்டுகிறது. மண்ணாறு வளைப் பயன்தருகின்ற தெய்வப்பனையை விருத்தி செய்தால் நாட்டிலே செல்வம் தளைத்தோங்கும் என்ற கருத்தைக் கொண்ட புலவர் 'தாலவிலாசம்' 'பனைமரத்துப்பி' 'தொல்புகழ் பனைத்தொழில் விருத்தி ஐக்கிய சங்க வேலைகள்' ஆகிய பாடற் பகுதிகளில் அவற்றின் பெருமையையும், தமது கருத்தையும் காட்டி விருகிறார். இதனைப் பொறுப்படும் பனைத்தொழிற் பொருட்கள், உணவுப் பொருட்கள் பற்றித் தொகுத்தும் விரித்தும் கூறுகிறார் "பனையின் பயனை உலகு அறிந்து நன்மையடைதல் வேண்டும் என்பதே இதனைச் செய்தேன்" என்கிறார்.

பொருளைப் போற்றி வாழும் உணர்வு வரவு வரவுப் போட்டியும் பூசலும் நிகழ்ந்து வலியாரே வாழும் என்பதற்கினங்க இதற்றல் வாய்ந்தோர் இது பகுபோக உரிமை கொண்டாடத் தொடங்கிய பொழுது சிறுதாயத்திற் சிலர் வாழவும், பலர் அவர்களுக்கு அடிமை வறுமையில் வாழவும் நேர்ந்த பொழுது. நியாயமான வாழ்க்கை நெறி வற்புறுத்தப்பட்டதே வளவாம். இந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த புலவர் சமுகத்தின் சிறுகுத்திற் பங்குகள் பெறவும் கருத்து பொருளாதார மேம்பாடினை அவாவுகின்றனர். அந்த எண்ணங்களின் விளைவாகவே 'யாழ்ப்பாணச் சுயதேசக் கும்மி' யில் 'கிருஷிகம்', கைத்தொழில் வல்லமையின் சிறப்பினையும், அவற்றின் அபிவிருத்தி வற்படுத்த வேண்டும் என வற்புறுத்தியும் போதின்றனர். நீண்டகாலச் சூழ்நிலையை நன்கு அறிந்து, எதிர்கால நிலையைத் தீர்க்க தரிசனமாகக் கண்டு கருத்துக் கூறிய சிறப்பினை அவரது 'சுதேசாரக் கும்மி' பிரதிபலிக்கிறது. இக்கும்மியும் அவரது பொருளாதார நோக்கினை வெளிக்காட்டுகிறது எனலாம்.

'கிருஷிகத்தில்' யாழ்ப்பாணத்தின் வளத்தினை விபரித்த புலவர், இலங்கையின் மற்றைய பகுதிகளைப் போல் அது மலைவளம் நிறைந்ததல்ல, மண்ணும் செழிப்பானதல்ல. நமது தேசம்

வானம் பார்த்த தேசம் என அதன் நிலைமையை எடுத்துக்காட்டி அரசினரே இதற்கு ஆவன செய்ய வேண்டும் என்கிறார். கமலக் - காரரின் பின் தங்கிய நிலையின் எடுத்துக் காட்டி முற்போக்கான வழிவகைகளையும் காட்டி விடுகின்றார். கற்றவர் கமத்தினைச் சரித்-தாச் செலுத்தாது உத்தியோகம் கொண்டோடுவதன் எடுத்துக் - காட்டுவதன் மூலம் பொருளாதாரத்தில் வற்படும் இக்கட்டான நிலைமையினை நமக்கு உணர வைக்கின்றார்.

பாவலரும் - புலவரும் தமகாலத்தில் வாழ்ந்ததனால் போலும் அக்காலத்தின் பிரதிபலிப்பாக இவர்கள் படைப்புக் - களில் ஏற்றமை நிலவுவதைக் காணமுடிகின்றது. எந்தச் சிறிய வகைத் தொழிலாயினும் நம்மையாலேயே, நமது தேசத்தி-லேயே செய்ய வேண்டும் என்ற புலவரது கருத்துப்பட, தேன்-நீர், உரைச், நெருப்புக்குச்சி போன்ற நுணுக்கிய அரிய பல தொழில்களை நாம் செய்திட்டால் நம்நாட்டிற் செல்வம் சேர்ந்-திடும் எனப் பாவலர் நமக்கு வழிகாட்டுகின்றார். நாட்டு வர்த்-தகத்திலே தோட்டமைகளும் தொட்டிமாக்களின் விளையாட்டுக்-களை அம்பலப்படுத்துகிறார். வெளிநாட்டிற்கு உத்தியோகம் தேடிச் செல்லும் நிலையற்ற தன்மையையும், ஆசிரியர்களது சம்பளப்பாடுபாடு பற்றியும் விமர்சிப்பது பாவலரது பொருளா-தார நோக்கின் திறந்த பண்பை உணர்த்துகிறது.

அன்னாரை பின்தொடர்ந்த அரசாங்கத்திலே அபி-மானம்மிக்க மிதவாதி போலக் காணப்பட்ட புலவரும் - புல-வரும் தேசாபிமானம் மிக்கவராகவும் விளங்கினர். தமது நாடு, மொழி, பண்பாடுகளிற் திளைத்தனைய விடுத்த இவர்கள் தமது தேசாபிமான உணர்ச்சியால் பொருளாதார விருத்தியும் பூர்த்தி யெறவேண்டும் எனக் கருதிப் பொருளாதார விருத்தி பற்றியும் பல கவிதைகள் பாடினர்.

உசாத்துணை நூல்கள் :

		பக்கம்
1. சாலி . இளந்திரையன்	– 'சிதோய நோக்கு'	4
2. சாலி . இளந்திரையன்	– 'சிதோய நோக்கு'	9
3. HANSKOHN	– 'NATIONALISM ITS MEANING AND HISTORY'	9
4. கைலாசபதி . க.	– 'இலக்கியம் காட்டும் தேசிய ஒருமைப்பாடு' தேசிய ஒருத்தாள் மாநாட்டு மலர் – 1975.	54
5. கைலாசபதி . க.	– 'துரையப்பாபிள்ளையும் தேசியப்பிரக்ஞையும்' பாவலர் துரையப்பாபிள்ளை- நூற்றாண்டு விழாமலர். 1972	40
6. பூலோகசிங்கம் . வை.	– 'பாவலர் சரித்திர தீபகம்'	155
7.	– 'பாரதியார் கவிதைகள்'	3
8. இளங்கதிர் . க	– 'நாவலியூர் சோமசுந்தரப் புலவரின் ஆக்கங்கள் பற்றிய மதிப்பீடு' இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாக முதுகலைமாணிப் பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை- 1974 .	183-186
9. துரையப்பாபிள்ளை . தெ. அ.	– 'சிந்தனைச் சோலை'	11
10. துரையப்பாபிள்ளை . தெ. அ.	– 'சிங்கள தேசமே' .	பாடல்: 42
11. துரையப்பாபிள்ளை . தெ. அ.	– 'சிங்கள தேசமே'	பாடல்: 41
12. துரையப்பாபிள்ளை . தெ. அ.	– 'சிங்கள தேசமே'	பாடல்: 43
13.	– 'பாரதியார் கவிதைகள்'	பாடல்:
14. சோமசுந்தரப்புலவர் . க.	– 'இலங்கை வளமும் தலைவிலாசமும்'	52
15. துரையப்பாபிள்ளை . தெ. அ.	– 'யாழ்ப்பாணச் சுவதேசக் கும்மி'	பாடல்: 41
16. சோமசுந்தரப்புலவர் . க .	– 'மதுரைனஞ்சலோபட்டமும் புலவர் வரலாறும்'	56
17. சோமசுந்தரப்புலவர் . க.	– 'மதுரைனஞ்சலோபட்டமும் புலவர் வரலாறும்'	76
18. சாலி . இளந்திரையன்	– 'சிதோய நோக்கு'	27
19. கனக. செந்திநாதன்	– 'திறவா படலை'	7

20. வேந்தனர். க. — 'நவாலியூர் சோமசுந்தரப்புலவர் ஆக்கங்கள் பற்றிய மதிப்பீடு' 198

இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனை வளாக முதுகலைமாணிப் பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை - 1974

21. கனக. செந்திநாதன். — 'எழுத்து இலக்கிய வளர்ச்சி' 24

22. PILLAI. A.M. — 'JAFFNA HISTORY'
இந்நூல் ஆதாரமாகக் கொண்டது.

23. கனக. செந்திநாதன். — 'எழுத்து இலக்கிய வளர்ச்சி' 1

24. கனக. செந்திநாதன். — 'எழுத்து இலக்கிய வளர்ச்சி' 75

25. துரையப்பாபிள்ளை. செ.அ — 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி' பாடல்: 97

26. நாதன். ப. — 'மருதனைச்சலோட்டமும் புலவர் வருவாயும்' 31

27. கனக. செந்திநாதன். — 'நிறைவாத படிகள்' 8

28. கனக. செந்திநாதன். — 'நிறைவாத படிகள்' 8-9

29. சோமசுந்தரப்புலவர் - க. — 'மதுரைனைச்சலோட்டம்' பாடல்: 143

30. சோமசுந்தரப்புலவர். க. — 'நாடகங்கள் புகழ்மாலை' 1

31. துரையப்பாபிள்ளை. செ.அ. — 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி' பாடல்: 99

32. அருணாசலபிள்ளை. மு. — 'நாடகங்கள் புகழ்மாலை' - அணிந்துரை - 5

33. சோமசுந்தரப்புலவர். க. — 'தெய்வமிழ் மக்களுக்கு ஓர் வேண்டுகோள்' பாடல்: 5

34. சிவபாதசுந்தரனார். நா. — 'சிந்தனையைத் தூண்டும் சிந்தனைச்சோலை'
பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழாமலர். 1972. 93-95

35. துரையப்பாபிள்ளை. செ.அ. — 'சிந்தனைச் சோலை' 30

36 RASANAYAGAM. C. — 'THE BRITHSH PREIOD OF THE HISTORY OF JAFFNA.' 165-171

37. துரையப்பாபிள்ளை. செ.அ. — 'சிந்தனைச் சோலை' 13

38. RASANAYAGAM. C. — 'THE BRITHSH PREIOD OF THE HISTORY OF JAFFNA.' 10

39. கனக. செந்திநாதன். — 'நிறைவாத படிகள்' 10-12

40. கனக. செந்திநாதன். — 'நிறைவாத படிகள்' 42

41. சோமசுந்தரப்புலவர். க. — 'மதுரைனைச்சலோட்டம்' பாடல்: 121

42. திலகநாதன். சி. — 'எழுத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி.' நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நினைவுமலர் – 1974. 79

43. கனக. செந்திநாதன். — 'எழுத்து இலக்கிய வளர்ச்சி' 70

44. நாதன். ப. — 'மருதனாக்கசொவட்டமும் புலவர் பரம்பரையும்'

45. துரையப்பாபிள்ளை. தெ.அ. — 'சிந்தனைச் சோலை' 26

46. துரையப்பாபிள்ளை. தெ.அ. — 'செங்கதிர்' பாடல்: 36

47. துரையப்பாபிள்ளை. தெ.அ. — 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி' பாடல்: 293

48. சோமசுந்தரப்புலவர். க. — 'தாலவிலாசம்' 7

49. நாதன். ப. — 'மருதனாக்கசொவட்டமும் புலவர் பரம்பரையும்' 45-47

50. சோமசுந்தரப்புலவர். க. — 'தாலவிலாசம்' 2

மூன்றாம் இயல்

மூன்றாம் அத்தியாயம்

பாவலர் துரையப்பாபிள்ளை - சோமசுந்தரப்புலவர் ஆகியோரின் கவிதைகள் பிரதிபலிக்கும் சமுதாயப்பிரச்சினைகளும் சீர்திருத்தமும்

அ: சமுதாயச் சீர்திருத்தம் :

சமுதாயத்திற்கும் இலக்கியத்திற்கும் இணைப்புப் பாலமாக விளங்குபவன் கவிஞன் என்பவன் மானுடப் பண்பிலே மலர்கின்ற மலர்களிலே ஒருவன். அவனுக்கெனச் சில தனித்துவ இயல்புகள் உண்டு. உலகத்தையும் அதன் விந்தைகளையும் மனிதனையும் அவன் வாழ்க்கைப் போக்குகளையும் தன் இதயமாகிய பூதக்கண்ணாடியின் வழியாகப் பார்ப்பது வழக்கம். அந்தக் காட்சியில் உயர்வாகத் தோன்றுவனவற்றை அள்ளித் தழுவி ஆனந்தக் கூத்தாடுவதும் இழிவாகத் தோன்றுவனவற்றைச் சாடுவதுமே அவன் வாழ்க்கை. இந்த உயர்வு தாழ்விலே தன்னலம் பிறர் நலம் எனப் பிரித்துப் பார்ப்பதில்லை. உயர்வை எங்கிருந்தாலும் கண்டு உவகை கொள்கின்றான். தாழ்வு எங்கு தலை தூக்கினாலும் அதனை இடித்துரைக்கின்றான். கண்ணெதிரே உள்ள நிகழ்காலச் சமுதாயம் மேடுபள்ளங்களும் வேதனைகளும் நிறைந்ததாகத் தோன்றினால் அந்தக் கவிஞனின் உள்ளமும் துடிதுடிக்கவே செய்யும். அவை நீங்கிச் சமுதாயத்தில் ஒர் நன்னிலை ஏற்பட வேண்டும் என அவன் விரும்புகின்றான். அவற்றின் வெளிப்பாடே சமுதாயச் சீர்திருத்த இலக்கியமாகும்.[1]

சமுதாயச் சீர்கேடு என்ற போர்வைக்குள் சாதி, பெண்ணடிமை, சீதனம், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அறியாமை மூடநம்பிக்கைகள் போலி ஆசாரங்கள் என்ற புல்லுருவிகளே அடங்குகின்றன. இவற்றை ஆக்கமும், அழிவும் அகற்றலும் தேவையான வினைய - மனிதனுக்கென்றான் உண்டு என்பதனைக் கவிஞன் தன் உளமெச்சிப் படைப்புக்களிற் பிரதிபலிக்கின்றான். பிற்காலத் தலைமுறையிடம் இறந்த காலப் பெருமை -

பற்றிய பேச்சு அவன் உள்ளத்தை வளித்துக் கவ்வி அவனைச் சிந்தனைக்கும் செயலுக்கும் தூண்டுகின்றது. இவ்வம்சம் எடுத்துக் கவிஞர் வரிசையில் அடங்கும் பாவலர் - புலவர் அவர்களையும் பற்றிப் பிடித்துக்கொண்டுள்ளது. அடிமைப்படுட்ட மக்கள் நாட்டிற்கும் படும் பெருமை வேறும் மதி தேவையுட்டது. தாங்கள் நாடு, மொழி, நாகரிகம் என்ற உணர்வே இன்றித் தாழ்ந்து மனம்-பான்மை கொண்டு மக்கள் சோர்ந்து கிடக்கும் நிலையில் அந்த மதி தேவையுட்டது. அதை இக் கவிஞர்கள் தமது படைப்புக்-களால் மக்களுக்கு ஊட்டினர்.

சமுதாயத்தில் விழுதுகள் இறங்கித் தனதுத்-துள்ள ஏற்றத் தாழ்வுகளையும், சாதிக் கொடுமைகளையும், சமயப் பூசல்களையும், பெண்ணடிமையையும், தொழிலாளர் துயரத்தையும் செல்வர்கள் வல்லாண்மையையும் வேருடன் பெயர்த்தெறியும் விதியில் வேட்டைக் கொண்டு அடிப்படைகளை மாற்றுகின்ற புரட்சிகளைத் தம் வாழ்முழுதும் பாவலரும், புலவரும் செய்து வந்-தனர். "சமுதாயத்தைச் செல்லரித்துச் சீர்கெடு வைத்திருக்கும் எண்ணங்களையும் ஏற்பாடுகளையும், அவற்றுள் ஏற்பட்டிருக்கும் கோரக் கொடுமைகளையும், ஆணவத் திமிர்த் தாண்டவங்களையும் கண்டு மனங்குன்றிக் கொந்தளித்துக் கொதிப்படைந்தோர் சிலரேனும் தோன்றித்தான் வருகின்றனர். அவ்வப் போது இச்சமு-தாயக் கொடுமைகளைக் கண்கெதரியப் புரப்படுத்தான் செய்-கின்றனர்." என்ற கூற்றிற்கு எடுத்துக் காட்டாகப் பாவ லரும் புலவரும் விளங்குகின்றனர். இலக்கியத்தையும் இச்சீர்-திருத்தத்திற்குப் பயன்படுத்துவது தவறுகாது என எண்ணி மக்-களை நோக்கி அவர்கள் இலக்கியக் கோல் ஏடுப்பினர்.

சமுதாயத்தால் கவிஞன் பாதிக்கப்படுகின்றான். அத்தோடு சமுதாயமும் அவனால் பாதிக்கப்படுகின்றது. இலக்கியம் வாழ்வை உருவாக்கி அணைப்பதோடு அதைச் சீரமைக்கவும் செய்கிறது என்பது இவர்கள் கிடைத்த கவிதைகளுக்கும் பொருந்துவதாகும். பாவலர் - புலவர் அவர்களது வாழ்க்கையைச் சமு-

தாயம் பாதித்திருக்கிறது. அதாவது வறுமை, கொடுமை, மதமாற்றம் விருத்தி போன்ற சமுதாயச் சிக்கல்கள் இவர்கள் உள்ளத்தை ஆட்கொண்டு தாக்கியிருக்கிறது எனலாம். எனினும் அச்சிக்கல்களைக் கண்டு அஞ்சியோடாமல் அவற்றை எதிர்த்துத் தம் பாடற் பொருளாக்கிக் கொண்டனர்.

பாவலர் - புலவர் அவர்களது சமகாலச் சமுகநிலையினை நோக்கின், சுதந்திரமான கல்வியுரிமை இருக்கவில்லை, அதிகாரச் சிந்தனை இருக்கவில்லை. வீழ்ச்சியும் வறுமையும் மக்களை வாட்டி வதைத்தன. சமுதாயத்தைச் சீரழித்து ஆரவாரமாக வாழ்ந்தனர். உணவுத்து உருக்குலைந்த தொழிலாளர் வாழ்வில் அமைதியில்லை. உரிமைப்பிரச்சனை உறுதியில்லை. காதல் மணம் நிறைவேறாத் தடைகள் பல விதிக்கப்பட்டன. இந்தத் தருணமான நிலைமைகளைக் கட்டிக் காப்பதிற் சாதியும் சமயமும் வெற்றி கொண்டன. மக்கட் குலத்தில் வேற்றுமைகள் கற்பித்துப் பல நூறு சாதிகள் வகுத்துத் தனிமனித உரிமைகள் பறிக்கப்பட்டன. இவ்வகையாக வளர்ந்து வரும் அறிவுலகத்தினர் பக்கம் தமது விழிகளைத் திருப்பவொட்டாமல் மூடுமந்திரங்கள், மூலவழிபாடுகளால் மிக விழிப்போடு தடுக்கப்பட்டனர். இத்தகைய பிற்போக்குகளைத் தகர்த்தெறிந்து சமுதாயத்தைச் சீர்திருத்த பாவலரும், புலவரும் முனைந்தனர். ஆங்கிலம் கற்று வந்த நடுத்தர வர்க்கம் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்று வளர்ந்து வந்த காலகட்டத்தில் வாழ்ந்த பாவலரும் புலவரும் அந்தப் புதிய வர்க்க வளர்ச்சியாற் சமுகத்திற் காணப்பட்ட முன்பாகுகளை இனம் கண்டு கொண்டனர். அதன் பயனாக அவர்களது கவியுள்ளத்தில் பற்பட்ட தூண்டுதல் சீர்திருத்தக் கவிதைகளாக மலர்ந்தன.

பாவலரது 'வெங்கல் ராஜனுக்கு' 'இதோபதேச தோரண மஞ்சரி' 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி' போன்ற பாடல்கள் சிறந்த சீர்திருத்தக் கருத்துக்களை வெளிப்படுத்தின்றன. காலகட்டத்திலும் இலட்சியத்திலும் பாரதியை ஒத்த தன்மை கொண்ட பாவலர் சீர்திருத்த முயற்சிகளிலும் தேவை பாரதி வழியைப்

பின்பற்றியவரே. புலவரது பாடல்களான 'மருதனஞ்சலோட்டம்' 'சிறுவர் செந்தமிழ்' 'இலங்கைவளமும் காலவிலாசமும்' நாடகங்கள் புகழ் மாலை' போன்ற பாடல்களிலும் சீர்திருத்தக் கருத்துக்கள் தலைக்காணலாம். எனினும் இருவரது சீர்திருத்த இலக்கியங்களையும் ஒப்பிட்டு நோக்கும் போது புலவரது சீர்திருத்த உணர்வினைவிட பாவலரது சீர்திருத்த உணர்வு தீவிரமாக இருப்பது அவர் பாடல்கள் மூலம் புலனாகின்றது. இருவரும் தீயபழக்கங்களையும் படுக்கவழக்கங்களையும் கண்டிக்கின்றனர். தீர்வுந்து வழிகாட்டுகின்றனர். இவரது செயற்பாடுகளும் ஒரேவகையினதாக இருந்தபோதும் செயற்படும் விதத்தில் பாவலர் தீவிரவாதியாகவும் புலவரைவிட ஒருபடி மேலோங்கியும் விளங்கினார். இந்தவகையில் பாரதி அல்லது பாரதிதாசனுடன் பாவலரும், கவிமணியுடன் புலவரும் ஒப்பிடக் கூடியவர்கள். யாவரும் தம்நலம் பேணாது தமது நாட்டுநலம் கருதி உழைத்த சீர்திருத்தச் செம்மல்கள் எனலாம்.

பாவலர் புலவர் அவர்களது பாடல்கள் பிரதிபலிக்கும் சமூதாய சீர்திருத்தம் என்றசத்தை நோக்கும்போது, அவர்களது சீர்திருத்தம் வெவ்வெவ்ற் தூரைகளில் படர்ந்து என்பதனை ஒரு வரையறைக்குட்படுத்தி ஆராய்வது நலம் பயக்கும். முதலில் இருவரது கவனத்தையும் நாட்டில் – சமூகத்தில் நிலவிய பிரச்சினைகள், படுக்கவழக்கங்கள் ஆகியன அக்கறையுடன் ஆராய்ந்தன. சாதிப் பிரச்சினை, பெண்ணடிமை, தீண்டாமைப் பிரச்சினை, கலாச்சாரப் பிரச்சினை என்பன அவர்களது சீர்திருத்தப் பாணியில் முக்கியம் பெற்றன. இருவரது சீர்திருத்தக் கருத்துக்களையும் நோக்கும் போது, சீர்திருத்தவழியில் மாற்றமுடையதாக இருவருக்கும் உடன்பாடு இருக்கவில்லை. பாவலர் மிகத் தீவிரவாதியாக நின்று புரட்சி மேற்கொள்ளும் இடங்களில் புலவரது உணர்வு தீவிரமடையவில்லை. ஒருதலைக்காட்டாக சீதனம் எனும் சமூகத் தொடுமையால் சீர்கிழப்பின்றி வாடும் பெண்களின் நிலையையும் துன்பத்தையும் காட்டித் தீவிரமாகப் பாவலர் சீதனத் தொடுமையைக் கண்டிக்குமிடத்தில் புலவரது கவனத்தில் இச்சீர் கேடு இடம்பெறவில்லை என்றே கூடறலாம். இவரது மனிதாபிமான-

உணர்ச்சித் தன்மைகளை உருவாக்கிய சக்திகள் ஏறக்குறைய ஒரே மாதிரியானவையாக இருந்த போதும், உணர்ச்சி வெளிப் பாட்டில் இருவரது கவியும் சிறிது ஏற்ற இறக்கமுடையனவையே. இந்த வேறுபாடு மனதிற் கொண்டுதான் இவர்கள் பாடல்கள் பிரதி பலிக்கும் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை நோக்க வேண்டும்.

அவர்கள் காலத்துச் சமுதாய ஏற்பாடுகளில் ஒன்று சாதி அமைப்பாகும். சமுதாயத்தின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தும் இவ்வமைப்பு நான்கு வருணப்பாகுபாட்டின் அடிப் படையில் உருவாக்கப்பட்டது. காலப்போக்கிலே தனக்குள் பல பிரிவுகளை உண்டாக்கி மக்களிடையே வெற்றுத் தாழ்வை உண்டு பண்ணுகிறது. "சமயத்தின் சமுதாய வெளிப்பாடே சாதி" என்பது கோசாம்பி என்பவர் கருத்து[3] என வைகலாசபதி கூறுகிறார். மனித சமுதாயத்திற்குச் சாதி இழைக்கும் மாற்ற இயலாத கொடுமை கள் பல. அக்கொடுமைகள் கண்டே சமுகசன வாதிகளான கவிஞர்கள், உள்ளம் குமுறுவதை அவர்களது கவிதைகள் பிரதி பலிக்கின்றன.

பல நூற்றாண்டுகளாகத் தமிழர் சமுதாயத்திலே தொடர்ந்து வந்த இந்தச் சாதி அமைப்புமுறை ஏறத்தாழ பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளிலிருந்து வலுப்பெற்று வந்தமையைத் தமிழர் சமுதாய வரலாற்றிலிருந்து அறியமுடிகிறது. இந்தியக் கவி காலாச்சாரவங்கள் எடுத்தும் பிரதிபலித்தன. இவ் வகையில் எடுத்துத் தமிழ்ச் சமுதாயத்திலும் சாதி அமைப்பு பல நூற்றாண்டுகளாக நிலவி வந்தது. தமிழ்நாட்டில், மேலைட்டுச் சீர் திருத்தக் கருத்துக்களாலும், கல்வி முன்னேற்றத்தாலும் மக்கள் தம் தாழ்வான நிலையை உணர்ந்து விழிப்படையத் தொடங்கினர். பாரதி, பாரதிதாசன் போன்ற சமுகப் புரட்சி வாதிக் கவிஞர்கள் பலர் தோன்றி, மக்கள் மத்தியிலே தம் கவனைக் கணிகளாற் சமுதாயப் புரட்சி செய்து இச்சமுதாயப் புல்லுருவிகளைக் களைந் தெறிய முற்பட்டனர். அவர்களின் சமகாலத்தவராக எடுத்தும் பல கவிஞர்கள் தோன்றிச் சமுதாயச் சீர்திருத்தம் வேண்டிப்

புரட்சிக் கவிதைகள் படைத்தனர். இச்சிந்தரும்பாவை யில் அக்கவிஞர் வரிசையில் குறிப்பிடத்தக்க இடம் வகிக்கும் பாவலர். புலவர் அவர்களது இலக்கியப்பணி பெல்லாகையில் இருந்தது என்பது இங்கு நோக்க வேண்டியதாகும்.

பாவலரும், புலவரும் தம்மைச்சுற்றி சமுதாயத்திலே, உயர்சாதியினர் எனத் தங்களை உயர்த்திக் கொண்டோர் உண்டு பொழுக்கும் கீழ்மையும், தாழ்த்தப்பட்டோர் எனத் தூக்கப்பட்டோர் அவர்களுக்கு அஞ்சிக் குறுகும் கீழ்மையையும் கண்டனர். மக்களில் ஒரு பகுதியினர் இடிக்கவும் கூடாதவர் என்று சேர்ந்து கிடக்கும் இழிநிலைக்குச் சாதியும் ஒரு காரணமாக அமைந்தது என்பதை உணர்ந்தனர். சமுதாய ஊழல்களை வெடுக்க வளந்த பாவலர்,

"கீழ்சாதி யாரொரு மேசை முயன்று
கிளர்ந்து நீக்கு வருதலின்றிப்
பாழாயிருக்க விருதலம் சாதியின்
பாதக மல்லவோ சங்கமின்னே" 4

எனச் சாதி அமைப்பு முறையால் உரிமையற்றிருக்கும் தாழ்த்தப்பட்டோருக்காகப் பரிதாபம் கொள்ளும் பாவலரது நியாய நோக்கு தெரிகிறது. ஒவ்வொரு வீட்டிலுக்கு ஒவ்வொரு சாதியாய், உலகிற் பிரிவினைகள் கூடும் போது, நம்நாட்டில் ஒற்றுமை பெருகிச் சாதியின் ஆக்கியம் தோன்றுவது எப்படி? எனக் கேள்விக் கணை தொடுத்து நம்மையே சிந்திக்க வைக்கிறார். சாதிபேதம் பாராட்டுவது தமிழினத்தின் ஒற்றுமைக்கே பங்கம் விளைவிக்கும் எனக் கூடி ஆக்கியம் வேண்டுகிறார். புலவரிடத்தும் இந்தப் பண்பு மிளிருவதை அவர் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

"ஆவதுமொன் றோதுயர் கூடியுமொன் றோநாங்கள்
கூடிப் பிறந்த கொதரே
ஆவதுமொன்றே யெங்கள் நாடுமொன் றோகூடி
நல்ல சுதந்திரம் நாடுவமே" 5

இங்கு புலவர் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் முதலிய—

வற்றைக் கருதி நிற்கும் மனோபாவம் வெளிப்படுகின்றது. இச் - சாயக் கோட்டான சாதி அமைப்பின் கொடியாண்டி செய்து மக்- களைச் சிந்திக்க வைத்துப் படிப்படியாக இவ்வேற்றுமையை ஒழிப்- பதற்குப் பாவலரும் புலவரும் வழிகாட்டினர். "அடிப்படையான பெரும் மாற்றத்தை வேண்டாது படிப்படியான திருத்தங்களை உண்- டாக்குதல் சீர்திருத்த வாதிகளின் கருத்தாகும்."6 இக்கூற்றிற் கொப்பவே பாவலரும்,

"சாதியை ஒரே முறையினில் நம்மவர்
தள்ளுத லொழிந்து கண்ட கோரம்
நீதியு டன்றி துயிந்தி தாயதை
நீக்குதல் கருதுடன் சங்கமிங்ஙன"7

எனப்பாடியது சீர்திருத்தத் தத்துவப் பண்பினுக்கோர் எடுத்துக் காட்- டாகும். தனிமனித ஒற்றுமையே முதலாகட்டுமனை ஒற்றுமையை ஏற்படுத்தும் என்ற கருத்தை புலவர்,

"அஞ்சு விரலுஞ் சேர்ந்திடில்
அரிய கருமம் புரியலாம்...."8 என நல்லுலகை

அணுகத்துப் புலப்படுத்தியுள்ளார்.

"சாதியில்லை யென்று பொதிக்கிறீர் - சாதி
தம்மாலா னமட்டும் சாதிக்கிறீர்...."9

எனப் பாவலர் சாதியமைப்பின் தொற்றத்தைத் தண்டித்தும் ஒவ்- வொரு சாதித்குள்ளும் இருக்கும் உட்பிரிவுகளை நீக்குவதும், பொதுக் கொள்கைட்டங்களிலே சாதி வேற்றுமை பாராட்டாது எல்லோரும் ஒன்று சேர்ந்து உறவாடுவதும் நல்ல பயனளிக்கும் எனக் கூறிச் சாதி ஒழிய வழிகாட்டுகின்றனர்.

"நில மதுக் கொள்ளைகளை சாதி தொலைந்தக் காரணம்"10 என்ற அம்பேத்காரின் கூற்றுக்கிணங்க பாவலர் - புலவர் அவர்களது காலத்தில் நடைபெற்ற கிறிஸ்தவ மதமாற்ற முயற்சி களும் சாதி அமைப்பை வலுப்படுத்தியிருக்கலாம். புலவரது 'ஏறுத மேட்டிற்கு இரண்டு தலை' என்ற பாடல் சாதிப் பிரச்சினையான -

சமூகப் பிரச்சனையைச் சிந்தி கொடிகாட்டிச் செல்கின்றது. அதில் வரும் தாயமாமுதலி நீலன் எனும் பாத்திரங்களால் தாழ்த்தப் பட்ட மக்களின் நிலையையும், தீண்டாமைப் பேய் அக்காலத்தில் நிலவிய தன்மையையும் எடுத்துக் காட்டி அதனைக் கண்டிக்கிறார்.

"வெண்ணீற்றுக் குறிவைப்பார்
மிதியடியே வேதிப்பார்
உண்ணுவது கொடுவுயு புலால்
உரைப்பதெலாம் பொல்லாப்பே" [11]

உயர்சாதியினரின் போலி ஆசாரங்களை வெளிப்படுத்திக் கேலி செய்வதனை இப்பாடல் மூலம் தெளிய முடிகின்றது.

தமது சொலச் சமுதாயத்தில் நிலவிய சாதி, தீண்டாமை எனும் சமூகப்பிரச்சனைகள், சீர்திருத்தச் சமுதாயத்திற்குத் தடையாக இருக்கும் என்பதனை பாவலரும் புலவரும் கண்டு அச்சீர்கேடுகளை ஒழிக்க அர்வம் கொண்டொழுந்தனர். இவ்வார்வமானது பாவலரைப் பொறுத்தவரையில், அவர் வாழ்ந்த காலப்பின்னணியிலும் அவரது சமூக அந்தஸ்துப் பின்னணியிலும், இச்சீர்கேடுகளை எதிர்த்துத் தம்கருத்தைத் தெரிவிப்பதற்கு அவருக்கே அதிக துணிவிருந்த தன்மையினைப் பிரதிபலிக்கிறது. இதனை அவர் பாடல்களின் முலமும் உணரலாம். இத்தீவிர ஆர்வம், துணிவு பாவலருடன் இப்பிரும்போது, புலவரிடம் தணிவானவையே தென்படுவதை அவரது பாடல்கள் மூலம் உணர முடிகின்றது.

ஆ: பண்பாடு:

பாரம்பரியமாக முன்னோர் நடைமுறையினைத் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் மரபுரீதியான பழக்கமே பண்பாடாகும். மனித உணர்வுடன் ஊறித் தொடர்ந்து வரும் பண்பாட்டினைத் திடீரென மாற்றவோ களைந்துவிடவோ மனிதனால் முடியாத போதும் காலத்திற்குக் காலம் ஏற்படும் சமூகமாற்றங்கள் ஏனவிற்காவது பண்பாட்டம்சங்களைப் பாதிக்கச்செய்கிறது. இந்தவகையில் ஈழத்தில் அந்நியராட்சியினது ஆதிக்கத்தின் போதும், அதன்பின்பும், இதுவரை ஈழத்தவராலே தமக்கெனத் தனித்துவத்துடன் போற்றப்பட்டு வந்த பண்பாட்டம்சங்கள் ஏனவிற்கு சிதைவடையத் தொடங்கின. தமது காலத்தில் நிலவிய சமூகநலனுக்குப் பாதகமான பண்பாட்டு அம்சங்களை பாவலரும், புலவரும் தமது பாடல்களினூடு பிரதிபலித்துள்ளதுடன் சீர்திருத்தப் பாதையையும் காட்டியுள்ளமை அவர்களது சீர்திருத்தப்பாடல்களின் சான்றாக முடிகின்றது.

தமது காலத்தில் நிலவிய, வாழ்வின் மேம்பாட்டிற்குதவாத பழக்கவழக்கங்களைக் கண்டித்து தொடர்ச்சீர்கேடுகளை எடுத்துக் காட்டி, கல்வியின் முக்கியத்துவத்தினை வற்புறுத்தி சமய ஒழுக்க அறநெறிப் போதனைகள் செய்தனர். பழமைக்கும் புதுமைக்கும் இணைப்புப் பாலமாக விளங்கிய பாவலராலும் புலவராலும் பழம்பெருமை வாய்ந்த தமது முன்னோரது சில பண்பாட்டம்சங்கள் சீர்கெடுவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அதேசமயம் அந்நியராதிக்கத்தால் ஏற்பட்ட சில புதிய அம்சங்களையும் ஏற்கப் பின்வாங்கவில்லை. பழமையும் - புதுமையும் கலந்த ஒரு சீர்திருத்தமான சமுதாயத்தை உருவாக்க முனைந்தனர்.

சமயமும் சாதியும் சமுதாயத்தை அரித்துத் தின்னும் புற்றுநோய்களாகத் தோன்றின. பெண்களும் தொழிலாளர்களும் அவற்றினால் பாதிக்கப்பட்டுத் தன்மதிப்பை இழந்தனர். இந்நிலையில் மாற்றத்தை

விற்பருத்தினால் ஒழிய சமுதாயத்தினை தெளிவாக் காணமுடியாது எனக் கருதினர். பெண்களுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும் என்றனர். ஆனால் அளவு கடந்த சுதந்திரத்தையோ அதனால் பெண்கள் கட்டுமீறிப் போகும் தன்மையையோ விரும்பவில்லை. தொழிலாளர் உரைமைப்பிரச்சினை மதிப்பைப் பெறுதல் வேண்டும், பொதுவுடமை மலர்தல் வேண்டும் என விரும்பினர். நாட்டிலே தொழில்வளம் பெருக, நம்பிக்கை பெரும் இயற்கைச் செல்வங்களை உபயோகப் படுத்தத் தூண்டினர். தொழிற்நுணுக்கல்வி வேண்டுகின்றனர். சமுதாயத்தில் சீரழிவிய மக்களது பழக்க வழக்கங்களினால் ஏற்படும் நன்மையையும் தீமையையும் எடுத்துக் காட்டினர்.

மேலைநாட்டு நாகரிகத்தின் ஈடுபாடு கொண்டதால் ஈழத்து மக்கள் தேடுக்கமும் குன்றத் தொடங்கியது. அந்நியர் ஆதிக்கத்தினால் ஈழத்துச் சிங்கள, முஸ்லீம், பறங்கியரைவிட யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்கள் கலாச்சாரத்திலேதான் அதிக பாதிப்புக்களை – மாற்றங்களை ஏற்படுத்தின எனலாம். சைவசமயம் நன்னிலையிழந்தது. பாம்புக்குத் தீக்காட்டி, மீனுக்கு வால்காட்டும் மலங்குபோலச் சைவருக்குச் சைவராயும், கிறிஸ்தவருக்குக் கிறிஸ்தவராயும் யாழ்ப்பாணப் பிரதேச மக்கள் நடந்தனர். நாவலரவர்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்ட சைவசமயம் தன்னிலையிழந்து தொடங்கியது. எனவே தான் 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' ஆசிரியர் "ஐரோப்பிய நாகரிகம் பழக்க வழக்கங்கள் ஆகியன யாழ்ப்பாணத்தாரின் ஏற்றத்தையும் தோற்றத்தையும் அழித்தலும் குலவிழ்ச்சைகளாயின" [18] என்றார். இவ்விதம் மக்களின் ஏதுக்கம் குன்றிய நிலையினை அறிஞர்கள் எடுத்துக் கூறியிருப்பதனால் அந்நிலைகண்டு பாவலரும் புலவரும் கூடக் கவலையுற்றனர்.

புலவர் தமதுகாலச் சமுகக் குறைபாடுகளை உணர்ந்து அவதானித்தவர் என்பதனை 'உயிரினங்கீதம்' எனும் அவரது நாடகத நூலினையும், சிறுவர் செந்தமிழ்ப்பாடல்களையும் அறியலாம்.

'உயிரினங்குமரன்' காடுகத்திற்ற கோபன், கொலைஞன், காமன், குரோதன், ஆணையன், கனியன் ஆகிய வீரர்களின் தெய்வங்களைப் புலவர் எடுத்துக் கூறும் பகுதி அக்காலச் சமூகநிலைமையை ஒருக்கங் இன்றிய நிலைமையைப் பிரதிபலிக்கின்றது. 'சிறுவர் செந்தமிழ்' பாடல்களில் அறத்தையும் நீதியையும் போதித்த புலவர் அறஒழுக்கக் கருத்துக்களை விளக்குவதை முக்கிய நோக்காகக் கொண்டு எழுதிய நூல்களாகத் 'தந்தையார் பதிற்றுப்பத்து' 'சுகாதாரக் கும்மி' ஆகிய இரண்டும் விளங்குகின்றன. அத்துடன் 'சுகாதாரக் கும்மி' மக்களின் வாழ்விற்கேற்ற சுகாதாரக் கருத்துக்களைக் கூறுவதாகவும் அமைந்திருக்கிறது. தமது தந்தையார் மேல் நாவலரது கொள்கைகளையும், கைவல்லியையும் அறிந்த புலவர்,

"
. . . . . .

வைவரும் தெய்வத் தமிழும்நன் தோய்ந்தச்
செய்தவப் பயனைய்ந் திருவுருக் கொண்ட
பூமலி மெய்ப்புகழ்ப் புண்ணிய மூர்த்தி
நாவலர் பெருமான் நல்லுரை எடுத்தே
ஆவலோ டெடுத்தட் தனரபல ரினியர்" 13

எனத் தமது தந்தையார் பதிற்றுப்பத்திற் கூறுவது அவரது வைவசமய ஈடுபாட்டையும், அதனைக் கடைப்பிடித்தொழுகிய அறிஞர் மேலுள்ள ஈடுபாட்டையும் காட்டுகின்றது. இந்நூலில் அமைந்துள்ள கற்பித்தபத்து, ஒழுக்கமுரைத்த பத்து, விதித்துரைத்த பத்து, முதுமொழிப்பத்து ஆகிய ஐந்து பத்துக்களிலும், புலவர் தமது தந்தையார் தமக்குக் கூறிய அறிவுரைகளைப் போற்றிக் கூறுவதன் வாயிலாக அறஒழுக்கக் கருத்துக்களைத் தெளிவாகக் கூறியுள்ளார். ஏனைய ஐந்து பத்துக்களும் பெரும்பாலும் புலவரின் தந்தையாரோடு தொடர்பானவையாகவே அமைந்துள்ளன.

"ஈரமுறுதல் நாளுமை யங்களுள வெனினும்
தாங்கள்மை யத்தீனைய நிந்நாடட வாமல்
நேயமுரை கூறியாரு வர்க்கொளவர் தீநி

....விருயாண்டி செய்தல்தமிழ் நாகரிக மாமோ" [14]

எனப் புலவர் கூறுவது அக்காலச் சமயச் சீர்கேட்டினையும், மக்களது இழிவுமனையும் புலப்படுத்துவதாகும்.

ஆங்கிலக் கல்விவளர்ச்சியும் — மத்தியதர வகுப்பின் தோற்றமும் — எழுச்சியும் — மதமாற்றமும், யாழ்ப்பாணச் சமூகத்தில் வற்புருத்திக் கொண்டிருந்த மாற்றத்தின் காக்கம் காரணமாக முன்னைய கவிதைமரபு மாற்றத்திற்குள்ளாயிற்று. உருவத்தில் மட்டுமன்றி உள்ளடக்கத்திலும் கவிதை மரபு மாறியதனைப் பாவலர் பாடல்களிற் காணலாம். தொடக்கத்திற் கிறிஸ்தவராயும் பின்னர் சைவராகவும் விளங்கிய பாவலர் சமூக நோக்கிற் சமயச் சார்புணர்ச்சி வெப்படாது ஒரே நிலையில் நின்றமையினை முதலிற் பாடிய கீதரச மஞ்சரியிலும் பின்னர் பாடிய 'யாழ்ப்பாணவைபவதீபக' இயல்பிலும் உள்ள கருத்தொருமைப்பாடுகள் மூலம் காண்டு கொள்ளலாம். பாவலரது சமகாலத்தில் வாழ்ந்த பல அறிஞர்கள் கிறிஸ்தவ மதத்திலிருந்து இந்துமதத்திற்கும், இந்துமதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கும் மாறினர்கள். கல்வித் தேவைக்காகவும், பொருளாதார காரணங்களுக்காகவும் கிறிஸ்தவராக வாழ்ந்த பாவலர் தமது 'சிவமணிமாலை' பிலே தமது கருத்தை வாழ்விற்காக இயற்றியுள்ளார்.

" அந்திலை சைவமென்றொரு சமயம் — இந்து
அரசியற் சைவமென் றொருசமயம்
தாழ்ந்தன் பெருக்கிவொரு சைவசமயம் — எனத்
தாபிக்கிருள் நில நிதசமயம் " [15]

என அக்காலச் சமயவாதிகளின் போலி வேடங்களைக் கிழித்தெறிய முற்பட்டுள்ள. சைவசமயத்தின் பழம்பெரும் தன்மையினைக் காட்டி, சீர்கெட்டு நிற்கும் இன்றைய நிலையினைன்றும் மாறி தன்னிலையை மேம்படுத்தி அடையும் என வழிகாட்டுகிறார். சைவசமயச் சீர்திருத்தம் வேண்டி நிற்கும் இவ்விடங்களில் பாவலரது கருத்துக்களும், புலவரது கருத்துக்களும், சீர்திருத்த முயற்சிகளும் ஒரே தன்மை வாய்ந்தனவை என்றே கூறலாம். பாவலர் தம்மதத்தினின்றும் நீங்கி கிறிஸ்தவ—

மதத்திற் சேர்ந்தாராயினும், வைணவச்சார்பு அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து அவரால் விலகிநிற்க அவரது மனிதாபிமான உணர்வு விடவில்லை என்றே கூறலாம்.

"சமூக நலனுக்குப் பாதகமான பண்புகளை ஒதுக்கிச் சமூக சீர்வாக்கத்திற்கு உதவக் கூடிய ஆளுமையை வளர்க்கும் உளவியல் தனிமனிதருக்கு ஏற்படுத்துவதில் ஈடுபட்ட பாவலரை அனைத்தியான ஒரு சமூக சீர்திருத்தவாதி எனலாம்" [16] என்ற கூற்றிற்கேற்ப பாவலரும் தமது சமூக நிலைமையின் உன்னிப்பாகக் கவனித்து சமூகங்கி, நாட்டிற்கு நன்மை பயக்கும் வழிமுறைகளைக் காட்டுகிறார். நாட்டின் தொழிற் சீர்கேடுகளைக் கவனித்துத் தொழில்வளம் பெருகவும், தொழிற்கல்வி வளரவும் கருத்துக்களைத் தம்பாடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி'யில் வைத்தொழில், கிருஷிகம், கூட்டுமுயற்சி, வர்த்தகம் போன்ற பாடல்களும் பாவலரது சமூகப் பொருளாதாரச் சீர்திருத்தக் கருத்துக்களைக் காட்டி நிற்கும் எடுத்துக் காட்டாகும்.

"வைத்தொழில் செய்திட அருவருப்பு – யாரும்
கவண்டுமென்று வேலையிற் பெருகிருப்பு
உத்தமர் புத்தியில் மிகு வெறுப்பு – கிட்டம்
சென்றுமில்லாததிற் சுறுசுறுப்பு" [17]

என அக்கால மக்கள் நிலையினைக் கண்டனம் செய்து,

" எங்கள்தே சத்தினுக் கேற்ற புதுப்பயிர்
இன்னென்ன தென்பதை நன்குணர்ந்து
பங்கமில் லாம லவற்றைச்செய் தால்நற்
பயனுந் தென்னையோ சொல்கமின்னே" [18]

எனச் சீர்திருத்தப் பணைசாட்டும் தன்மை புலவரது கருத்துக்களுடன் தொடர்புடையது. செய்யுள் கவத்தின் வடிவமுடையோ கூடன் தீர்க்கவும் போதாத நிலைமை எங்கள் கவக்காரர்க்குரியது என்பதனைக் காட்டி, அவர்களை ஆட்டிப் படைத்துச் சுரண்டி வாழ்ந்த ஒரு உயர்ந்த வர்க்கத்தினரைச் சாடுகிறார்.

யாழ்ப்பாண மக்களின் தாழ்விற்கான காரணங்-
கள் அறிவுறுத்தப்பட்டு வாழ்விற்கான வழிவகைகள் பாவலர்
பாடலில் வலியுறுத்தப்படுகின்றன. கற்றவர்கள் உத்தியோகம்,
உத்தியோகம் என அலைந்தனர். அவர்களின் அவலச்சிக்
கண்ணுற்ற பாவலர் " சூடுன்றும் வெப்பின்னாது உலகம்" என்ற
உண்மையினை உணர்ந்தார். பயிர்ச்செய்கையும், கைத்தொழிற்முய
பண்பு வாய்ந்த தொழில்கள் என்பதனை வலியுறுத்தினர். விவசா-
யத்தைச் சிறப்பாக மேற்கொள்வதற்குப் பலவழிவகைகளைக்
கூறிவரும் நெடுகட்டத்தில்,

" நீர்மெத்த வுள்ள நிலாவரை தன்னை
நீரென்று நல்ல நிதங்கு செய்து
பார்மெச்ச கீந்தநன் னாட்டைநீர்ப் பாய்ச்சுதல்
பண்பல்ல வேசொல்து சங்கமின்னே " 19

என்ற அவரது கனவு இன்று நனவாகி வருவதும் கவனித்தற்-
குரியது.

நாடு பொருளாதார உறுதிப்பாட்டை அடையும்
போதுதான் நம்மிடம் பல்வேறு முன்னேற்றங்களையும் அடைய
முடியும் என்பதனைப் புலவர் தமது பாடல்களிற் புலப்படுத்தியுள்ளார்.
அதற்காக நம்நாட்டுக் கற்பகதரு போன்ற இயற்கைச் செல்-
வங்களைப் பேணிப் போற்றும்படி கூறுகின்றார். இச்செல்வங்களை
நாம் அலட்சியப்படுத்துவதால் ஏற்படும் தீமைகளையும், முக்கிய-
மாக நம்நாட்டில் பொருள் வளம், செல்வவளம் அரியாய-
மாக அங்கியதாற் சிறண்டப்படுவதனைக் கண்டிக்கின்றார். 'இவர்-
தைவளம்தோலவிலாசும்' என்ற நூலில் இலங்கையின் இயற்கை-
வளத்தையும், பெருமையினையும் காட்டியவர், தமது தொழிற்
பாடல்களில் நமது பாரம்பரியத் தொழில்களின் மகிமையைக்
காட்டுகிறார். நெசவுவேலை, சுருட்டுவேலை, பாய்பெட்டிபின்னவேலை,
தச்சுவேலை, பொன்வேலை, சாராயம், தோனி, சுருப்படிவடிக்கும்
வேலை, கயிறு திரிக்கும் வேலை என்பவற்றைப் பாடிவந்த புலவர்

" என்ன தொழில் செய்தாலு மெம்பாடு படிறும்

எங்கள்கனி யிரவுமிடி யிரவும்கிடி யாவே
அங்கியர் களாதனைகையு மவர்பொருதும் போதி
மவ்வளவு மெங்கள்துய ரவ்வளவிவ் வளவோ" [30]

என அக்கியராட்சியாலே நமது நாட்டுத் தொழிலாளரிடையே ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களைக் காட்டுகிறார். எனவே தான் இந்த நிலைமை நீங்கவும் உயர்ந்த வர்க்கத்தினராலே சொல்லாள் செல்வம் பறிக்கப் படுவதையும் அதன் உணராது போலி நாகரீத்தினை நாடி, நலனிழந்து வாடும் தொழிலாளருக்கு,

"உள்ளீடு சிறிதுமில்லாப் பதர்க்கினையை நெல்லென்
றுரலிட்டுக் குத்தவெறு முமியான வாபோல்
இல்லாத பயன்விரும்பி ஏமாந்த பேரை
இனவுகாத் திட்டகிளி யென்பதுவே கோமே" [31]

என நல்ல உவமை மூலம் நிலையை எடுத்து விளம்புகின்றார். புலவரைப் போலவே விவசாயிகளின் வாழ்வைக் கண்டுணர்ந்தும், கூடன் தொல்கதையும், வட்டிக்குப் பணம் பெருக்கும் பணம் படைத்தவர்கள் தமது பணவலிமையினாலும், சென்வாக்கினாலும் ஏழை விவசாயிகளின் சொந்த வருமானத்தையும் பறிமுதல் செய்யும் கொடுமையினையும் பாவலரும் நன்கு சித்தரித்துள்ளமை அவரது பாடல் மூலம் நன்கு புலனாகின்றது.

நாட்டு நலனையும், மக்கள் நலனையும், சீர்கெட்ட தமுதாய நலனையும் தம்வசனத்தில் கொண்டு. உழைத்து பாவலரும், புலவரும் தனிமனித நலனிலும் அக்கறை கொண்டனர். தனிமனித முழக்கவழக்கங்களையே, சமூகப் பழக்கவழக்கமாக எற்றிக் கொள்ளப்படுவதை மனிதனது ஒவ்வொரு செய்கையிலும் கவனஞ் செலுத்தி அவனை நல்வழிப் படுத்த முயன்றனர். புலவரது 'கற்பித்த பத்து' எனும் பாடற் பகுதி கல்வியின் சிறப்பினையும் அவசியத்தினையும், அதனால் ஏற்படும் நன்மைகளையும், தமது தந்தையிடமிருந்து பெற்ற கல்வியை வியக்கும் இடத்திற் காட்டியிருக்கின். "பொன், மணி, துகில்வகை என்பன அணிகலன்களாகா; கல்வியைக் அரிய-

தும், காவலனுக்கு வினையதும், அள்ள அள்ள நிறைவதும், அரும் பயன் தருவதுமான கல்வியே அணிகலன்" என்ற கருத்தினை மனிதனது படிக்க வடிக்கத்திற்கு அடிப்படையான அத்தியாவசியமான கல்வியின் வகுப்புத்துகின்றன. புலவரைப் போலவே பாவலரும் கல்வியின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறார். அந்நியராட்சியால் அழிவிருந்து அடைந்து வரும் கல்வி நிலையினைக் கண்டு மனம் மகிழ்ந்தவர் அங்கே தான் பிரதான குறைபாட்டினையும் காண்டு விருதின்றார். ஆங்கிலக் கல்வியில் மட்டும் அழிவிருந்து. ஆனால் நம் அருங்கலைகள் யாவும் மறைந்து போயினவே என மனம் வருந்திக் காரணத்தைத் தேடுகின்றார்.

" ..... காதலைக் கக்கல்வி கற்றதுடன்
பூரணமா யறிவு வென்றறையே தேடாத
புன்னெறி யாமடி சங்கமின்னே " 22

என நமது கலைகள் சீர்கெட்டதற்கான காரணத்தை அவர் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

புலவரது 'பிழுக்கமுறைத்த பத்து' 'விதித்தகுறைத்த பத்து' 'விளக்கியதுறைத்த பத்து' போன்ற பாடற்பகுதிகளும், சிகாகாதரைக் கும்மியும் தனிமனித நலன் கருதிப் பாடப்பட்டனவையாகும் நடக்க வேண்டிய முறைகளையும் இன்னவற்றைச் செய்யாவிடின் இத்தீமை விளையும் என நன்மைதன் நலனையும் தீயதன் தீமைகளையும் எடுத்துக் காட்டுகிறார். இந்த வகையில் பாவலரும் சீர்திருத்தப் - பாடல்கள் பாடியிருப்பது இருவரினதும் உணர்வுப் பாங்கினை வெளிப்படுத்துகின்றது. - பிற உயிர்களைக் கொல்லாதே, பிற உயிர்களை இம்சித்தல் தனக்கே கேடு தரும் என்ற அறவுணர்வுக் கருத்தை 'தாடியறுந்த வேடன்' பாடலும், பேராசை பெருநட்டத்தைத் தரும் என்பதனை 'பலனக் கொடி' பாடலும் புலவர் சித்தரிக்கின்றார். யாழ்ப்பாண மக்களின் படிக்க வடிக்கக் - கலைப் பிரதிபலிப்பதாகப் புலவரது 'ஆடிப்பிறப்பு', 'கத்தரி வெருளி' 'நாவலாடல்' போன்ற பாடல்கள் அமைந்துள்ளன. 'எலியுங் கேவலும்' எனும் பாடல் மூலம் புலவர் கனவு, நனவு ஆகியவற்றை

கண்டிப்பதுடன், நல்ல நண்பனின் இலக்கணத்தையும் தருகின்றார்.

"ஐயோ கனவு பொல்லாதது – அதை
அறியாது செய்ததால் வந்ததே – தீது
மெய்யா யடாது செய் தோழே – மிக
வெம்மிப் படாது படுவார்கள் நேரே" [23]

என கனவினைக் கண்டித்து, அதனால் வரும் தீமையையும் காட்டுகிறார். பொல்லாதது கூறது, வாது எனக் கூடாரி, அதனைக் கனிய இரங்குதே சேவகியும், வினையும், பூனையும் பாத்திரமாகக் கொண்டு மக்கள் மத்தியில் சீர்திருத்தப் பாணையைக் காட்டுகிறார்.

புலவர் காலத்திற் சில சைவக்கோவில்களில் ஆடு, கோழிகளைப் பலியிடும் வழக்கம் இருந்தது. இக்கொடுஞ் செயல் நரக துன்பத்தைத் தரும். அதினிற் திளைந்த மக்களாலே செய்யப்படும் இக்கொடுஞ் செயலை நீக்கும் பொருட்டும் புலவர் பாடினவைத்த 'அஞ்சுகதறியது' எனும் பாடல் படிப்போர் உள்ளத்தை நெகிழ வைப்பதாகும். இதனைப் பின்வரும் பாடலால் உணரலாம்.

"அல்லும் பகலுமவர் அன்பாய் வளர்த்ததெனாங்
கல்லும் கரையக் கதறி விளட்டிடலோ" [24]

"ஆசாரி மேலோ அதிகாரி தன்மேலோ
மாமாரி மேலொளவின் வன்பழிதான் சேருமடா" [25]

பழம் பெரும் பண்புகளைப் பின்பற்றுவதிலும், பேணிப்பாதுகாப்பதிலும் புலவர், பாவலரையும் விட தீவிரவாதியாய் இருந்தார். இவர் பாடல்கள் யாவுமே பழம் பெருமையில் இவர் கொண்டிருந்த்தனமையைக் காட்டுகின்றது.

"காத்தனைக் கரையும் கனவும் பலித்ததடா
ஆக்கை சுடுகுதடா அடிவயிறு வேகுதடா" [26]

என்ற பாடல் அவரது பழம் நம்பிக்கைகளை எடுத்துக் காட்டுகிறது. 'வானழியும் புலவனும்' என்ற பாடல் மூலம் நெஞ்சுவந் தீதலின் சிறப்பும், ஈ.யாதார் இழிவும், அறனல்லவை வழிப்படும் பொருள் ஆகாதென்பதும் ஆகிய பழந்தமிழ் மக்களின் பண்புகளைக் காட்டி; ஈ.யாதாரை,

"நச்சு மாமரம் நடுவூர்ப் பழுத்தென
வச்சை மாக்கள் மக்களுட் பதரே" [27] எனக் கேலி செய்து

"எதல் நன்றே எதல் நன்றே
சாதல் வினும் எதல் நன்றே" [28]

என நலமிகு நற்பண்பை வலியுறுத்துகின்றார். 'கத்தரித் தோட்டத்து-வெருளி' என்ற பாடலிற் புலவர் அந்த வெருளியை நல்ல குறிக்-கோளோடு பொருத்தி நிகழ்த்திச் செய்திருக்கிறார். "சிங்கத்தின் தோலினைப் போர்த்த கழுதை போலத் தேசத்திற் பலருண்டு என்-றும் அவ்வகையர் தம்மைக் கண்டு ஏமாந்து போகாமல் இருக்க வேண்டும்" [29] என்றும் புலவர் இதன் மூலம் வற்புறுத்துகின்றார். ஆறு-முக நாவலரையும், 'தெய்வப் பசுவையும்', 'ஆடிப்பிறப்பையும்', 'கத்-தரி வெருளியையும்' யாழ்ப்பாண மக்களின் கல்விச் சிறப்பு, உயர்ந்த பண்பாடு, மண்வாசனை போன்ற வற்றையும் இன்ப நிகழ்ச்சிகளாகக் காட்டிய புலவர்; நமது இழிநிலையின் சின்னமாக அருவெறுப்பும் காட்சியைக் காட்டி நம்மைச் சிந்திக்க வைக்கின்றார்.

புலவரைப் போலவே பாவலரும் சமூகத்தில் நிறைந்-துள்ள பல தீயவழக்கங்களைக் கண்டனத்தையே தமது தலையாய கடமைகக் கருதி, புதிய முற்போக்குள்ள சமூகத்தைத் தமது சீர்-திருத்தங்களின் மூலம் உருவாக்க முனைந்தார். பாவலரது 'இதோப தேச கீதரச மஞ்சரி' அவரது சிந்தனை வெளிக்குட்பட்ட தீர்க்க-மான கருத்துக்களைக் காட்டி நிற்கின்றன. மக்களது வாழ்வினைக்-கெடுக்கும் புல்லுருவிகளான சூது, மது, களவு, பொய் என்பவற்றின் தீமைகளை எடுத்துக் காட்டியும், புலவர் போன்ற ஏனை, நெய்தன்றி மறவாணை, ஜீவகாருண்யம், இன்சொல், தெய்வநம்பிக்கை போன்ற நற்பண்புகளையும், அதனால் வரும் நன்மைகளையும் எடுத்துக் காட்டு-கிறார். பாவலர் காலத்திற் கைக்கூலி வாங்கிச் சிறுண்டிப் பிழைக்-கும் ஒரு கூட்டம் இருந்ததனையும், அவர்களது அவ் இழிசெய-லுக்கெதிராகப் பாவலர் கொதித்தெழுந்ததையும் அவரது பாடல் புலப்படுத்துகின்றது.

"அக்கிரமம் செய்வதைப் பாரீர் – சற்றும்

அருளாமற் கைக்கூலி வாங்கியே
அக்கிரமம் செய்வதைப் பார்" 30

இந்தப் புன்மை நிறைந்த சமுதாயத்தில் வாழ்ந்திருந்ததைப் போலும் தனது சிவமணி மாலையில் 'புகழ் வேண்டாது ஈதல் வேண்டும், எனையும் ஒத்து நீயும் தன்னிடமும் ஈதல் வேண்டும் எனவும், அன்புடனே சொன்னயம் சேர்த்து ஈதல் வேண்டும்' எனவும் அதன் சிறப்பைக் கூறி; அக்காலத்திலே இருந்த பணங்காக்கும் பூதங்களை — வட்டி வாங்கிக் கொழுக்கும் பணவாதனை உள்ளோரைக் கண்டிக்கிறார். ஏழை காதுக்குக் கொடுங்கள் என இடித்துச் சொல்லுகிறார். எல்லா விளையாட்டிலும் தீதானது கெட்ட ஈனம் நிறையும் கொடுங் கூத்து எனச் சூதின் கொடுமையைக் காட்டியும், மதுவினால் வரும் தீமைகளையும் காட்டிவிடுகின்றார். நம் வாழ்வு நலம் பெற, நாடு நலம் பெற வேண்டுமானால் இத்துன்பழக்க வழக்கங்களை நீக்கிவிட வேண்டும். பூதலத்திற் கொடுந்தீமை புரியக் காரணம் மதுவாகும். எனவே அப்பழக்கத்தை நீக்க வேண்டும் என்ற புரவலர், 'அப் பொல்லா நஞ்சைக் களிப்புடன் வாங்கியுண்டு களிப்படையும் கயவரே' 31 என மதுவுண்ணும் மாந்தரைப் பார்த்துக் கேள்வி செய்கின்றார். தமிழர் மக்களை மிகவாஞ்சையுடன் அழைத்து,

"அனைவ நகரில் வாழும் அன்பர்களே உம்மால்
அனுபவற்றி புரிவீர் . . . . . .
மதியிலைக்குச் சனபலை மகாகர்சனத்துடன்
வளர்த் திடம்பிரயாசை எடுப்பீர்" 32

என அறிவு புகட்டுகிறார். சமூகப் புன்னெறிப் பழக்க வழக்கங்களைக் கண்டிக்குமிடத்திலும், கேலி செய்து நன்னெறியை வற்புறுத்துமிடத்திலும் எங்குமே தம் எளிய சாயலைத்தையே பிரதிபலித்து விடுகிறார். எனவேதான் சமூகப் பழக்க வழக்கங்களைக் கூறுமிடத்தில் எளிய வார்த்தைப் பிரயோகங்களையும், பேச்சு வழக்குச் சொற்களையும் பிரயோகிப்பதைக் காணமுடிகின்றது. ஆங்கில நாகரிக மோகம் கொண்டு, தம்மொழிச் சார்பைத் துறந்து தமிழ் மக்களின் கட்டமைப்பையே விடுத்தவர்களையும்

விழிபிதுங்கி நின்றுணைப் பார்த்து நகையாடுகின்றாள்.

"ஐரோப்பிய பாவனை பாங்கு - நமக்கு
ஆகா தென்றதைவிட்டு நீங்கு - மிகு
வீரியமாய் முன்னாள் ஏங்கு - எங்கள்
தமிழ்ப் பழம்வழக்கங்கள் தாங்கு" [33]

எனப் பாவலர் கூறியது ஆங்கிலத் தமிழனின் ஆளுமை வரிய தனிக்கு அடித்த அடியாகும்.

யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டு அம்சங்களைக் கூர்ந்து நோக்கிய பாவலரும், புலவரும் அங்கு காணப்பட்ட தீயபழக்கவழக்கங்களைக் களைந்தெறிய முற்பட்டனர் என்பதனை அவர்களது சீர்திருத்தப் பாடல்கள் தெளிவுபடுத்துகிறது. இங்கும் சீர்திருத்தவாதியாக இருவரும் செயற்பட்டபோதும், பாவலரிடமிருந்த மிகுத்திறமான ஆவேச உணர்வு நீலி புலவரிடம் காணப்படாத தன்மையை இருவரின் பாடல்களையும் ஒப்பிடும் போது புலனாகின்றது. சீர்திருத்தக் கருத்துக்களும், உணர்ச்சிகளும் இருவரிடமும் இருந்த போதும் அச்சீர்திருத்த உணர்வு நீலியினைப் பிரதிபலிப்பதிலேயே இவ்வேறுபாட்டினை நாம் உணர முடிகின்றது.

இ: பெண்ணுரிமையும் சீதனப்பிரச்சனையும்:

இருபதாம் நூற்றாண்டு ஆரம்பம்வரை சமுதாய நீதியில் பெண்களுக்குரிய உரிமை கிடைக்கவில்லை என்றே கூறலாம். பெண்கள் பொதுவாக இன்பப் பொருளாகக் கருதப்பட்டார்கள். குழந்தைகளைப் பெறுவதே கடமை என்றும், ஆணுக்கு அடங்கி நடப்பதே வாழ்க்கை என்றும் அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். கருணையான கட்டுப்பாடுகளும் பாதுகாப்பும் அவர்களைச் சூழ்ந்திருந்தன. சமுதாயமும், ஆண்வர்க்கமும், குடும்பமும் பெண்களைச் சார்ந்தியே வந்தன. கல்வியறிவு மிக அருகியே காணப்பட்டது. காலங்தோறும் அவர்கள் விருதலி இன்றியும், உரிமையற்றும், கட்டுப்பாட்டிற்கள் அடிமைகளாக அஞ்சியே வாழ்ந்து வந்தனர். கண்ணியர்கள் நல்வாழ்வின்றி சீதனப் பிரசாரற் கொடுமைப் படுத்தப்பட்டனர். ஆணினத்தைச் சார்ந்து பெண்கள் தனித்து வாழ்தலென்பதும் எனவற்புறுத்திய சமுதாயம், அவர்கள் உள்ளத்தை நோக்காமலும், உணர்ச்சிகளை மதிக்காமலும் கொடுமை இழைத்து வந்தது. "வலியவர்கள் ஈக்கியும் கூர்தலை மழித்தும் அல்லி உணவினை உண்டு வாழ்பவர் மகளிர்" எனப் புறநானூறு கூறுகின்றது. நெற்றியிற் பொட்டு வைப்பதும், நீட்டிழலில் மலர் சூடுவதும் தடை செய்யப்பட்டது. ஆகம்பெண் எதிரே வருவது தடைசெய்யப் பட்டது, தவிர்க்கப்பட்டது. குழந்தை மணத்தின் கொடுமை நிலவியது. இந்நிலைமை இந்தியத் தமிழகத்தில் மட்டுமன்றி எழுத்திலும் நின்று நிழலாடின.

தமது காலகட்டத்திலே வாழ்ந்த, தடுக்கப்பட்ட உரிமையற்ற பெண்கள் நிலையையும், ஆகம் பெண்களின் ஏக்கப் பெருமூச்சினையும் சித்தரித்தனர். சீதனக் கொடுமையால் வாழ்வின்றித் தவித்த தாரிகையரின் கண்ணீர்த் துளிகளும், அவர்களது ஏக்கப் பெருமூச்சுக்களும் பாவலர் புலவர் அவர்களது பார்வையினின்றே, தெளிவினின்றே தப்பிப்போக முடிய-

வில்லை. இந்தச் சீர்கெட்ட நிலை இரண்டாவது உள்ளத்தையும் உருக்கச் செய்தது. எனவேதான் பெண்ணுரிமை வேண்டியும், பெண்கல்வியின் அவசியத்தை வற்புறுத்தியும், பெண்ணின் பெருமைப் பண்புகளை எடுத்துக் காட்டியும், சீதனக் கொடுமையை ஒழிக்க வழி தேடியும் பலபாடல்கள் மேலும் தம்தீவிர சீர்திருத்த உணர்வினை வெளிப்படுத்தினர்.

பெண்மைப் பண்புகளைப் போற்றிப் பெண்ணுரிமைகோரி நின்ற பாவலரும் புலவரும், அவ்வுரிமை பெண்களுக்குக் கிடைத்தபோது அவர்கள் அடைய மோகங்கொண்டு தமிழுருக்கேயுரிய தனித்துவப் பண்புகளைத் தொலைத்த தன்மையைக் கண்டனர். எனவேதான் பாவலர் இம்மோகம் பிடித்த பெண்களைக் கேலிசெய்கின்றார். தமிழ் அறமகளிர்க்கேயுரிய, பெண்மைக்குரிய இலட்சணங்களைத் தமது பாடல்களிற் பாவலர் பிரதிபலிப்பது அக்கால மகளிரது சீர்திருத்தம் வேண்டியேயாகும். பெண்ணுரிமையைக் கோரிய அதே நேரத்தில், அத்துமீறிய நவநாகரிகயுகத்தின் கோரிக்கள் படுக்கங்களையும் கண்டிக்கிறார். ஒரு பெண் எதையும் இழக்கலாம். ஆனால் அவளுக்குரிய பெண்மைப் பண்புகள், இலட்சணங்களிலிருந்தும் தவறக் கூடாது என்பதே பாவலரது நோக்கமாகும்.

பாவலர் போன்று பெண்ணுரிமை விடயத்திலோ சீதனக் கொடுமையினைக் கண்டிப்பதிலோ புலவர் தீவிரவாதியாக இருந்தார் எனல் முடியாது. அவரது பெண்கள் பற்றிய பாடல்களும் தனிமனிதனது பாடல்கள் போன்று தெளிந்த, அளவுதியான நீரோடை போன்றே இருந்தன. இத்தன்மை அவரது மனவுளைச்சினையப் பிரதிபலிப்பதாக இருக்கலாம். படைப்பாண்பில் ஊறித்திளைத்த புலவர், சமுதாயப் புன்னெறிகளைக் கண்டு பாவலர் சீறி விழுந்தது போன்று சீற்றங் கொண்டு விழவோ, கண்டிக்கவோ முற்படவில்லை. மாறாக அளவுதியான அறிவுரைப் பாடல்களாகவே அவை அமைந்தன.

பனிரண்டாம நூற்றாண்டில் கம்பனைனும் தேவன் தான் பாடிய 'ஏரெழுபது' எனும் நூலில் உழுதுண்டு வாழும் காராளனைரைச் சிறப்பித்தும் பாடும் போது 'மேழி பிடிக்கவ்வனக, வேல்வேந்தர் நோக்குவ்வனக, ஆழிதரித்தே அருளும்மை' என என அவர்களின் தகையைச் சிறப்பித்தும் பாடுகின்றார். சாதாரண தகைகளைப் பாட வந்த தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் 'வெயில் வாரும் மழைவாரும் விரிதேடையாம் நைலே' 35 என்ப் பலபடப் புகழ்ந்து பாடியுள்ளார். ஆனால் புலவரது 'தாரமோய்த் தாயானுள் ளை' தம் மனைவியின் தகையைப் புகழுமுகமாகப் பாடப்பட்டதாகும். இல்லறத்திற் புகுந்த காட்சியோடு தொடங்கி அதிலே தம்மனைவியின் அன்பைத் தொட்டுக் காட்டியவிட்டு, தாம் நோயுற்ற காலத்திலே தமது மனைவியின் தகைசெய்த தொண்டுகளை எல்லாம் விளைபயாகச் சொல்லி, எந்நிலை 'வாராமா யெம்மை வளர்க்க வருந் தின்னம்மை தாரமாய்த் தாயானுள் ளை' என முடிக்கின்றார். தின்னம்மையின் அன்பான தொண்டுக்கு அழியாத தின்னமாகத் 'தாரமாய்த் தாயானுள் ளை' விளங்குகின்றது. இங்கும் புலவரின் பெண்மையின் பெருமைப் பண்பே சித்தரிக்கப்படுகின்றது. பெண்கள் விடயத்தைச் சித்தரிக்கும் புலவரது பாடற் பகுதிகள், பெண்கள் பற்றிக் கவிமணி பாடிய பாடற் பகுதிகளை நினைவுபடுத்துகின்றது.

நடுகேத்திற் பெண்கல்வி புறக்கணிக்கப்பட்டது பற்றி பலவாறாக வற்புறுத்தி வந்த 'உதயதாரகைப் பத்திரிகை'யின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த அறிஞரில் பாவலரும் ஒருவர். கிருபதாம் நூற்றாண்டு வரை பெண்கல்விக்குப் போதிய வரவேற்பு இருக்கவில்லை. இந்நோக்கத்தில் பாவலர் சமூகம் முன்னேறப் பெண்களுக்கும் கல்விவசதி அளிக்கப்படவேண்டும் என்ற கருத்தில்,

"கண்டானன் வழித்திடும் பெண்களுக்குக் கல்வி
கூடாதெனச் சொன்ன நீக்காலம்

பண்டாய்ப் பறந்திடப் பெண்களெங்குங்கலி
பற்றுகிறதடி சகியே" [36]

இங்ஙனம் பெண்கல்வி வேண்டி நின்ற பாவலர், பணம் பணைத்த நாகரீகப் பெண்களின் பொறுப்புணர்ச்சியற்ற ஆடம்பரப் போக்கினையும், சமூக பொருளாதார ரீற்றத் தாழ்வுகள் பெண்கள் வாழ்க்கைக்குத் தடையாக அமைவதனையும் நன்கு சித்தரிக்கின்றார்.

"பெண்கள் படித்தறி வெய்தியில் லங்களிற்
பேணிக் கணவர்க் குறுதுணையாய்ப்
பண்புடன் வாழுதலோ வவர் வேலை
பறித்திடலோ தரி சகியே" [37]

என பெண்கள் ஆகவேண்டிய முறையினைக் காட்டுகின்றார்.

நம்தேச ஆடவரின் சிந்தையில் ஊன்றிய தீதனம் என்ற புல்லுருவியைக் களைந்தெறிய முற்பட்டார். தமிழ் மக்களிடையே இவ்வகையில் ஏற்பட்ட தீதனவழக்கும் உத்தியோக மோகமும் மாற வேண்டும் என்பதை அக்காலப் பத்திரிகைகளும் வெளிப்படையாக வற்புறுத்தின. பாவலரது 'உதயதாரகைப் பத்திரிகை' இதை ஒரு இயக்கமாகவே நடத்தியது [38]

"மிக்க பெருந்தொகைத் தீதனமில்லாது
மேதினி யில்மண வாழ்வினராய்த்
தக்க முறும் பெண்கள் யாழ்ப்பாண நாடதிற்
றோகையர் பிருக்கிறார் சகியே" [39]

என நீதிநெறியே மிகி ஏதிவரும் தீதனத்தால் வாழ்விழந்து தவிக்கும் மகளிரது நிலை கண்டு கிரங்கும், பாவலரது மனோபாவம் இதனற் புரிகிறது. பெண்மையின் பெருமையைப் பண்புகளைப் பாடிய புலவர் பாடலில் அக்காலச் சீர்கேடுகளின் சின்னமான இச்சீதனப்பிரச்சனை பற்றியோ, தொழுமைகள் பற்றியோ பிரஸ்தாபிக்கப்படுவதைக் காண முடியாதுள்ளது. இந்த வகையில் சீர்திருத்தப் பாணியில் புலவரை விடப் பாவலர் மிகத் தீவிரவாதியாகவே விளங்கினர் எனலாம்.

உசாத்துணை நூல்கள்:

		பக்கம்
1. வித்தியானந்தன். சு.	— 'இலக்கியத் தென்றல்'	112
2. செல்வராஜன். மா.	— 'பாரதிதாசன் ஓர் புரட்சிக் கவிஞன்'	81
3. கைலாசபதி. க.	— 'அடியும் முடியும்'	310
4. துரையப்பாபிள்ளை. தெ.அ	— 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி'	பாடல்: 245
5. நாதன். வே.க.ப	— 'மருதனஞ்சலோட்டடும் புலவர் வரலாறும்'	56-57
6. ஜெயராஜா. சு.	— 'பாவலர் துரையப்பாபிள்ளையின் சிறுதாயப் பாடல்கள்' மல்லிகை. 1972.	43
7. துரையப்பாபிள்ளை. தெ.அ	— 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி'	பாடல்: 253
8. நாதன். வே.க.ப.	— 'மருதனஞ்சலோட்டடும் புலவர் வரலாறும்'	76
9. துரையப்பாபிள்ளை. தெ.அ.	— 'செங்கள் தேசகீர்த்தி'	பாடல்: 3
10. அம்பேத்கார். பி. ஆர்.	— 'சாதியை ஒழிக்க வழி'	80
11. சோமசுந்தரப்புலவர். க.	— 'விறுத மேட்டருக்கு கிரண்டாதிரி'	பாடல்: 25
12. வேலுப்பிள்ளை. க.	— 'யாழ்ப்பாண முலபவ தெளிவுரி'	12.
13. வரதராஜாப் பெருமாள். வ.	— நாவலர் நூற்றாண்டு மலர்	214
14. சோமசுந்தரப்புலவர். க.	— 'இலங்கை வளமும் தாலவிலாசமும்'	20
15. துரையப்பாபிள்ளை. தெ.அ.	— 'சிங்தனைச் சோலை'	75
16. நில்லை நாதன். சி.	— 'இதோபதேச கீதரச மஞ்சரியின் சிருங்கத் தெளிவு' யாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழாமலர். 1972	45
17. துரையப்பாபிள்ளை. தெ.அ.	— 'செங்கள் தேசகீர்த்தி'	பாடல்: 33
18. துரையப்பாபிள்ளை. தெ.அ.	— 'சிந்தனைச் சோலை'	20
19. துரையப்பாபிள்ளை. தெ.அ.	— 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி'	பாடல்: 19
20. சோமசுந்தரப்புலவர். க.	— 'இலங்கை வளமும் தாலவிலாசமும்'	20
21. சோமசுந்தரப் புலவர். க.	— 'சிறுவர் சிங்தமிழ்'	பாடல்: 11
22. துரையப்பாபிள்ளை. தெ.அ.	— 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி'	பாடல்: 81

		பக்கம்
23. சோமசுந்தரப்புலவர். க —	'சிறுவர் செந்தமிழ்'	34
24. சோமசுந்தரப் புலவர். க —	'சிறுவர் செந்தமிழ்'	20
25. சோமசுந்தரப் புலவர். க —	'சிறுவர் செந்தமிழ்'	37
26. சோமசுந்தரப்புலவர். க் —	'சிறுவர் செந்தமிழ்'	36
27. சோமசுந்தரப் புலவர். க —	'சிறுவர் செந்தமிழ்'	102
28. சோமசுந்தரப்புலவர். க —	'சிறுவர் செந்தமிழ்'	103
29. செந்திநாதன். க. —	'சிறுவாத படலி'	20
30. துரையப்பாபிள்ளை. தெ. அ. —	'சிந்தனைச் சோலை'	107
31. துரையப்பாபிள்ளை. தெ. அ. —	'சிந்தனைச் சோலை'	102
32. THURAIAPPAPILLAI. T.A. —	'ALAVEDDY TEMPERANCE ASSOCIATION SONGS FOR THE ANNUAL PUBLIC MEETING'	
33. துரையப்பாபிள்ளை. தெ. அ. —	'சிந்தனைச் சோலை'	72
34. அவ்வை. துரைசாமிப்பிள்ளை. சு —	'புறநானூறு முழுமை உரையும்'	பாடல்: 250
35. செந்திநாதன். க. —	'சிறுவாத படலி'	20
36. துரையப்பாபிள்ளை. தெ. அ. —	'சிந்தனைச் சோலை'	40
37. துரையப்பாபிள்ளை. தெ. அ. —	'சிந்தனைச் சோலை'	62
38. கைலாசபதி. க. —	'பாவலர் துரையப்பாபிள்ளையும் தேசிய பிள்ளைணியும்' பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழா மலர்.	37-45
39. துரையப்பாபிள்ளை. தெ. அ. —	'சிந்தனைச் சோலை'	69

நான்காம் இயல்

நான்காம் அத்தியாயம்

பாவலர் துரையப்பாபிள்ளை - சோமசுந்தரப் புலவர் ஆகியோர் கவிதைகளின் ஒப்பீட்டாய்வும் முடிவுரையும்

கவிதைத்துறை வளர்ச்சிய போக்கில் மறுமலர்ச்சிக் காலம் ஒன்று தோன்றுவதற்கு வித்திட்ட காலம் பாவலர் - புலவர் ஆகியோர் வாழ்ந்த காலமாகும். ஏறக்குறைய ஒரே காலப்பகுதியைச் சேர்ந்த [1872 - 1940] இவர்கள் இருவரும் தமது கவிதையாற்றலால் செய்த தொகுப்பணிகள் வரலாற்றில் குறிப்பிடத்தக்கன. அவர்கள் காலத்தில் சமுதாயத்தின் சீர்வாதாரமான அம்சங்களை அரித்துத் தின்று கொண்டிருந்த தீயசெறிகளை அவற்றின் உண்மையான தோற்றத்துடன் தமது கவிதைகளில் எடுத்துக் காட்ட முயன்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்த சிற்றுடமை விவசாயிகள், கல்வியற்ற பிரிவினர் ஆகியோர் நடுத்தர வகுப்பினரைக் கிருத்துவமயமாற்ற கிறித்துவக் கருத்துக்கள் அவர்களைக்குக் கவர்ச்சியான பிரபரணங்கள் போன்றிருந்தன. கல்வியை விரிவாக்கும் இயக்கம், தெரியப் பற்று, சமுகச்சீர்கேடுகளைச் சாடுதல், நன்னெறிக் கருத்துக்கள் இவை மக்களின் மதத்தின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருப்பதை உணர்ந்த பாவலரும் புலவரும் அதனைத் திறம்படத் தமது கவிதைகளிலே கையாளத்தொடங்கினர். அதற்காகத் தம் கவிதைமரபையே புதியதும் எளியதுமான நடையில் செலுத்தினர். எளிய சொற்பிரயோகங்கள், இனிய சோகரசம் · கிந்தச் சிறப்புடன் கூடிய இவர்களது பாடல்கள் பாமரரும் விளங்கக் கூடிய பாடல்களாகும்.. மேலைக்கு புதிய தமிழ்க் கவிதை மரபிற்கே வித்திட்ட பண்பை இவர்களது பாடல்வடிகள் புலப்படுத்துகின்றன.

சமூகக் குறைபாடுகளை அகற்றுவதற்காக இவர்கள் எடுத்த இலக்கிய முயற்சிகளால்த் திறம்பட சமூகம் வளர்ச்சி பெற்ற, மேற்கூறிய சமுதாயப் பண்புகளுடன் பழமொழிகளைக் கையாளல், உடன்பாடு - எதிர்மறையில் கூறல் தாம் கருதிய நல்லெண்ணத்தை மக்களிடத்தில் வலியுறுத்தத் திரும்பத் திரும்ப அதைப் பாடற் பொருளாக்கல், அஃறிணைப் பொருள்கள் வாயிலாக நன்னெறி முரசம் கூறல் போன்ற பண்புகளையும் கொண்டிருந்தனர். அதற்காகத் தமது பாடல்களை விருத்தம், வெண்பா, கட்டளைக் கலித்துறை என்பவற்றுடன் இம்மி, கிந்து, கீர்த்தனம் போன்ற யாப்புக்களைப் பயன்படுத்திக் கவிதை மரபில் ஓர் எளிமைப் போக்கை வற்புறுத்தியதுடன், சமுதாயத் - தீர்திருத்தைதையும் கவிதைப் பொருளாகக் கொண்டு வந்தனர்.

பாவலரது பாடற்பண்பை மொத்தமாக நோக்கும் போது மூன்று வகையான தன்மையை அவர் பாடல்கள் பிரதிபலிப்பதைக் காணலாம். முதல்வகை சமூகத்திற்குத் தேவையான நீதிக் கருத்துக்களைத் தருவன. அடுத்தவகை நாட்டில் அத்தியாவசியமாகத் தேவைப்படும் சீர்திருத்தங்களைக் கூறுவதன் மூலம் மக்களைத் தன்பால் ஈர்க்க முனையும் வகையில் அமைந்தனவை. இறுதியாகக் கூறப்படுகிற வகுப்பினர் மத்தியிற் சுதந்திரக் கலையார்வத்தை வளர்க்கும் நோக்குடன் அமைந்தனவை. 'சிந்தனைச் சோலையில் இடம் பெற்ற இவர் கவிதைகளுள் சிலமணிமாலை தவிர்ந்த மற்றைய யாவையுமே சமூகசீர்திருத்தம் சம்பந்தப்பட்டவையாகும். இதைவைத்தேதான மக்களிடத் போதன மனப்பான்மை விரவியிருப்பினும் ஆங்காங்கு. பாவலரின் சமூகப் பிரக்ஞை மூல நோக்காக கீழையோடுவதை அவதானிக்கலாம். இவரது 'யாழ்ப்பாணச் சுவதேசக் கும்மியும், 'மங்கள் தேசகீர்த்தனமும் சமுதாயத்தை நோக்கிக் குறிய அவர்தம் உள்ளக் கிடக்கையைக் காட்டுவன.

புலவரது பாடற்றன்மைகளை நோக்கின் நான்கு வகையான தன்மையைக் காணலாம். தலைவன் அங்கு எடுத்துரையிருக்கும் தெய்வங்கள் சம்பந்தமானவையும் தைவதித்தாந்தக் கோட்பாடுகளை விளக்குவனவாகவும் அமைந்த பாடல்கள். அடுத்தவகை மக்கள் வாழ்க்கையிற் காணப்படுகின்ற முறைகளைக் காட்டும் பாடல்கள். மற்றவகை தேசியப்பாடல் என்றடிப்படையில் நாடு, மொழிப்பற்று அடிப்படையில் அமைந்தவை. இறுதியாகக் குழந்தைப் பாடல்கள். 'காமகள் புகழ்மாலை', 'தந்தையார் பதிற்றுப்பத்து' போன்றன தேசியச்சார்புடையன. 'மருதனைந்தலோட்டடும்' 'தாலவிலாசமும்' மக்கள் வாழ்க்கையையும் சமூகச் சீர்கேடுகளையும் பிரதிபலிப்பன. 'தாலவிலாசத்தில்' யாழ்ப்பாணமக்களின் கற்பகதருவான பனைமரச்சிறப்புக் கூறப்படுகிறது. 'சிறுவர் செந்தமிழ் மாலை' குழந்தைப் பாடல்களாக இருப்பினும் சமூகச்சீர்கேடுகள் மலிந்த அக்காலத்தை பிரதிபலிக்கின்றது. இதற்குக் கத்தரித் தோட்டத்து வெருளியும், வாலிபமும் புலவதும், எலியும் பேயனும் என்ற பாடல்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவைகு பாடல்களையும் ஒப்பிட்டு நோக்கும்போது இருவர் பாடல்களிலும் படைப்பில் புதுமை காணும் தன்மையைக் காணலாம். உணர்ச்சி வெளிப்பாடுகளிற்கூட இருவரிடமும் வேற்றுமையைக் காணமுடிகின்றது. சமூகத்தின் ஒவ்வொரு சந்துபொந்துகளிலும் நுழைந்து சென்று அங்கு காணும் சீர்கேடுகளைப் பாவலர் வெளிக் கொணர்ந்தார். தீவிரவாதியாக நின்று கவிதை மூலம் புரட்சி செய்தார். அங்கிய கலாச்சாரத்தை இருவரும் வெறுத்தொதுக்கினாலும், அதே சமயம் பாவலர் அங்கிய கலாச்சாரத்திலையே சமூக முன்னேற்றம் ஏற்படுகின்றது என்பதை மனதார ஏற்புக் கொள்கின்றார். ஆனற் புலவர் பாடல்களிலோ பாவலரின் பாடல்களிற் காணப்படும் தீவிர உணர்ச்சியம்சத்தையோ

கொள்கை மனப்பான்மையையோ காணமுடியாதுள்ளது. மாறுகிற சமுதாய சீர்கேடுகளை எடுத்துக்காட்டி, நல்வழிப்படுத்தும் போதனைக் களஞ்சியமாகவும், இயற்கையழகில் ஈடுபட்ட மனதைத்தூண்டத் தினையும் பிரதிபலிக்கின்றன. புலவரை விடப் பாவலர் சமுதாய புரட்சிவாதியாக இருந்தார் என்பதற்கு இவர் வாழ்க்கையில் ஏற்பட்ட இதழ்ச்சிகளும் காரணமாக இருந்திருக்கலாம். பொருளாதார கல்விவசதி அருகி மதம் மாறிய பாவலரது ஆதி திறன்தவக் கொள்கைகளைக் கொண்டிருந்தபோதினும், சமுதாயத்தையே தனது வாழ்க்கைப்பணியாகக் கொண்டிருந்த இவர், திறன்தவ மதத்திலே தொடர்ந்து இருக்க முடியாது திரும்பவும் மதம் மாறினர். புலவர் வாழ்க்கையை நோக்கின், அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட வறுமைப்பிணியும், கஷ்டநஷ்டங்களும் அவரது சுற்றத்தவரை மதம்மாற்றவைத்த போதும், புலவர் மிகமனவுறுதியுடன் நின்று தம் பாரம்பரிய பண்பாட்டையே பேணி மதம்மாறாது இருந்தார். பாவலர் மதம்மாறியதன் விளைவாகத் தம் சமுதாய இருப்பையே கேள்விக்குறியாக்கிக் கொண்டார். இதன் பயனாக அவர் சீர்திருத்த உணர்வு புலவரைவிட அவரைத் தீவிர சமுக சீர்திருத்தவாதியாக்கி இருக்கலாம். அல்லது தாம் மதம் மாறிய செய்கைகளால் தமது பாரம்பரிய பண்பாட்டிற்குத் தாம் தவறிழைத்து விட்டோம் என்ற ஒரு உணர்வு அவரை மீண்டும் மீண்டும் சமுதாயச் சீர்கேடுகளை நோக்கவும் அவற்றைத் திருத்தவும் தூண்டியிருக்கலாம். இதனாற்றான் புலவர் பாடல்களை விட பாவலர் பாடல்கள் அதிகமாகச் சமுதாய சீர்திருத்தக் கருத்தை பிரதிபலிக்கின்றன. மேலே ஆய்வு செய்யப்பட்ட பகுதிகளில் இவ்வம்சாவளிகள் அங்காங்கே பிரதிபலிப்பதைக் காணலாம்.

முடிவாக இவ்வாய்வு ஈழத்துத் தமிழ்க் கவிதைத் துறையிலே பாவலர் - புலவர் அவர்கள் செய்த பங்களிப்பைக் காட்டுகிறது. இவ்வகையில் முதலாம் அத்தியாயத்தில்

எழுத்தைத் தமிழ்க் கவிதை இலக்கியத்தினை பற்றி அவர்கள் காலப்பின்னணியுடன் நோக்கப்பட்டது. இரண்டாம் அத்தி-யாயத்தில் பாவலர் - புலவர் அவர்களது பாடல்பிரதிபலித்த சமூதாயம் பற்றி விபரிக்கப்பட்டது. மூன்றும் அத்தியாயத்தில் அவர்களது பாடல்கள் பிரதிபலித்த சமுதாயச் சீர்திருத்தம் ஏடுத்து நோக்கப்பட்டது. இறுதியாக நான்காம் அத்தியா-யத்தில் அவர்களது கவிதைகள் செம்மை செய்யப்பட்டது. இக்கவிஞர்கள் கட்டியமை நன்னெறிமரபும் தமிழ்மக்களும் பாரம்பரியக் கலாச்சாரத்தைப் பேண அவர்கள் ஏடுத்த முயற்சிகளும் பாவலர் - புலவர் அவர்களுக்கு; எழுத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கும் கவிஞர்கள் முத்தியிற், சிறந்த இடத்தை வகித்து நிற்கின்றனர்.

நூல் விபரப் பட்டியல்

நூல்	ஆசிரியர்	வெளியீடு	பதிப்பு
1. 'அடியும் முடியும்'	- க. கைலாசபதி.	பாரிநிலையம் சென்னை	1970
2. 'ஆறுமுகநாவலர்'	- சி. கணபதிப்பிள்ளை.	தென்மராட்சி பாராட்டு விழாச்சபை	1979
3. 'ஆறுமுகநாவலர் சரித்திரம்'	- கைலாசபிள்ளை. த.	-	-
4. 'இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்'	சி. மௌனகுரு —மௌ. சித்திரலேகா — எம். எ. நு. மான்	வாசகர் சங்கம்.	1979
5. 'இலக்கியத் தென்றல்'	- சு. வித்தியானந்தன்.	தமிழ் - மன்றம் கல்லூரி கண்டி	1953
6. 'இலங்கைப் பத்திரிகையின் தோற்றமும் வளர்ச்சியும்'	- ஆ. சிவநேசச் செல்வன்.	-	1975
இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாக முதுகலைமாணிப் பட்டத்திற்கான ஆய்வுக்கட்டுரை. 1975.			
7. 'இலங்கையில் இன்பத்தமிழ்'	- க. பெ. இரத்தினம்.	கேசரி வாணி புத்தகநிலையம் - யாழ்ப்பாணம்	1956 - 1959
8. 'இலங்கை வளமும் தாலவிலாசமும்'	- த. சோமசுந்தரப்புலவர்.	-	-
9. 'இன்றைய இலக்கியம்'	- அ. ச. நானசம்பந்தன்.	இலக்கியக் - கழகம் சென்னை.	1961
10. 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி'	- கனக செந்திநாதன்.	அரசவெளியீடு.	1964
11. 'ஈழத்துத் தமிழ்க் கவிதைக் - களஞ்சியம்'	- ஆ. சிதாசிவம்.	-	-
12. 'ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள்'	- க. அருணாசலம்	-	1974
இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாக முதுகலைமாணிப் பட்டத்திற்கான ஆய்வுக்கட்டுரை. 1974.			
13. 'ஈழத்தமிழ் வரலாற்று நூல்கள்'	- சி. பத்மநாதன்.	பேராதனை.	1972
14. 'ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள்'	- மு. கணபதிப்பிள்ளை.	-	-

நூல்	ஆசிரியர்	வெளியீடு	பதிப்பு
15. 'ஈழமும் தமிழும்'	– அ. செல்வநாயகம்.	சென்னை	1963
16. 'ஐரோப்பியர் பார்வையிலே இலங்கை'	– நா. மயில்வாகனம்.	மறைவுற்ற அச்சகம் யாழ்ப்பாணம்.	1974
17. 'கங்கையும் காவிரியும்'	– ரகுநாதன்.	ஸடார் பிரசுரம் சென்னை.	I – 1966 II – 1969
18. 'கடவுள் ஒரு கற்பனையே'	– ஈ.வே. ராமசாமி.	திருச்சி பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்.	1971
19. 'கவியரசர் பாரதி'	– ப. அருணாசலம்.	தமிழ்ப்புத்தகாலயம் சென்னை.	I – 1966 II – 1976
20. 'கவாயோகி. ஆனந்தக் குமாரசுவாமி'	– க. அம்பிகைபாகன்.	வடகர் வெளியீடு யாழ்ப்பாணம்	1978
21. 'சமுதாய நோக்கு'	– சாஸ். இளந்திரையன்.	தமிழ்ப்புத்தகாலயம் 576, வைகோப்டன் ரோடு சென்னை. 6	1970
22. 'சாதியை ஒழிக்க வழி'	– பி. ஆர். அம்பேத்கார்.	திருச்சி பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்.	1971
23. 'சிங்தனைச் சோலை'	– தெ. அ. துரையப்பாபிள்ளை.	மதனகுணக் கோமுனி யொன்விடா ரிஸியர் சிறப்பு மலர்.	1960
24. 'சிறுவர் செந்தமிழ்'	– க. சோமசுந்தரப்புலவர்.	–	–
25. 'தந்தையார் பதிற்றுப்பத்து'	– க. சோமசுந்தரப்புலவர்	–	I – 1933 II – 1961
26. 'தமிழ் இலக்கியத்தின் ஏடுத்- காட்டுகளின் பெருமையற்சிகள்'	– பொ. பூலோகசிங்கம்	–	–
27. 'தீராவாத படகி'	– கணக. செந்திநாதன்.	யாழ் இலக்கிய வட்டம் யாழ்ப்பாணம்.	1972
28. 'நாமகள் புகழ்மாலை'	– க. சோமசுந்தரப்புலவர்.	–	–
29. 'நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் ஆக்கங்கள் பற்றி ஒரு மதிப்பீடு'	க. வேங்கதர்.	–	1974

இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனைவளாக முதுகலைமாணிப் பட்டத்திற்கான ஆய்வுக்கட்டுரை. 1974.

30. 'பாவலர் சரித்திர தீபகம்'	– பொ. பூலோகசிங்கம்.	தமிழ்ச்சங்கம் கொழும்பு	1975
31. 'பாரதியார் கவிதைகள்'	–	–	–
32. 'பாரதிதாசன் ஓர் புரட்சிக் கவிஞன்'	– மர். செல்வராஜன்	–	1974.

கலாநிதிப் பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் அளிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை. 1974.

நூல்.	ஆசிரியர்	வெளியீடு	பதிப்பு.
33. 'பாரதிபாகீ'	– DR. கா. மீனாட்சிசுந்தரம்.	இளங்கோ.	1972
34. 'பாரதியும் பாரதிதாசனும். ஓர் ஒப்பியல் அறிமுகம்'	– DR. B. சக்தீவி.	–	–
35. 'புதிய தமிழ்க் கவிதை'	– சாலை. இளந்திரையன்.	தமிழ்ப்புத்தகாலயம் சென்னை.	1966
36. 'புறநானூறு மேலும் உரையும்'	– அவ்வை சு. துரை. சாமிப்பிள்ளை.	சென்னை.	1962
37. 'மருதனஞ்சவோட்டமும் புலவர் வரலாறும்'	– வே. க. ப. நாதன்.	கொழும்பு.	–
38. 'யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்'	– கா. இந்திரபாலா	யாழ்தொன்பொருளியற் கழக வெளியீடு.	1972
39. 'யாழ்ப்பாணப புலவர்கள்'	– புலவர். நடேசச் முதலியார்.	தமிழகவெளியீடு	1975
40. 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி'	– க. வேலுப்பிள்ளை.	–	–
41. 'யாழ்ப்பாண வைபவ மாலை'	– மயில்வாகனப்புலவர்.	சரஸ்வதி புத்தக சாலை. கொழும்பு.	1953

TITLE	EDITOR	PRESS	EDITION
1. 'A HISTORY OF TAMIL LITERATURE'	T.P. MEENKSHI SUNDARAM	ANNAMALAI UNIVERSITY.	1965
2. 'ALAVEDDY TEMPERANCE ASSOCIATION SONGS FOR THE ANNUAL PUBLIC MEETING'	T.A. THURAIAPPAPILAI		1917
3. 'JAFFNA HISTORY'	M.A. PILLAI	THE NAVALAR PRESS-JAFFNA.	1915
4. 'NATIONALISM A RELIGION'	CARLTON. J.H. Hayes.	THE MACMILLAM COMPANY - NEW YORK.	1960
5. 'NATIONALISM ITS MEANING AND HISTORY'	HANSKOHN.	D VAN NESTRAND Company - LONDON	1965
6. 'SOMASUNDRAPULAVAR OF NAVALIYUR - JAFFNA.'			
7. 'THE BRITISH PREIOD OF THE HISTORY OF JAFFNA.'	MUDALIYAR. C. RAMANAYAKAM.		
8. 'THE KINGDOM OF JAFFNA'	S. PATHMANATHAN.	CEYLON NEWS. PAPERS Ltd. COLOMBO	1978

சஞ்சிகைகள்

நூல்.	ஆசிரியர்.	வெளியீடு	பதிப்பு.
1.			
1. 'இந்து சாதனம்' –	தி. கைலாசபிள்ளை.	ரைவப்பிரகாச அச்சியந்திரசாலை யாழ்ப்பாணம்	1889
2. 'இளந் தென்றல்' –	C.K. சண்முகராஜா.	தமிழ்ச் சங்கம் கொழும்பு.	1971–72
3. 'எடிகேசரி வெள்ளிவிழா மலர்.'	–	SILVER JUBILEE NUMBER.	1956
4. 'கலைக்கழஞ்சியம்' – தொகுதி – 4 தொகுதி – 5	–	–	–
5. 'கழக ஆட்சியாளர், தாமரைச்செல்வர். வ. சுப்பையா பிள்ளை பவள விழா மலர்'	–	கழகவெளியீடு.	1973
6. 'தேசிய ஒருமைப்பாட்டு மகாநாட்டு மலர்'	–	–	1975
7. 'நாவலர் நூற்றாண்டு மலர்'	–	மதிவாணி ஆழ்வார்நாவலர் சபை – வெளியீடு – யாழ்ப்பாணம்	–
8. 'நான்காவது அகிலத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நினைவுமலர்.'	–	–	1974.
9. 'நாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழாமலர்'	–	நூற்றாண்டுவிழாச் சபை வெளியீடு	1972
10. 'மல்லிகை' –	டொமினிக் ஜீவா.	கலை இலக்கிய மாத இதழ்	1972.

திருமதி. மோனிகாதேவி குருபரிவுக்கம்

குருக்கள் மடம் திருச்சி

தமிழ் இலக்கியக் கலைக்களஞ்சியம்

(1982. இயற்கை பற்றியது)